"விடுதலை"

(நாளிதழ்)

"உண்மை"

(மாதஇதழ்)

சந்தாதாரராகுங்கள்.

"விடுதலை"		"உண்மை"	
ஆண்டு சந்தா	48-00	ஆண்டு சந்தா	3-00
அரை ஆண்டு	24-00		
காலாண்டு	12-00		

திராவிடன் அச்சகம், சென்னை-7

கதம்பம்



C.N. அண்ணாதுரை M.A.

எமது வெளியீடுகள்

அனார்கலி 140

கலைஞர் கருணாநிதி

தாய்மை 140

கலைஞர் கருணாநிதி

இதுதான் கல்யாணப்பரிசு 140

A. V. P. ஆசைத்தம்பி M.L.A.

பாரீஸ் கூனன் அச்சில்

விக்டர் ஹ்யூகோ

தமிழில். வல்லிக்கண்ணன்

மற்றும் எல்லாவிதமான புத்தகங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் எம்மிடம் கிடைக்கும்.

வெளியிடுவோர்:-

கே. ஆர். நாராயணன்

2/87, டாக்டர் பெசண்ட் ரோட்

சென்னை-14.

JACKET PRINTED AT JAMALIAH PRESS, MADRAS-14.

கதம்பம்

C. N. அண்ணதுரை M. A.

வெளியிடுவோர்:-
கே. ஆர். நாராயணன்
சென்னை-14.

அறிஞர் அண்ணு அவர்களின் அனுமதியின் பேரில் தனித் தனியாக வெளிவந்த புத்தகங்களை ஒன்ருகத் திரட்டி வெளியிட்டிருக்கிறேம்.

பதிப்பாளர்.

தமிழ்நாட்டு மக்களின் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய ஒப்பற்ற நூல். உயர்ந்த கதைகள்.

28/4/57.

கதம்பம்

அறிஞர்

C. N. அண்ணுதுரை, M.A. (M.L.A.)

வெளியிடுவோர்:

கே. ஆர். நாராயணன்

2/87, டாக்டர் பெசண்ட் ரோட்

சென்னை-14

முதற் பதிப்பு: ஏப்ரல் 1957

விலை ரூ. 1—8—0

124.

அச்சிட்டோர்:- ஜமாலியா பிரஸ், சென்னை-14

தங்கத்தின் காதலன்

★

"என்னுடைய ஜாதி எங்கேதெரிகிறது! காதலரே' நீர் என் கண்களிலே ஏதோ உமது உள்ளத்தை சொல்கிறீர். என் உதட்டை கோவை கனி என கூறுகிறீர். பவளவாய்! முத்து பற்கள்! பசும் பொன்மேனி! சிங்கார நடை! கோகிலகுரல்!கோமளவல்லி! என்று கொஞ்சுகிறீர். அப்போது என் ஜாதி எங்கேயாவது உமது கண்களில்பட்டதா? என் அழகும் அதை விட என் இளமையும் உம் கண்களுக்குப்பட்டதே தவிர என் ஜாதி எங்கே தெரிந்தது. நீர் என்னை காதலித்தீர். நான் அந்த கட்டிலே அகப்பட்டேன். நீர் ஏதேதோ படித்தவர். ஆகவே உமது காதலை ரசமாக பேசினீர், எனக்கு படிப்பு அவ்வளவாக இல்லை. ஆகவே நான் உம்மை எவ்வளவு காதலிக்கிறேன் என்பதை எடுத்துக் கூறவில்லை.

,,ஆம்! நான் பேசவில்லையே தவிர, என் கண் பார்வை அதை விளக்கவில்லையா! உம்மை நோக்கும் போது அந்தக் கண்கள் எவ்வளவு பசியோடு பார்த்தன. உம்மைக் கண்டவுடன் பசி எவ்வளவு விரைவில் தீர்ந்து விட்டது, நீர் என் மீது காட்டிய பிரேமையைக் காணும் போது என்நெஞ்சு எவ்வளவு துடித்தது! என் மார்பு எவ்வளவு படபடவென அடித்துக்கொண்டது- "உனது

புன்னகை எனக்கொரு பூந்தோப்பாகவன்றே இருந்தது. உமது மொழி எனக்கு கற்கண்டாக இருந்தது. உமது ஸ்பரிசம் என்னை களிப்பு கடலில் கொண்டுபோயல்லவா ஆழ்த்திற்று! காதல் எனும் சுவையை எனக்களித்த கண்ணாளா, நீயே எனக்கு காதலையும் தருகிறாய். என்னை தழுவிய கரங்கள் இனி என் பிணத்தைத்தான் தழுவும். அதுவும் ஊரார் அனுமதித்தால் என்னைக் கட்டில்மீது தூக்கிப் போட்டு கலகலவென நகைத்த நீர், இனி என்னை சவக் குழியில் தள்ளி,சரசரென மண்ணை தூவவேண்டும். "உம்மால்தான் உலகைக் கண்டேன். உம்மாலேயே இழக்கிறேன்"

உமது காதலியாகவே

கடைசிவரை இருந்த, இறந்த;

தங்கம்

கடிதத்தைப் பொன்னம்பலம், சரியாகக்கூடப் படித்து முடிக்கவில்லை, அவன் கண்களிலே நீர்த் துளிகள் ஆடின.நெற்றியிலே வியர்வை! நெஞ்சிலே பதைபதைப்பு நிலை கலங்கினான் இளைஞன். நாற்காலியோடு கீழே சாய்ந்தான், மயக்கமானான். அவனுக்கு அன்றுதான் மணமாயிற்று பெரியகுடிப் பெண். கொஞ்சம் அழகும்கூட. அதைவிட் அதிகமான செல்வம்! அவனை சீமைக்குபடிப்புக்குஅனுப்பபணம் தரப் பெண்வீட்டார் முன் வந்தனர். பொன்னம்பலம் பி. ஏ. இனி மிஸ்டர் பொன்னம்பலம். ஐ. சி. எஸ். ஆகவேண்டும் என்பதும் கந்தசாமி பிள்ளையின் மகன் "கதம்பம்" கலெக்டரின் மனைவியாகவேண்டும் என்பதும் பெண் வீட்டாரின் எண்ணம். அவர்களுக்கு பொன்னம்பலம், தங்கம்

என்ற உபாத்தியாயினியிடம் நேசமாய் இருந்தது தெரியும். தங்கம் கதம்பத்தைக் காட்டிலும் அழகி என்பதும் தெரியும் பொன்னம்பலம்யார் என்னசொன்னாலும் தங்கத்தைத்தான் மணம்செய்து கொள்வான் என்று அவர்கள் பயந்த காலம் உண்டு. தங்கம் இவர்கள் ஜாதி அல்ல. அவள் ஒரு அபலை. யாரோ பெற்றார்கள், யாரோ வளர்த்தார்கள். எப்படியோ ஏழை விடுதியில் சேர்ந்து படித்து உபாத்தியாயினி ஆனாள். ஏனோ ஆண்டவன் அவளுக்கு அவ்வளவு அழகை, பொன் போன்ற குணம் படைத்த பொன்னம்பலத்தைக்கூட மயக்கிவிடக்கூடிய அவ்வளவு அழகைக் கொடுத்தான். பொன்னம்பலம். கர்லம் சென்றதாண்டவர்ாயபிள்ளையின்ஒரேமகன். மிராசுதார் ஊர் பூராவிற்கும் அவர் வீடு சத்திரம்போல் இருந்தது. பொன்னம்பலம் படித்துக்கொண்டிருக்கையில், பருவத்தின் சேட்டைகளில் ஈடுபடாமல் இருந்தான். உணர்ச்சியோ, சந்தர்ப்பமோ இல்லாததால் அல்ல! ஊரார் தம்மிடம் வைத்திருக்கும் 'மதிப்பு' கெட்டு விடுமே என்பதற்காகவே உணர்ச்சியைக்கூட அடக்கிக் கொண்டு இருந்தான். ஏதாவது மனதை மயக்கும்காட்சிகள் காண நேரிட்டாலும் "சேலை கட்டிய மாதரை நம்பலாகாது" என்ற பாட்டை உச்சரித்துக்கொண்டே தன் வழியே போய் விடுவான். இவனுடைய பி. ஏ. வகுப்பின்போதுதான். தங்கம், அந்த ஊர் பெண் பள்ளியில் ஆசிரியராக வந்தது எப்படியோ இருவரும் சந்திக்க நேரிட்டது. அன்று என்னமோ பொன்னம்பலத்திகுற் வழக்கமாக வரும் பாட்டு வரவில்லை. அவன் தங்கத்தை பார்த்தான். அவள் கண்களை கண்டான்! ஏதோ ஒரு வித உணர்ச்சி மயக்கம் வந்தது. தங்கம் தன்வழி சென்

ருள் பயத்துடன். அவளுக்கு பொன்னம்பலத்தை தெரியும். ஆகவேதான், ஊரார் என்ன சொல்லுவார்களோ என்ற அச்சம், பள்ளிக்கூடத்திலேயே, ஆசிரியைகள் அதற்குள், தங்கத்தைப் பற்றி பொருமை கொண்டிருந்தார்கள், "தங்கம் தளுக்குக்காரி! கூந்தலேப்பார் எத்தனை கோணல்!" என்பாள் ஒரு ஆசிரியை,

"கோணல் அல்லடி கோமளம்! கர்ல்ஸ்—மாடர்ன் பேஷன்!" என்பாள் பிறிதொருமாது, உண்மையில் அது கர்ல்சுமல்ல, பேஷனுமல்ல! இயற்கையாக வளர்ந்து, கருத்து, மினுக்கி, சுருண்டு, அடர்ந்த கூந்தல் தங்கத்துக்கு! அதை கண்டு மற்ற பெண்கள் கண்ணுடி முன் நின்று கொண்டு கைவலிக்க சீவித்தான் பார்த்தார்கள். அந்த "சுருள் அழகு" அவர்களுக்கு வரவில்லே. அந்த வயிற்றெறிச்சலால் வம்புபேசலாயினர் தங்கமும் இவற்றை நன்கு அறிவாள். தன் அழகை பரிமளிக்க செய்ய பணம் இல்லே என்பதும், தன்னை சமூகத்தில் அறிமுகப் படுத்தி வைக்க 'நல்ல ஜாதி' தனக்கு இல்லே என்பதும் தெரியும். ஆகவே தங்கம் சற்று ஒதுங்கியே வாழ்ந்து வந்தாள். மாதம் முப்பது ரூபாய் கிடைத்தது பள்ளியில்.

முனியம்மா என்ற மூதாட்டி வீட்டு காரியங்களே கவனித்து கொண்டாள்.

தங்கத்தின் 'பொல்லாத வேளேயோ' என்னமோ, இதே முனியம்மாள் தான் பொன்னம்பதத்தை தூக்கி வளர்த்து வந்தாள் அந்த காலத்தில், அவள் சொல்லித்தான் தங்கத்திற்கு பொன்னம்பலத்தை தெரியும். "நீ என்ன ஜாதியனம்மா" என்று கேட்பாள் மூதாட்டி.

"ஆயா, நான் பெண் ஜாதி என்று தங்கம் கூறுவாள்." யாருக்கு பொன்னம்பலத்திற்கா? என்று குத்தலாக கிழவி கேட்பாள், கேட்டதும் அவளுடைய பொக்கை வாயைப் பிடித்து இடிப்பாள் தங்கம் புன் சிரிப்புடன்.

ஒரு முறை சந்தித்த, பிறகு பல முறை சந்தித்தாகி விட்டது இருவரும், புன்னகைகள் அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் போய், போய் வந்தன. கண்கள் தமது கடமையை குறைவறச்செய்துவிட்டன. காதல் முற்றிவிட்டது. மனம் உண்டானுல் மார்க்கமா உண்டாகாது. தங்கத்தின் அழகு, பொன்னம் பலத்திற்கு பாதையை காட்டிவிட்டது. இருவரும் வீணேயும் நாதமும் ஆயினர். கரையில்லா களிப்பு! எல்லேயில்லா இன்பம் ஈடில்லா மகிழ்ச்சி! தங்கமும் பொன்னும் ஒன்றுதானே! இருவரும் ஒருவராயினர். ஊர் ஒன்று இருக்கிறதே; வம்பளக்க, என்ன சார், நம்ம பொன்னம்பலம், அந்த வாத்தியார் பெண் இருக்காளே அந்த வீதி வழியாக அடிக்கடி போகிறுன். என்று ஆரம்பான வம்பளப்பு, "யார் என்ன சொன்னுலும் கேட்க மாட்டேன் என்கிறுனும் தங்கத்தை தொட்ட கையால் வேறெருவளே தொடமாட்டானுமே! அவள் கர்ப்பங் கூடவாம்!! என்று வந்து முடிந்தது. உள்ள படி பொன்னம் பலத்திற்கு உறுதி அவ்வளவு இருந்தது. காதல் உலகில் குடியேறி இருவரும் ஒருவரை ஒருவர் பிரிவதே இல்லே என்ற முடிவிற்குத்தான் வந்தனர்.

அவர்களின் காதல் கனிந்தது. தங்கம் கர்ப்பவதியானுள். இன்னும் 1 மாதத்தில் காதலின் விளைவு,

களிப்பின் உருவம் பிறக்க போகிறது. அங்கிலேயில் தான் பொன்னம்பலத்திற்கு பெண் கொடுக்க வந்து சேர்ந்தார் கந்தசாமி பிள்ளை, அவர் பொன்னம் பலத்தின் மாமன்! குடும்பத்தின் திக்கு!

பொன்னம்பலம் ஏதேதோ சொன்னான். முறைத்தான். முடுக்கினான். தங்கம் காப்பவதி என்பதை கூட சொல்லி விட்டான். கந்தசாமி பிள்ளை ஒன்றை கூட காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "ஏதோ நடந்தது நடந்து விட்டது. நீ ரொம்ப நல்ல பிள்ளை, என்று தான் எண்ணியிருந்தேன். எப்படியோ அந்த பெண் உன்னை மயக்கி விட்டாள், போகட்டும் அவளுக்கு 1 ஆயிரம் ரூபாய் கொடுத்து விடுகிறேன், அடுத்த ஊர் பள்ளிக்கு மாற்றி விடுகிறேன்." என்று கந்தசாமி பிள்ளை கூறினார்.

'முடியாது' என்றான் பொன்னம்பலம், மாமன் தன் மீசையை முறுக்கினான். ஒரு சிரிப்பு சிரித்து கொண்டே ஒரு கடிதத்தை நீட்டினான் பொன்னம்பலத்திடம். வாங்கி படித்ததும், பொன்னம்பலத்தின் முகம் கருத்து விட்டது. பயங்கரமான நடுக்கம் ஏற்பட்டு விட்டது, பேச நா எழவில்லை.

மாமனை நோக்கியபடியே நின்றான்.

என்ன சொல்லுகின்றாய் சம்மதந்தானே என்று மாமா கேட்டார். ஆமென தலையசைத்தான் ஆபத்தில் சிக்கிய பொன்னம்பலம். மணம் நடந்தது. தங்கமும் அன்றுதான் ஒரு பெண் மகவை பெற்றாள், அது தங்கத்தின் வயிற்றில் உதித்த வைடூரியமாய் பிரகாசித்தது.

ஒரு கடிதத்தை எழுதி, முனியம்மா மூலம், பொன்னம்பலத்திற்கு அனுப்பினாள் தங்கம்.

அந்த கடிதம் தான் மேலே தீட்டப்பட்டது. அதை படித்த பொன்னபலம் மூர்ச்சையாகி கீழே விழுந்தான். கடிதத்தை தந்து விட்டு சென்றாள் கிழவி. தங்கம் பிணமாக தொங்குவதை கண்டாள். ஒரு முழக்கயிறு, தங்கத்தின் அழகை, இளமையை, வாழ்கையை அப்படியே பாழாக்கி விட்டது. பாழாப்போன கயிற்றுக்கு கண்ணில்லை, தங்கத்தின் அழகையும், இளமையையும் நோக்க! அந்தோ இறந்தாளே இளமங்கை! காதல் பாதையில் சென்றவள், காதல் என்ற குழியில் விழுந்தாள்.

"லேடிஸ் அண்டு ஜென்டில்மென்! இன்றைய தினம், நாம் இந்த ஊரில் எதற்காக கூடியிருக்கிறோம்? இந்த விபசாரதடை சட்டத்தை சரியானபடி அமுல் நடத்தவேண்டும் என்பதற்காக, அதை பொதுமக்கள், பிரபலஸ்தர்கள், படித்தவர், ஒரு கமிட்டியாக இருந்து தமது கடமையை செய்யவேண்டும், என்று நான் உங்களை கேட்டு கொள்கிறேன் (கைதட்டல்) கை தட்டி விட்டால் மட்டும் போதாது. காரியத்தில் காட்ட வேண்டும் என்று கலெக்டர் பொன்னம்பலம் அழகாக பிரசங்கம் செய்தார். கூட்டத்திலிருந்த தலைப்பாகைகள் எல்லாம், கலெக்டர் தங்களை பார்க்கும் போது கை தட்ட வேண்டும் என்பதற்காக தயாராக கைகளை சேர்த்து வைத்தபடியே இருந்தன இது இருபது வருஷங்களுக்கு பிறகு! பொன்னம்பலம் இடையில் சீமைக்கு போய் ஐ. சி. எஸ், தேறி, பல இடங்களில் கலெக்ட

ராக இருந்து விட்டு தலை மயிர் கூட சற்று நரைத்து விட்டு, தஞ்சாவூரில் கலெக்டராக வந்த சமயத்தில், விபசார சட்டத்தை அமுலுக்கு கொண்டு வர நகர பிரமுகர்களை கொண்ட ஒரு கமிட்டி நிறுவப் பட்டது அந்தகூட்டத்தில் தலைமைவகித்துதான்கலெக்டர்பொன்னம் பலம், இதை பேசினார். விபாசாரத்தால் வரும் கேடு, சமூகத்தில் அதனால் விளையும் ஆபத்து என்பதை பற்றி பலர் பேசினர், அவர்களில் அநேகர் அன்றிரவே தமதுவைப்பாட்டிமாரிடம்விபசாரத்தின் கேட்டைபற்றியும், அதை தாங்கள் ஒழிக்ககங்கணம்கட்டிகொண்டதைபற்றியும்பேசுவார்கள் என்பதென்னமோ நிச்சயம் பலர் பேசி முடிந்தபிறகு ஒரு இளமங்கை எழுந்தாள். அவள் அழகாக இருந்ததுடன் சற்று அவசரக்காரிபோலவும் இருந்தாள். ஆங்கிலம் படித்தமாது என்பதும், சற்று நல்ல நிலையில் இருப்பவள் என்பதும், நடையிலும் உடையிலும் விளங்கின,

"தலைவர் அவர்களே, பெரியோர்களே! விபசாரம் ஏன் ஏற்பட்டது என்பதை பற்றி யோசித்து ஆராய்ந்தாலன்றி, அதனை ஒழிக்கமுடியாது. விபசாரம் நடக்கும் இடத்தை மட்டும் தான் மாற்ற முடியும் விபசாரம் உண்டாவதற்கு காரணம் ஏழ்மை முதலாவது. ஆனால் அது மட்டும்தான் என்று எண்ண வேண்டாம் பண ஆசைகூட விபசாரம் செய்யும்படி தூண்டும் அதோடு, ஆடவரின் ஆணவசேட்டைகள் தான் விபசார உற்பத்திக்கே காரணம். இதை கூறும் போது மற்றவர்களுக்கு வருவதை விட, தலைவர் அவர்களுக்கு அதிக கோபம் வரலாம், ஆமாம்! சும்மா என்னை

விறைத்து பார்க்காதீர்கள். காதல் மணங்கள் நிகழ்ந்து, ஜோடிகள் சரியாக அமைந்து, காதலுக்கு ஜாதியோ பீதியோ மற்ற ஏதோ தடையாக இல்லா திருப்பின், உள்ளபடி நாட்டில் விபசாரம் வளராது. மணம் செய்வது, மாடு பிடிப்பது போல இருக்கும் வரை, வாழ்க்கையின் பூரா இன்பத்தையும் நுகரமுடியாது. அதனால் காதல் இன்பம் சுவைத்தறியாத ஆட வரும், பெண்டிரும், காமச் சேற்றில் புரள்கிறார்கள் அதில் விளையும் முட்புதரே, விபசாரம். ஜாதி சனியனை கண்டு மிரண்ட எத்தனையோ பேர் தமக்கு உகந்தவரை மணம் புரிந்து கொள்ளாது, அவர்கள் வாழ்வை கெடுத்து, அவர்களை விபசாரிகளாக்கினர். தலைவர் அவர்களே! உமது தங்கத்தின் மகள் அப்படியே ஒரு விபசாரியானாள். என் செய்வாள் அபலை? உம்மால் காதலிக்கப்பட்டும் மணம் செய்து கொள்ளாது பிணமாக்கபட்ட தங்கத்தின் மகள், நீர் சீமைசென்று நாட்டை ஆளும் வித்தையை கற்றுக்கொண்டிருந்த காலத்தில் ஒரு விபசாரியிடம் வளர்ந்தாள், ஆடல், பாடல் கற்று அவளை ஒரு பிரமுகர் காதலித்து கலந்து வாழ்கிறார். அவளை மணக்க மறுக்கிறார். போகம் வேண்டுமாம் அவருக்கு! பொறுப்பு மட்டும் கூடாதாம், இன்றும் நீர் போகும் கமிட்டி ஜூராக வேலை செய்தாலும் அவளை அசைக்க முடியாது ஏன்? சுந்தரி எனும் அந்தமங்கையை வைப்பாட்டியாக வைத்து கொண்டிப்பது, நீர் நிறுவியுள்ள கமிட்டியின் தலைவர் திருமலை சாமிதான். ஆகவேதான் அவள் அகப்படமாட்டாள். உமக்கு அந்நாள் கவனம் வருகிறது போலும். தங்கம் என்ன ஜாதியோ என்பதால் மருண்டு, யார் பேச்சையோ கேட்டு மயங்கி தங்

கத்தை பிணமாக்கினீர் ஆம்! இன்று நீர் பேசுகிறீர். பொன் போன்ற மொழிகளை ! .... என்று ஆத்திரத்துடன் அந்த பெண் பேசினாள்.

"அம்மா என்னைக் கொல்லாதே! நான் பாதகன். என் தங்கத்தை இழந்தேன். ஆனால் ஜாதியைப்பற்றி கவலை படவில்லை, என் மாமன் காட்டிய பீதிக்குத்தான் பயந்தேன்," என்றார் கலெக்டர்.

"தெரியுமே எனக்கு அதுவும். தங்கம் ஒரு கிறிஸ்தவ மாது. அவளை மணம் செய்து கொண்டால் குடும்பச் சொத்தில் காலணாவும் பெற முடியாதபடி உமது தகப்பனார் உயில் எழுதி வைத்தார். அதைக் காட்டித்தானே உமது மாமன் உம்மை மிரட்டினார். சொத்து போய்விடும் என்ற உடனே நீர் சோர்ந்து விட்டீரே, தங்கம் உமக்கு சொத்தாக தெரியவில்லையோ என்றாள் அந்த மங்கை, "மாதே, என்னை மீண்டும் கொல்லாதே நான் அன்று ஜாதிபேயில் சிக்கினேன், அதனாலேயே என் இன்பத்தை இழந்தேன்" என்று கூறி, கலெக்டர் "தங்கத்தை பற்றியும் என்னைப் பற்றியும் இவ்வளவு தெரிந்துக்கொண்டுள்ள நீ யார்?" என்று கேட்டார். "நான் தான் சுந்தரி!" என்றாள் அம்மங்கை. "ஆ! என் மகளே! தங்கம் தந்தமணியே! உன் தாய் எனக்கு இன்பம் தந்தாள். நீ எனக்கு அறிவு தந்தாய்," என்று கூறி மகளை அருகில் அழைத்து உட்காரவைத்து கொண்டார் கலெக்டர் பொன்னம் பலம், அடுத்த வாரத்தில் மிஸ். சுந்தரத்திற்கும், மிஸ்டர். திருமலை சாமிக்கும், கலெக்டர் பொன்னம்பலம் சுயமரியாதை திருமணம் நடத்தி வைத்தார்.

★

இரும்பாரம்

★

"வரவேற்பு, பிரமாதமாக இருக்கவேண்டும். அலைகடலின் ஆபத்துகளைப் பொருட்படுத்தாது, கண்காணா இடங்களிலே சென்று, நமக்குக் கீர்த்தியையும் செல்வத்தையும் தேடித் தந்த அந்த மாவீரனுக்கு மகத்தான வரவேற்பு நடத்தி, அவன் மனம் குளிரும்படி செய்ய வேண்டும்."

"நானும் அதேதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். அவன் வரலாற்றிலே இடம்பெறப்போகும் உத்தமன். ஊர் மக்கள் அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், களிப்பால் கூத்தாடுகிறார்கள். அவனுடைய ஆற்றலைக்கேட்டு மன்னர்கள் பொறாமைப் படுகிறார்கள். கிடைத்தர்க்கரிய பொக்கிஷம் அவன். அவனால் நமது நாட்டுக்கே தனியான புகழ் ஏற்பட்டிருக்கிறது, அப்படிப்பட்ட, பேருபகாரியை. நாம் பெருமைப்படுத்தவும், பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம். நமது வரவேற்பு இதுவரை இந்த மண்டலத்திலே எவருக்குமே நடைபெறாத விதமானதாகத்தான் இருக்கவேண்டும். அவன் சாமான்யனல்ல. அவன் அடைந்துள்ள வெற்றி வானவில்லல்ல. எக்காலத்திலும் நிலைத்து நிற்கக்கூடிய வெற்றி அது."

"பாவம்! ஊரைவிட்டு, உற்றார் உறவினரைவிட்டு, அலைகடலில், கலத்தில், கடுங்காற்றுக்கும் சுழலுக்கும் கடலிலே தோன்றும் பல்வேறு ஆபத்துக்களுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு, தொலைதூரம் சென்று, இது வரை எவர் கண்ணிலும் படாமல், எவர் கருத்துக்கும் எட்டாமல் இருந்துவந்த பல புதிய பிரதேசங்களைக் கண்டுபிடித்து, அங்கிருந்த காட்டுமிராண்டிகளுடன் கடும் போரிட்டு வென்று அங்கு நம் நாட்டுக் கொடியைப் பறக்கவிட்டு, அந்த நாடுகளை நமது ராஜ்யத்துக்குப்புதியசெல்வமாக்கினன் அந்தவீரன். எவ்வளவுதீரம், சகிப்புத் தன்மை, உழைப்பு, ஆபத்துக்களை எதிர்த்தொழிக்கும் திறமை வேண்டும், இப்படிப்பட்ட காரிய மாற்ற இவன் இணையில்லா வீரன்."

"இலட்சிய புருஷன்! அவனுடைய ஒரே ஆவல்-பிறர் கண்ணுக்குப் படாமல் உள்ள பிரதேசங்களைக் கண்டு பிடிக்கவேண்டும் என்பது. அந்த இலட்சிய சித்திக்காக அவன் தன் உயிரைக்கூட இழக்கச் சித்தமாக இருக்கிறான்."

"மலைமீதேறி மூலிகை பறித்துவரச் சொன்னால், ஏறி இறங்கச் சிரமம் ஏற்படுமே என்பதற்காக, சென்றேன், தேடினேன், அங்கு மூலிகை இல்லை என்று பொய் கூறிவிடும் புல்லர்கள், நம்மைச் சுற்றி ஏராளமாக உள்ளனர்—உண்டு கொழுத்த உருவங்கள்!"

"இல்லை என்று கூறிவிட்டால், வேறு மலை சென்று தேடு என்று கூறுவாரே எனப் பயந்து, தேடிய மூலிகைக்குப் பதிலாக ஏதேனும் ஒரு போலியைக் கொண்டு

வந்து கொடுத்துவிடும் எத்தர்கள் ஏராளம்! நமது **கொலம்பஸ்** போலக் குவலயத்தில் எவரும் இல்லை! அவன் கர்ம வீரன்! அவனை மகத்தான முறையிலே—மன்னர்கள் கண்டு பொறாமைப்படும் விதமாக—மாவீரர்களின் வெற்றி விழாக்களைத் தோற்கடிக்கும் விதமாக—வரவேற்கத்தான் போகிறேன்."

"போகிறோம் என்று கூறுங்கள்!"

"ஆமாம்! வரவேற்போம்."

"தோட்டத்தில் விருந்து! நாட்டியக் கச்சேரி! இசை! கவிவாணர்களின் புகழ்மாலை!"

"இவ்வளவும், இதற்குமேலும் உண்டு. அவனுக்கு வரவேற்பு வைபவம் நடத்தும்போது, நமது சபைக்கு அவனை வரவழைக்கும்போது பொன்னுடையை மேலே விரித்து, அவனை அந்தக் கூரை வழியாக வரச் சொல்ல வேண்டும்!"

"பொன்னுடை அவனுக்கு அளிக்கலாம் என்கிறீரா?"

"அல்ல! அல்ல! பொன்னுடை பலருக்கு அளித்திருக்கிறோம், அவன் நடந்துவரும் வழியிலே, மேலே' வானமல்லவா, கூரையாக இருக்கிறது! அதற்குப்பதில், பொன்னுடையை விரிப்போம்! தங்கக் கூரை! பாபம்! எத்தனை நாட்கள், திக்குத் தெரியாத கடலில், திகைத்துப்போன தோழர்கள் தந்த தொல்லையைச் சமாளித்துக்கொண்டு, அவன், வானத்தை அண்ணாந்து பார்த்து ஆயாசப்பட்டிருப்பான்."

"ஆமாம், வானமே. எனக்கு கூரை! கடலே, என் விளையாட்டு மைதானம்! என்று எண்ணியிருப்பான்."

ஏன்! கடலே. என் கல்லறையோ என்று ஏங்கியுமிருப்பான். இன்பவல்லி! அவன், இந்த வரவேற்பின் போது, அண்ணாந்து பார்க்கட்டும். தங்கத் துகிலை! முகில் கொண்ட வெளியைக் கண்டான்! இன்று பொன்னுடைக் கண்டு பூரிக்கட்டும்"

"சரியான யோசனை! நாதா! நல்ல யோசனை! பொன்னுடை தக்கதுதான்! வரவேற்பு, வைபவமாகத்தான் இருக்கும்."

வரவேற்பு, வைபவமாகத்தான் இருந்தது. பொன்னுடை, வானமென விரிக்கப்பட்டது. பூரிப்புடன், அதன்கீழ் பவனி வந்தான், கொலம்பஸ். இந்த மகத்தான வரவேற்பு நடத்தி, அவனைச் சபைக்கு அழைத்து பக்கத்தில் ஆசனம் தந்து பாராட்டி அவனுடையபெரும் புகழுக்கும், இராஜ முத்திரை பொறித்தனர். ஸ்பெயின் நாட்டு, அரசரும் - அரசியாரும் பெர்டினண்டும் இஸபெல்லாவும் பார்சிலோனா பட்டணத்திலே, 1493-ம் ஆண்டு மார்ச் 15-ந் தேதி, இந்த வரவேற்பு நடைபெற்றது. கொலம்பசின் உள்ளம் குதூகலமடையாதிருக்க முடியுமா! அவன் பட்ட கஷ்டமத்தனையும் பறந்துபோயிற்று!! மன்னனையும் ராணியாரையும் மனமார வாழ்த்தினான். தனது 'சேவை'யை அவர்கள் அவ்வளவு பெரியதாக எண்ணி, தனக்கு உபசாரம் செய்வது, அவர்களின் பெருங்குணத்

தைக் காட்டுகிறது, என்று எண்ணினான். அவனை, மன்னர்மட்டுமல்ல, நாடே வரவேற்றது! அவனுடைய புகழ் அரண்மனையில் மட்டுமல்ல, ஸ்பெயினிலே ஸ்பெயினிலே மட்டுமல்ல; வேறு பல நாடுகளிலும் பரவிற்று.

"நமக்குக் கிடைத்திருக்கவேண்டிய, பாக்கியம். மன்றாடினான் எவ்வளவோ நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைச்சொன்னான். மன்னா! என்னை நம்புங்கள்! மரக்கலமும் கொஞ்சம் பொருளும் கொடுத்து ஆதரியுங்கள். நான், உமக்குப் புதிய புதிய மண்டலங்களைக் கண்டு பிடித்துக் காணிக்கையாக்குகிறேன். கட்டுக்கதையென்று எண்ணிவிடாதீர்! கிடைத்ததைச் சுருட்டிக்கொள்ள, ஏதோ வாயிலே வந்ததைப் பேசுகிறேன் என்று எண்ணாதீர்! என் ஆராச்சியின் முடிவை, உமக்குத் தெரிவிக்கிறேன். என் மனதிலே, பலப்பல நாட்களாக மெள்ள மெள்ள வளர்ந்து, உருவாகியிருக்கும். திட்டத்தைக்கூறுகிறேன். தயக்கம் வேண்டாம். என் தகுதி பற்றியோ திட்டத்தின் தகுதிபற்றியோ சந்தேகிக்கவேண்டாம்—என்று, பலப்பலசொன்னான். நான் நம்ப மறுத்தேன்—யாரோ.ஓர் எத்தன் என்று ஏளனம் செய்தேன்—என் 'மனோராஜ்யத்தை; நீயே ஆண்டு அனுபவித்துக்கொள்— எனக்கென்று ராஜ்யமும் இருக்கிறது, யாரை நம்புவது, எதைச்செய்வது என்பதைத் தெரிந்து கொள்ளும் அறிவும் இருக்கிறது. என்று ஆணவத்தோடு பேசி அனுப்பி விட்டேன். இப்போது எனக்கு வெட்கமாகவே இருக்கிறது, அந்த வீரன் விருதுபெற்றுத் திரும்பினான். பெர்டினண்டு பேருபசாரம் செய்தானாம். பொன்னுடை விரித்தனராம். கொலம்பஸ், அந்த வரவேற்பின் போது, என்னை

எண்ணி ஏளனம்கூடச் செய்திருப்பான். அவன் கண்டு பிடித்த புதிய ராஜ்யம், ஸ்பெயினுக்குச் செல்வத்தை யும் செல்வாக்கையும் தரும்; வியாபாரத்திலேயும் இலா பம் கிடைக்கும், அவ்வளவு தொலைவிலே, ஒரு ராஜ் யத்தை அமைப்பது என்றால், எவ்வளவு இரத்தவ கொட்ட வேண்டும் படை வீரர்கள்! ஸ்பெயினுக்கு, ஒரு இலட்சிய வீரனின் தயவால், ராஜ்யம் புதிதாகக் கிடைத்திருக்கிறது, அங்கே, என்னென்ன செல்வம் கிடைக்குமோ யாரறிவார்கள்! வெற்றி பெற்றகொலம் பசை இலாபமடைந்த பெர்டினண்டு, மேலும் உற் சாகப் படுத்தி, மேலும், பல புதிய இடங்களைக் கண்டு பிடித்து, ஸ்பெயினுக்குத் தரும்படி கூறுவான். ஸ்பா னியக் கொடி பறக்கிறது, அட்லாண்டிக் கடலுக்கு அப் புறமுள்ள தேசத்தில்! என் கொடி பறந்திருக்கவேண் டிய இடத்தில்! ஏமாளி நான், கொலம்பஸ் வந்த போது, விரட்டினேன். பெர்டினண்டு புத்தியுள்ளவன் கொலம்பசைக் கொண்டு, கண்காணு இடத்திலேயும், தன் கொடி பறக்கச் செய் து கொண்டான்'' என் று லே மன்னர்கள் எண்ணி ஏங்கினர்.

கொலம்பசின் கண்களுக்கு, குதூகலத்தோடு வர வேற்கும் மக்கள்—கைலாகு கொடுத்து கௌரவித்த அரசனும் அரசியும், பொன்னுடை, விழா, இவை மட்டுமல்ல—இவைகளைக் கண்டு கொண்டிருக்கும் போதே, மெல்லிய ஓர் திசையில், எங்கு நோக்கினுலும் ஒரே கடல் மயம்! பெரும் புயல்! தாக்கவரும் திமிங் கிலம்! தன்னை எதிர்க்கும் கலத்தாட்கள்! காட்டு

மிராண்டிக் கூட்டம்! —ஆகிய காட்சிகளும்தோன்றின ஒருகணம், அந்தக் காட்சிமட்டுமல்ல, பலரிடம், காகிதச் சுருளையைப் பிரித்து, நேர்க்கோடுகள், வளைவுகள்ஆகிய வற்றைக் காட்டிக் காட்டி விளக்கம் கூறுவது, அதனை அலட்சியமாகக் கேட்டுவிட்டு, ஆணவத்தோடு சிரித்து விட்டு, எடுத்துச்செல் இந்த ஏடுகளை என்று உத்தர விட்டு விட்டுச் செல்லும் சீமான்கள், மன்னர்கள், கை யைக் காட்டி, போகிறுன் பார் பித்தன்! புதிய பிரபஞ் சத்தைச் சிருஷ்டிக்கப் போகிறுனும்!! என்று ஏளனம் செய்வது போன்ற காட்சிகளும் தெரிந்தன—ஆனல் மறுகணம் அவை மறைந்தன—எதிரே, ஸ்பெயின் நாட்டரசரும் அரசியும் புன்னகையுடன் வீற்றிருக்கிறர் கள்—மேலே பொன்னுடை — சூழ நிற்கிறர்கள் வர வேற்பளிப்போர்—விருந்து நடை பெறுகிறது—இவை கள் தெரிந்தன. கொலம்பசின் மனதிலே மகிழ்ச்சி பொங்கிற்று—கண்களிலே, நீர்த்துளிகள் தோன்றித் தவழ்ந்தன.

கொலம்பஸ் வாழ்க! அலைகடலில் அஞ்சாது சென்று புதிய உலகைக் கண்ட வீராதி வீரன் கொலம் பஸ் வாழ்க!—மக்களின் முழக்கம்—பல ஆண்டுகள் பட்ட கஷ்டத்துக்குப் பரிசு! ஆனந்த அறுவடை!!

கனவு காண்கிறுன்! என்றே, நண்பர்கள் கூட எண்ணினர். கொலம்பசின் திட்டம், யாருக்குமே முத லில் நம்பிக்கையூட்டுவதாகத் தான் இராது. அட்லாண் டிக் பெருங்கடலைத் தாண்டி, பெரியதோர் பிரதேசம் இருக்கிறது—திசை தெரியாததாலும் போதுமான

ஆராய்ச்சி இல்லாததாலும் அந்தப் பிரதேசங்களை இதுவரை யாரும் சென்று பார்த்ததில்லை. யாரும் சென்றுபார்க்காததாலேயே, அங்கு ஏதும் இல்லை-என்று முடிவு செய்து விட்டனர். அவர்கள் முடிவு தவறு! நான், அந்தத் தவரை உலகுக்கு விளக்கப் போகிறேன்- அந்தப் புதிய பிரதேசத்தைக் கண்டு பிடிக்கப் போகிறேன் என்று கொலம்பஸ், ஆர்வத்துடன் பேசினன், பெரியவர்கள் கண் சிமிட்டினர்—பெண்கள் உதட்டை அசைத்தனர்—வாலிபர்கள் கைகொட்டிச் சிரித்தனர்.

கொலம்பஸ், மிகச்சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். குறிப்பிடத் தக்க சம்பவம் எதுவும் அவனுடைய இளமையின் போது நடந்ததில்லை. அவன் உள்ளத்திலே. உலகப் போக்கையே மாற்றி அமைக்கக் கூடிய ஓர் திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்று எண்ணும்படியான நடவடிக்கைகளும் அவனுடைய இளம் பருவத்திலே கிடையாது.

அவன் உடன் பிறந்தானெருவன்; **பார்த்தலோமியோ** எனும் பெயருடையான், மரக்கலக்காரருக்கு உபயோகமாகும், படங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான், **லிஸ்பன்** நகரில்.

கொலம்பஸ், ஒருபிரபல இத்தாலியக்கடற்படை அதிகாரியின் மகளைக் கலியாணம் செய்து கொண்டான். அதனல், கடல்மார்க்கம், தொலைவிலுள்ள தீவுகளின் வரலாறு, வாணிபம், போன்ற அறைகளைப் பற்றிய கருத்து வளர வழி பிறந்தது.

இந்த இருதொடர்புகளைக் கொண்டு, உலகம் புகழும் செயலைச் செய்துவிட முடியாது, எனினும், கொலம்பசின் மனதிலே, இந்தத் தொடர்புகளின் காரணமாக, புதிய நாடுகளைக் கண்டறிய வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அதற்கான ஆராய்ச்சியிலீடு பட்டான். எத்தனை இரவுகள் தூக்கம் வராமல் புரண்டானே! எத்தனை நாட்கள். ஊன் மறந்து, உள்ளத்தோடு போராடினனே! அவன் மனதிலே, மாபெருந் திட்டம் உருவாவதற்குள், விவரிக்க முடியாத புயலும் தென்றலும் மாறி மாறிக் கிளம்பித்தான் இருக்கும்.

அசைக்க முடியாத நம்பிக்கை பிறந்துவிட்டது கொலம்பசுக்கு, அட்லாண்டிக் பெருங் கடலைக் கடந்து சென்ருல், புதிய நாடுகளைக் காண முடியும் என்ற நம்பிக்கை. இதனை அவன் முதலிலே கூறியபோது பலரும் நையாண்டி செய்தனர். கொலம்பஸ் மனம் ஒடிந்து போகவில்லை. மேலும் மேலும அதனையே கூறினன், பலரிடம்; பன்னிப் பன்னி, கெஞ்சினன் தன்னை நம்பும்படி; வேண்டிக்கொண்டான், தன் திட்டத்தைப் பரீட்சை பார்க்கும்படி; போடா பைத்தியக்காரா! உள்ள உலகம் போதும்— நீ ஒன்றும் புதிய உலகத்தைக் கண்டுபிடிக்க வேண்டாம்!—என்று கேலி செய்தனர். பயல், பலே அண்டப் புளுகன்! ஆயிரமாயிரம் தடவை கடற் பயணம் செய்தவர்களெல்லாம் கூருததைக் கூறுகிருன், தைரியமாக! அட்லாண்டிக் கடலைத் தாண்டிச் சென்ருல், அற்புதமான பல நாடுகள் உள்ளனவாம்—யாரும் காணுதவைகளாம்—அளக்கிருன் கதை! என்று அலட்சியமாகப் பேசினர், கொலம்பஸ் சலித்துப் போக

விருத்தாசலம்

வில்லை, சொல்லிக்கொண்டே இருந்தான்—கெஞ்சிக் கேட்டுக்கொண்டே இருந்தான்—யாராவது ஒருவர் தன் வார்த்தையிலே நம்பிக்கை கொள்வார்கள் என்ற எண்ணத்தை அவன் கைவிடவில்லை.

அரசுகளை விரிவாக்கிக்கொள்ளவும், செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும், ஆவல் கொண்ட மன்னர்களிடம் சென்றான், கொலம்பசின் திட்டம், வெறும் கனவு அல்லது எத்தனின் ஏற்பகடு—அல்லது பித்தனின் உளறல்—என்றே எவரும் கருதினர்.

ஜினிவா குடியரசுக்காரரிடம் கூறிப் பார்த்தான் போர்ச்சுகல் மன்னரிடம் பேசிப் பார்த்தான்; பிரிட்டிஷ் மன்னனுக்குச் சேதி அனுப்பிப் பார்த்தான்; எங்கும் ஏளனம், அலட்சியம், இவைகளே பதிலாகக் கிடைத்தன.

ஸ்பெயின் அரசரிடம் கூறுவோமென்றெண்ணி பல முறை அவரைக் காண முயற்சித்தான்; சுலபமான காரியமா? கொலம்பஸ் என்ன கொற்றவனா! அரச தூதனா! ஆஸ்தானக் கவியா! இல்லை, ஆடலழகியா! சுலபத்திலே பேட்டி கிடைக்க,

மிகச் சிரமப் பட்டுத்தான் ஸ்பெயின் நாட்டரசன் பெர்டினாண்டை பேட்டி கண்டான்—தன் திட்டத்தைக் கூறினான்,

"மூன்று கலங்கள்! உடன்வரச் சில ஆட்கள்! கொஞ்சம் பொருள்! உமது ஆசி! இவைகளைத் தாருங்கள்—உமக்கு நான் புதிய, பெரிய ராஜ்யத்தைக் காணிக்கையாகத் தருகிறேன்"—என்றான். மன்னனுக்கு எப்படியோ ஓர்வித நம்பிக்கை பிறந்தது. "அங்ஙனமே ஆகுக! நீ, ஏதேனும் புதிய ராஜயத்தைக் கண்டு பிடித்தால், உன்னையே தளபதியாக்குகிறேன்—அந்தப் புதிய ராஜயத்தின் வருவாயிலே, பத்திலோர் பாகம், உனக்குப் பரம்பரையாக அனுபவிக்கும் உரிமை தருகிறேன். வெறுங் கையுடன் திரும்பினால், பரிசுமில்லை..." என்றான் பெர்டினாண்டு. கனவு உலகிலிருந்து நிஜ உலகு வந்தவனானான் கொலம்பஸ்.

கலங்கள் கிளம்பின! கண்களிலே ஆர்வ ஒளி வீசிற்று! கலங்கள் சென்றன, சென்றது. நெடுந் தூரம்—கண்ணிக்கெட்டிய தூரம், கடலேதான்! வழக்கமாக கடற் பயணம் செய்யும்போதும், வாணிபத்துக்காகப் போகும்போதும் காணக் கூடியப் பிரதேசங்களெல்லாம் மறைந்துவிட்டன; எதிரே கடல்! கொலம்பஸ், செல்கிறான், நம்பிக்கையுடன், தொலைவில், பெரியதோர் பூபாகம் இருக்கிறது! வாருங்கள், காட்டுகிறேன்! என் கணக்குப் பொய்யல்ல! என் திட்டம் கனவல்ல! என் முயற்சி வீண் போகாது! என்று ஆவேசத்துடன் பேசுகிறான். கண்ணெதிரே கடலன்றி வேறு காணாத, உடனிருந்தோரின் உள்ளத்தில், சலிப்பு, வெறுப்பு: திகில். கோபம் கொப்பளித்தது.

இவனோர் பித்தன்! என்றனர் அவர்களும்.

அந்தப் பித்தன் மனதிலே மட்டும் இருந்த உலகம் தான், இன்று உலகினர் கண்டு அதிசயிக்கும் அமெரிக்காக் கண்டம்.

எதற்கும் அஞ்சாமல், சென்றான்;

அதோ ஓர் இடம்! தரை! நிலம்! பிரதேசம்! ராஜ்யம்!—ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமான பெயரிட்டுக் கூவினர். களித்தனர். கூத்தாடினர், "பித்தன்! நான் பித்தன்! அல்லவா?" என்று கேட்டது, கொலம்பசின் பார்வை. கொலம்பஸ், தான் கண்டு பிடித்த அந்த இடத்திற்கு, **செயின்ட் சால்வடார்** என்று பெயரிட்டு அங்கு ஸ்பெயின் நாட்டுக்கொடியை நாட்டினான்! வெற்றி தந்த உற்சாகத்தால், மேலும் தொடங்கினான் பயணத்தை! வேறு பல இடங்கள்! புதிய புதிய தீவுகள்! எல்லாம் ஸ்பெயினுக்குச் சொந்தமாக்கினான். ஸ்பானியக்கொடி பறந்தது, ஸ்பெயினுக்கு வெகு தொலைவில்! ஸ்பெயினுக்குப் புதிய புதிய ராஜ்யங்கள் கிடைத்தன—ஸ்பானிய அரசன் காணாத தேசங்கள்! உலகப் படத்திலே அதுவரை குறிக்கப்படாத நாடுகள்! கற்பனைக்கு எட்டாமலிருந்து வந்த தேசங்கள் அங்கெல்லாம் ஸ்பானிஷ் கொடி! அந்த இடங்கள், இயற்கை அழகும் செல்வமும் நிரம்பிய இடங்கள். எதிர்ப்புகள் இருந்தன! கொலம்பஸ், அவைகளைச் சமாளித்தான்.

பிறகு, திரும்பினான்! வெற்றிக்களை முகத்தில் தாண்டவமாட. கண்டுபிடித்த நாட்டுப் பொருட்குவியல் கலத்திலோர் பகுதியில் இருந்தது; அந்த நாட்டு மக்கள் சிலரையும் அழைத்து வந்தான்.

இந்த அற்புதமான வெற்றிக்குப் பிறகு தான், அரசன் பெர்டினண்டும், அரசி இஸபெல்லாவும், கொலம்பசுக்கு மகத்தான வரவேற்பளித்தது. தம்முடன் சரிசமமான ஆசனமளித்து, கொலம்பசைக் கௌரவித்தனர். பொன்னுடையை மேலே விரித்து, அதன் நிழலில் அவன் நடந்து வரும்படி செய்தனர். பல நாடுகளிலே அவனுடைய புகழ் பரவிற்று. அவனைப் பித்தனென்றும் எத்தனென்றும் கேலி பேசியும் கண்டித்தும் வந்தவர்கள், வெட்கினர். வெற்றிவீரனாக விளங்கினான் கொலம்பஸ்.

❋ ❋ ❋

—எவ்வளவு அலட்சியப்படுத்தப் பட்டாலும், ஏளனத்துக்கு ஆளானாலும், எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற திடசித்தமும், விடாமுயற்சியும் இருந்தால் வெற்றி கிடைத்தே திரும். தூற்றினோரே துதி பாடி நிற்பர். ஏளனம் பேசினோர், ஏத்தி ஏத்தித் தொழுவர்! சந்தேகமிருப்பின், கொலம்பசின் இன்றைய நிலையைப் பார். மன்னர், அவனைத் தன் நண்பனென்று கூறி மகிழ்கிறார். ஸ்பானிஷ் மண்டலம் அவனைப் போற்றுகிறது. மானிலமே அவனைப் புகழ்கிறது—என்று பலரும் கூறினர்.

❋ ❋ ❋

கொலம்பஸ், தன் திட்டம் வெற்றி பெற்றதற்குக் காரணம் வேந்தன் தன்னிடம் காட்டிய ஆதரவு தான், என்பதைக் கூறிக் கூறிப் பூரித்தான். ஒருவன் திறமை சாலியாக இருக்கலாம், அபூர்வமான ஆராய்ச்சியாளனாக இருக்கலாம் ஆனால், அவன் வெற்றி

பெற, அந்த வெற்றியினுல் பலரும் நன்மைபெற, யாரே னும் கருணை உள்ளம் படைத்த ஒருவர், அவனுக்குத் தக்க சமயத்திலே 'கை கொடுத்து' உதவ முன் வர வேண்டும்; இல்லையேல் அவனுடைய திறமை, காட்டு மலராகும்—மீட்டு வாரற்றவீணையாகும்—என் 'இன்பக் கனவு' பலித்ததற்குக் காரணம். தக்கார்க்குத் தக்கது செய்யும் தன்மை வாய்ந்த மன்னனின் உதாரம் தான்—என்று எண்ணி மகிழ்ந்தான்.

* * *

பெற்ற வெற்றியுடன் திருப்தி அடையவில்லை—இவை இனிப்பெற வேண்டிய பெருவெற்றியின் அடையாளங்கள் என்று கூறி மீண்டும் மன்னன் ஆணை பெற்று, மரக்கலம் ஏறினுன்—மேலும் பல புதிய நாடுகளைக் கண்டறிய. இம்முறை, கொலம்பஸ் கிளம்பும் போது, அரச குடும்பமே தன்னை ஆசி கூறி வழியனுப்புவது கண்டான்—களித்தான். ஒரு நாட்டு மக்களே நல்வாழ்த்துக் கூறி அனுப்பிடக் கண்டு மகிழ்ந்தான். முதல் தடவை சென்றபோது, ஊர் மக்களின் ஏளனம் சிலருடைய ஆணவம்—மன்னனுடைய சந்தேகம் கலந்த அனுமதி—இவைகளே, கொலம்பசுக்குக் கிடைத்தவை. போகிருன் பிழைக்கத் தெரியாதவன்! என்று பேசினுர் உண்டு; பிழைக்கத் தெரியாதவனு? அவனு? பிழைக்கத் தெரிந்தவன்; அதனுலே தான் புளுகு பேசி, மன்னனையே மயக்கிப் பொருள் பெற்றுக் கொண்டு போகிருன் என்று ஏசினேர் உண்டு; கடற் கொள்ளைக் காரனுகி விடுவான். என்று ஆருடம் கூறினர் சிலர்; கடலுக்குப் பலியாவான் என்று சபித்தனர் சிலர்.

இரண்டாம் முறை, அவன் புறப்பட்டபோதோ, எவரும் ஏளனம் பேசத் துணியவில்லை—எதிர்ப்போர் கிடையாது—அவன் திறமைசாலி, மேலும் பல வெற்றிகள் பெற்றுவருவான் என்று பாராட்டினர். நிலைமை அவ்வளவு மாறியிருந்தது—பெற்ற வெற்றியினுல். கலம் சென்றது—களிப்பு, கொலம்பசுக்கு விருந்தளித்தது. மன்னனும், தன் மண்டலம் விரிவடைவது கண்டு மகிழ்ந்தான். மக்களும், தமது நாட்டுக் கீர்த்தி வளரக் கண்டு களித்தனர். ஆனுல், அனைவருமா? அல்ல! அல்ல! மல்லிகைத் தோட்டத்திலே மணம் வீசினுலும், புதரில் மறைந்திருக்கும் பாம்பின் குணம்மாருதே! அது போல், ஸ்பானிஷ மக்களில் பெரும்பாலோருக்கு, கொலம்பசின் வெற்றி, பெருமையையும் பூரிப்பையும் தந்ததென்ற போதிலும். சிலருக்குக் கோபத்தையும் பொருமையையும் கிளறிற்று. சொன்னபடி செய்து காட்டியே விட்டானே!—என்று எண்ணினர்—கோபம் புகையலாயிற்று. பயலுக்கு, எப்படிப்பட்ட மரியாதை, வர வேற்பு! பொன்னுடையல்லவா, குடையாக அமைந்தது அவனுக்கு, கேட்பாரற்றுக் கிடந்தான்—பித்தன் போல் அலைந்தான்-இன்று பேரரசனின் பக்கத்திலே அமர்ந்தான்!-என்று முணு முணுத்தனர்-பொருமை மூண்டது. இனி மண்டைக் கர்வம் பிடிக்கும் அவனுக்கு! இந்த மண்டலத்து மக்களை அவன் மதிக்கவே மாட்டான்; மன்னனைக் கூட ஆட்டிவைப்பான்!-என்று பேசலாயினர்-கலகத்தை நடமாட விட்டனர். கொலம்பஸ் எந்தத் தீவுக்குச் சென்றுல் எந்தத் தீவு காணலாம், என்ற கணக்கிட்டுக் கொண்டு, கலத்திலே கவலையுடன் உல

விக்கொண்டிருக்கும் நேரத்தில், பொறுமை கொண்டவர்கள், யாரிடம் எந்தவிதமான. கலகமூட்டி. கொலம்பசின் கீர்த்தியைக்கெடுத்து அவனுக்குள்ள செல்வாக்கைக் குலைப்பது, என்பதற்கான திட்டங்களைத் தீட்டலாயினர், கொலம்பஸ் கண்டானா, சுயநலச் சுறு மீன்களும், தன்னலத்திமிங்கிலங்களும், சதிச்சுழல்களும் நாட்டிலே உண்டு, என்பதை. அவன் அகமகிழ்ந்து இருந்தான்-தான்பெற்ற வெற்றி கண்டு அனைவரும் பாராட்டுகிறார்கள் — உடனடியான கீர்த்தி தனக்குக் கிடைத்த போதிலும், உருவானபலனும், நிரந்தரமான கீர்த்தியும் நாட்டுக்குத் தானே கிடைக்கும்-இந்த நற்காரியத்தைச் செய்யக் கிளம்பும் தன் மீது, யாருக்குத்தான், எதற்காகத்தான் நச்சுநினைப்பு ஏற்படப்போகிறது-என்று எண்ணினான். வெற்றிபெற்றதொன்றே போதும், சிலரை விரோதிகளாக்க, என்பதை அறியான். கீர்த்திக் கணவாயிலே நுழையும் போது, காதகர்கள். காரணமின்றிப் பாறைகளை உருட்டி விடுவர், மேலே, என்பதை அவன் அறியவில்லை, நம்மில் ஒருவன் நாம் அடையாத நிலையை அடைவதா என்று எண்ணுபவர்கள் உண்டு. எங்கும் எந்த நாளிலும், என்பதை அவன் அறியவில்லை. கடலிலே அலை இருப்பது போல, சமூகத்திலே, நயவஞ்சகம் உண்டு, என்பதை அறியவில்லை. அவன் கலத்தை மேலும் மேலும் செலுத்திக் கொண்டு சென்றான். நயவஞ்சகர்கள் நாட்டிலே கலகத்தை மெள்ள மெள்ள ஊட்டியபடி இருந்தனர்.

* * *

கொலம்பஸ்; பாக்கியசாலி!

பெர்டினாண்டு ஒரு பெருங்குணவான்-கொலம்பசுக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட்டார்!

ஏறிய ஏணியைக் கீழே தள்ளிவிடும் பேர்வழிகள் உண்டு!

கொலம்பஸ், இனித் தனக்கு ஏணியே தேவையில்லை. நிலை அல்வளவு உயர்ந்து விட்டது என்று எண்ணுகிறான்.

கலத்திலே, அவன் காவலன் போலவே கொலுவீற்றிருக்கிறான்.

காட்டுமிராண்டிகள், கொலம்பசைத்தான், ஸ்பெயின் நாட்டு மன்னன் என்று நம்பிவிட்டார்களாம்.

பயல், சாமார்த்தியசாலி! புதிய பிரதேசங்களிலிருந்து, ஏராளமான நவரத்னங்கள் கொண்டு வந்தான்-மன்னனிடம் ஒன்றைக்கூடக் காட்டவில்லை.

இம்முறையும் வெற்றியுடன் திரும்பினால், பிறகு அவனைக் கையில் பிடிக்கவே முடியாது.

மன்னன்மட்டு மென்ன! மண் பொம்மை தான் இனிமேல்.

அதுபோலவே பேசினானாமே கொலம்பஸ்.

ஆமாம்! குடிவெறியில்!

கொண்டு வந்த நவரத்னங்களிலே சிலவற்றைக் கூத்தாடும் குட்டிகளுக்குக் கொடுத்தானும். ஏன் அவன் விஷயத்தைப் பேசுகிறீர்கள்-அவனுல், ஸ்பெயின் நாட்டுக் கீர்த்தி வளருவதாக மன்னர் எண்ணுகிருர்-அவனே மன்னனின் ஆதரவைப் பயன் படுத்திக்கொண்டு தனது நிலேயை உயர்த்திக்கொள்கிருன்.

சுயநலக்காரன்!

சூதுக்காரன்!

மண்டைக்கர்வி!

பேராசைக்காரன்!

அதிகார வெறியன்!

அகம்பாவககாரன்!

* * *

காட்டிலே. இரவு வேளேகளில் புலி, ஓ நாய், நரி, செந்நாய், காட்டெருமை, முள்ளம்பன்றி, இப்படிப் பலப்பல கிளம்பிச்சுற்றுமல்லவா, இரைதேடி அது போல, கொலம்பஸ் ஊரிலே இல்லாதபோது கிளம்பின மேலே குறிக்கப்பட்ட, விஷப்பேச்சுகள்! ஊரெங்கும் பரவின-பலருடைய உள்ளத்தைக் கெடுத்தன-ஊராள் வோரின் மனதையும் கெடுத்தது. விஷ விவசாயிகள் பூரித்தனர். தொலேவிலே ஏதோ, பச்சென்று தெரிகிறது-புதிய திவாகத்தான் இருக்கும், என்று எண்ணிக் கொலம்பஸ் களித்திருந்தபோது, தங்கள் கலகப்பேச்சு

இன்னின்ன இடத்திலே பரவி, இன்னின்னவரின் மனதைக் கெடுத்து விட்டது. ஆகவே கொலம் பசுக்கு, இந்த அளவு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. என்று கணக்கிட்டுக் களித்தனர், காதகர்.

சில புதிய இடங்களேக் கண்டு பிடித்து, அங்கெல்லாம் முறைப்படி ஸ்பானிஷ் கொடியை நாட்டி விட்டு மீண்டும் ஊர் திரும்பினுன் கொலம்பஸ். பழைய குதூகலம் இல்லே மக்களிடம்! புதியதோர் நிலேயைக் கண்டான்; புன்முறுவல் இயற்கையாக எழவில்லே; பாராட்டுகிருர்கள். ஆனுல் அதிலேயும் ஏதோ கேலியும் தொனிக்கிறது; பார்வையிலே ஓர்வகை பகைமை தெரிகிறது கொலம்பஸ் கவலேப்பட்டான், பிறகு தெரிந்து கொண்டான், தான் இல்லாத போது தன்னலக் காரர்கள் பொல்லாங்குபேசிநிலேயைக் கெடுத்துள்ளனர் என்பதை. அறிந்துகோபம்மூண்டெழுந்தது செ! இவர்களும் மக்களா! எவனே, எதற்கோ ஏதோ பேசினுல் அதைக் கேட்டு நம்பி, நம்மீது கொண்ட அன்பைக் குறைத்துக் கொள்வதா! இவ்வளவுதானு, இவர்களின் குணம்! இதற்கா இவ்வளவு பாடுபட்டோம்!-என்று எண்ணி ஏங்கினுன். மீண்டும் யோசித்தான். பாபம்! அவர்கள் என்ன செய்வார்கள்! நயவஞ்சகர்கள், நம்மீது கொண்ட பொருமையினுல், கட்டிவிட்ட கதைகளே நம்பி ஏமாந்தனர். உண்மை அறியாததால், அவர்கள் உள்ளம் பாழ் பட்டிருக்கிறது, உண்மையை உரைக்க வேண்டும். என்று தீர்மானித்து, கலக மூட்டினேர், தன்னேப் பற்றிக் கூறிய குற்றச்சாட்டுகளே எல்லாம் தவிடு பொடி யாக்கினுன், மக்கள், தங்கள் தவறை உணர்ந்தனர். வீணுகச் சந்தேகித்தோம்-யார் பேச்

சையோ கேட்டுக் கொண்டு கொலம்பசை நிந்தித்தோம்-நயவஞ்சகர்கள் அவனைப் பற்றிச் சொல்லிவைத்த ஒரு குற்றச்சாட்டுக்குக் கூட ஆதாரம் இல்லை என்பது இப்போதல்லவா தெரிகிறது என்ற பேசிக்கொண்டனர். மாசு துடைக்கப்பட்ட மாணிக்கமானுன் கொலம்பஸ். ஆனுல், மக்களின் போக்கும் அந்தப் போக்கை உண்டாக்கிய பொச்சரிப்புக்காரரின் போக்கும் கொலம்பசின் மனதிலே, ஆற்றமுடியாத ஓர் புண்ணை உண்டாக்கிற்று அவனும் மனிதன் தானே!

மீண்டும்கிளம்பினுன் கொலபஸ், ஸ்பெயினுக்குநாடு தேட, புகழ் தேட, ட்ரினிடாட் தீவு, போன்றபலபுது இடங்களைக் கண்டு பிடித்தான்—ஹிஸ்பானியோலா என்ற பிரதேசத்தில், ஸ்பானிஷ ஆட்சியை அமைத்தான்—அங்கு கிளம்பிய எதிர்ப்பை அடக்கினுன்.

காட்டுமிரண்டிகளின் எதிர்ப்பைத்தான் கொலம்பஸ், கடும் போரிட்டேனும் அடக்க முடியும்-கலக மூட்டுவோரின் எதிர்ப்பை என்னசெய்வது! அவர்களோ, ஸ்பெயினில் வேலை செய்கிருர்கள், கொலம்பசோ ஹிஸ்பானியோலாவில் இருக்கிருன்.

ஸ்பெயினில், கொலம்பசுச்கு எதிர்ப்பு, சரியானபடி கிளப்பிவிட்டனர், கலக மூட்டுவோர். சரியான விசையை அறிந்து, அந்தக் காரியத்தைச் செய்தனர்.

எவ்வளவுதான், மன்னர், கொலம்பசைப் பாராட்டினுலும், அவன் திறமையைப் புகழ்ந்தாலும், அவனுடைய சேவையால், தன் ராஜ்யத்துக்குப் புகழ் கிடைத்தது என்று கூறினுலும், உள்ளூர அவர்

மனதிலே, "கொலம்பஸ் இவ்வளவு கீர்த்தி பெற்றது, நமது ஆதரவால்தான்! கொலம்பஸ் புதிய நாடுகளைக் கண்டுபிடித்துக் காட்டினுன். பெருமைக்குறியதுதான்—ஆனுல், கொலம்பசை உலகுக்குக் காட்டியது யார்! நாம்தானே! நாம், அவனுடைய திட்டத்தை அங்கீகரித்து, ஆதரவளித்திருவிட்டால், கொலம்பஸ், பித்தன் போலப் பிதற்றிக் கொண்டு கிடந்திருப்பான். நமது ராஜ்யம் பெரிதாகி இருக்கிறது—ஆனுல் அப்போதும், நாம் ராஜாதானே! அவனே! பித்தனுகவன்ரே இருந்திருக்கவேண்டும்! அவனை உலகு அறியச் செய்தது, நாம் தான்!!" --என்ற எண்ணம் தவழத்தானே செய்யும். அந்த விசையை அறிந்து, பக்குவமாக வேலை செய்தனர். தந்திரம் பலித்தது.

பெர்டினுண்டினுல் கொலம்பசுக்குக் கீர்த்தியா? கொலம்பசினுல் பெர்டினுண்டுக்குக் கீர்த்தியா? யாரால் யார் பலன் பெற்ருர்கள்? பெர்டினுண்டு கிடைத்திராவிட்டால், கொலம்பசுக்கு இந்த நிலை ஏது? கொலம்பஸ் கிடைத்திராவிட்டால், பெர்டினுண்டுக்கு, புதிய ராஜ்யங்கள் ஏது?

கொலம்பஸ், பெர்டினுண்டை மதிக்கிருனு இல்லையா? பெர்டினுண்டு கொலம்பசின் சேவையையும் திறமையையுய் பாராட்டுகிருரா, இல்லையா?

இருவருக்கும் உள்ள தொடர்பு நீடிக்குமா, இடையே அறுந்துபடுமா? கொலம்பஸ் வெற்றிமேல் வெற்றி பெறுவது பெர்டினுண்டுக்கு நல்லதா, கெடுதலா?

இப்படிப்பட்ட கேள்விகளைக் கிளப்பினால், எப்படிப்பட்ட தூய்மையான உள்ளம் படைத்தவர்களும், இப்பக்கமோ அப்பக்கமோ, இரண்டோர் வார்த்தை பேசாதிருக்க முடியுமா! அந்த வார்த்தைகள் அவ்வளவும், கொலம்பசுக்குக் கேடு விளைவித்தன. கொலம்பஸ் தொலை தூரத்தில் இருந்தபோது, இந்த விஷம் நன்கு பரவி, விபரீத விளைவுகளை உண்டாக்கிவிட்டது.

ராணி இஸ்பெல்லா கொலம்பசுக்கு அளித்திருந்த அதிகாரத்தை ரத்து செய்துவிட்டார், ஒரே வரியில். கொலம்பசின், நிலை குலைந்தது. ராஜாங்க கோபம், அவ்வளவோடு முடியுமா? கொலம்பசை நீக்கிவிட்டு அந்தப் பதவியை விகித்து, அதிகாரம் செலுத்த போவாடில்லா என்றொருவனையும் அரசியார் அனுப்பி வைத்தார்.

ஹிஸ்பானியோலாவுக்கு வந்து சேர்ந்தான் புதிய அதிகாரி—கொலம்பசை நீக்கினான்-அப்போது கொலம்பசுடன், பார்த்தலோமியோவும் இருந்தான். அரசியாரின் உத்தரவுபடி, இரு சகோதரர்களுக்கும், விலங்கிடப்பட்டது. வெற்றிவீரன், கரங்களிலே விலங்கு! எந்தக்கரங்களைப் பிடித்துக் குலுக்கி, எந்த இஸ்பெல்லா அரசியார் மரியாதை காட்டினார்களோ, அதே கரங்களில், அதே அரசியாரின் உத்தரவுப்படி, இரும்பாரம்!

கலம் வருகிறது ஸ்பெயினுக்கு! அதிலே, கைகளில் விலங்கு பூட்டப்பட்டு, கைதியாகி வருகின்றான் கொலம்பஸ்! அவன் மனநிலை எப்படி இருந்திருக்கும்! என்னென்ன காட்சிகள் மனக் கண்முன் தோன்றி மறைந்

திருக்கும். அவன் உள்ள உரம்படைத்தவன். எனவேதான் அவனால், அந்த அக்ரமத்தைச் சகித்துக்கொள்ள முடிந்தது, உள்ளத்தில் உறுதி குறைந்தவர்கள், அப்போதே மனம் உடைந்து மாண்டிருப்பர், கலத்திலேயே. கொலம்பஸ், கையிலே இருந்த விலங்கைக் கண்டான். கலங்களுக்குக் காவலனாகச் சென்றவன் கைதியாகக் கலத்திலே கொண்டு வரப்படுவதைக் கண்டான்—முன்பு நடைபெற்ற விருந்து, வைபவம் ஆகியவைகளை எண்ணினான்—நாட்டிலே, இப்படிக் காட்டு முறையும் இருக்கிறதல்லவா என்று — எண்ணினான். பாபம்! அவனுக்குக் கண்ணீர் வடிக்கவும் நேரமிருந்திருக்காது, அலை அலையாக எண்ணங்கள் கிளம்பியபடிதான் இருந்திருக்கும்.

பார்சிலோனாவில் எப்படிப்பட்ட வரவேற்பு!

ராஜ சபையிலே எத்தகைய உபசரிப்பு!

இப்போது, கடலிலே, கலத்திலே கைதி! கரங்களிலே விலங்கு!!

கலத்தைச் செலுத்தினவனால் இந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை அவன் "தளைகளை எடுத்துவிடுகிறேன்" என்று கூறினான் கொலம்பசிடம்.

"என்ன காரியமப்பா செய்யத் துணிகிறாய்! ஸ்பெயின் நாட்டு மன்னனின் நன்றி காட்டும் நற்குணத்துக்குச் சிறந்த சான்றல்லவா, இந்த இரும்பாரம்! இதை

எடுத்துவிடுவதா, கூடாது, கூடாது! என் கரங்களிலே, இருந்தஇரும்பாரம் இருக்கட்டும், மரணபரியந்தம் நான் இந்த விலே மதிக்கொணுத பரிசை, இழக்கமாட்டேன். மாநிலத்தில் யாருக்குக் கிடைக்கும் இப்படிப்பட்ட பரிசு! — இரும்பாரம்!'' என்று கூறிக் கடைசிவரை, அதை எடுக்க மறுத்துவிட்டான்.

கலம், துறைமுகம் வந்து சேர்ந்தது 'சேதி' ஊரெங்கும் பரவிற்று.

''கொலம்பசுக்கு விலங்கிட்டார்களாம்!'' கடலே அடக்கினேனுக்குக் கரத்திலே விலங்கு!

''கொலம்பஸ் கைது செய்யப்பட்டான்''

''ஸ்பெயின் நாட்டுப் புகழ் பரப்பியவனுக்கா, இந்தத் தண்டனை?''

''நமது கொடியை. திக்குத் தெரியாத இடத்திலெல்லாம் பறக்க விட்டவனையா, இப்படி அவமதிப்பது?''

இது என்ன அக்ரமம்!

ஏன் இந்த அநீதி!

கொலம்பசுக்கா, விலங்கு!!

மக்கள், மனம் துடி துடிக்கலாயிற்று—முழக்கமிடலாயினர்! கோபிக்கலாயினர்! ஸ்பெயின் முழுவதும் கோபாவேசம்! கொலம்பசுக்கு விலங்கு! கொலம்பஸ்

கைதியாக்கப்பட்டான்! கொடுமை கொடுமை! என்ற கூக்குரல் எங்கும் கிளம்பிற்று—வலுத்துக்கொண்டே இருந்தது-மன்னன் மனதையும் அரசியின் அவசரத் தீர்ப்பையும், மக்கள் எதிர்த்தனர்! மன்னன், மக்களின் முழக்கத்தைக் கண்டான்—கொதிப்பின் காரணத்தை உணர்ந்தான்.

கொலம்பசை விடுதலை செய்க!—என்று உத்தர விட்டான். கொலம்பஸ் குற்றமற்றவன் என்று கூறினுன். கொலம்பசுக்கு பரிசளிக்கப்படும் என்ருன்—அளித்தான். மக்கள் வென்றனர்—மாவீரன் விடுதலே செய்யப்பட்டான்—மன்னன் கொலம்பசின் மீது பொருமைக்காரர்கள் பூசிய, தூசைத் துடைத்தான்.

கொலம்பஸ் நிரபராதி! மக்களின் தீர்ப்பு! மன்னனும் அதை அங்கிகரித்தான். கொலம்பஸ் நிம்மதியை இழந்தான்! மன்னனே, மக்களோ, அதை அறியவில்லே.

கொலம்பஸால் பெர்டினுண்டுக்கு இலாபமா? பெர்டினுண்டால் கொலம்பசுக்கு இலாபமா? இதை அல்லவா, விஷமிகள் பிரச்னையாக்கினர்—மக்கள் ஏன் அதற்கு இடமளித்தனர்? பிரச்னே அதுதானு!

கொலம்பஸ் பெர்டினுண்டு இருவரும், காலத்தின் சின்னங்கள், பெர்டினுண்டு, அஞ்சா நெஞ்சம் படைத்த ஆராய்ச்சியாளர்களே ஆதரிக்கும் காலப்போக்கின் சின்னம்—கொலம்பஸ் புதிய இடங்களைக் கண்டறிய எவ்விதமான கஷ்டத்தையும் ஏற்கத் துணியும் காலப்போக்கின் சின்னம்! இதை ஏன், மக்கள் உணரவில்லே.

முடிதரித்த பெர்டினண்டும், மரக்கலமேறிய கொலம்பசும், நிரந்தரமல்ல—ஆனால் அவர்களின் கூட்டுறவால் கிடைத்த புதிய நாடுகள்! அவை நிரந்தரம்! ஏன் மக்கள், இதை எண்ணிப்பார்க்கவில்லை.

யாரால், யாருக்கு இலாபம்?—ஏன், மக்கள் இந்த விபரீதக் கணக்குப் போட்டனர்? தெளிவாகத் தெரிவதும், மறுக்க முடியாததுமான, வேறோர் கணக்கு இருக்கிறதே, கொலம்பசும் பெர்டினண்டும் கூடிப் பணி செய்ததால், புதிய ராஜ்யமல்லவா கிடைத்தது, ஸ்பெயினுக்கு—புதிய பிரதேசங்களல்லவா தெரிந்தது உலகுக்கு—இலாபம் அதுதானே—அந்தக் கணக்கை ஏன் மறந்தனர்—அந்த இலாபம் கெடும்படியான காரியத்தில் ஏன் ஈடுபட்டனர்? கடலில், செல்லும் கலம்! கடலால் கலம் பயன் பெறுகிறதா, கலத்தால் கடல் பயன் பெறுகிறதா என்பதா பிரச்னை! மக்கள் இதையன்றோ பிரச்னையாக்கினர்—கூட்டுறவு கெட வேலை செய்தனர்.

கொலம்பசின், மனதிலே, இந்தக் கருத்துக்கள் புகுந்து குடையலாயின. அவனுடைய பழைய உற்சாகம் பாழ்பட்டது, மீண்டும் கூடச் சென்றான்; மேலும் சில இடங்களைக்கூடக் கண்டுபிடித்தான்—ஆனால் பழைய கொலம்பசல்ல! பழைய கொலம்பசை, ஸ்பெயின் நாட்டு வேந்தராவது நம் திட்டத்தை ஏற்றுக்கொண்டு ஆதரித்தாரே என்ற பெருமகிழ்ச்சியுடன், பணியாற்றி வந்த பழைய கொலம்பசைச் சாகடித்துவிட்டார்கள்!

பொன்னுடை! இரும்பாரம்! ஒருவனின், வாழ்நாளில் இரு நிலையையும் கண்டாகிவிட்டது கைலாகு

கொடுத்த அரசியாரையும் பார்த்தாகிவிட்டது கைக்கு விலங்கிட்டு இழுத்துவா, அவனை. என்று கட்டளை பிறப்பித்த அரசியாரையும் கண்டாகிவிட்டது. வாழ்க்கையிலே ருசி இல்லை. நடமாடிக்கொண்டுதான் இருந்தான், ஐம்பதாண்டுகள் முடியுமட்டும்-ஆனால் பழையகொலம்பசின், நிழல்போல வறுமை வந்துற்றது. வாட்டம் பிடித்தாட்டிற்று. நாலுபேர் முன்னிலையில் வருவதுமில்லை. தனியனானான் கொலம்பஸ். 1506-ம் ஆண்டு இறந்தான். இறக்கும் வரையில், அவன் அந்த இரும்பாரத்தை மட்டும் இழந்துவிடவில்லை! எத்தனை இரவுகள், அந்த இரும்பாரத்தின்மீது, அவனுடைய கண்ணீர் சிந்திற்றோ, யார் கண்டார்கள்! இறக்கும்போது. அவன் கேட்டுக்கொண்டபடி, அந்த இரும்பாரம் அவனுடன் சேர்த்துப் புதைக்கப்பட்டது.

★

ரொட்டித் துண்டு

★

அன்றயத் தபாலில் வந்த சொந்தக் கடிதங்களைப் பிரித்துப் படிக்கும்போதே ஆலை முதலாளி ராவ்பகதூர் ரங்கநாத பூபதிக்கு, ஆத்திரம் பொங்கிற்று. கடந்த பதினைந்து நாட்களாக, அவருக்கு ஆத்திரமூட்டும் கடிதங்களே வந்துகொண்டிருந்தன. தலைவிதி, தலைவிதி என்று மெள்ளக் கூறிக்கொண்டே, கடிதங்களைப் பார்த்துக் குப்பைக்கூடையிலே கசக்கி எறிந்துகொண்டிருந்தார். அவருடைய 'பார்வை' சுப்புத்தாயம்மாள் காப்பி கொண்டு வந்தாள்—ராவ்பகதூரின் முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் விதமாக இருந்தது. இன்று என்ன விசேஷம் தபாலில்! என்று சுப்புத்தாய் கேட்க எல்லாம் அதே விஷயம்தான். பெற்று வைத்தாயே, எனக்கு ஒரு மகனை என் தலைக்குத் தீம்பு தேடும் தடியனை! என்று வெறுப்புடன் கூறிக்கொண்டே, கடிதங்களிலே கவனம் செலுத்தினார்.

சுப்புத்தாய், சில விநாடி இருந்துவிட்டுப் போய் விட்டார்கள். ராவ்பகதூரின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது, ஒரு கடிதம். அது இது :—

சிவமயம்

புகழேந்திபுரம்
6—5—50

லட்சுமிகடாட்சம் பரிபூரணமாகப் பெற்ற ராவ்பகதூர் ரங்கநாத பூபதிக்கு, தங்கள் அன்பனும், சிரஞ்சீவி பாரத் பூஷணத்துக்கு ஆசிரியராக இருந்தவனுமான, வாத்தியார் வரகுணநாதப்பிள்ளை எழுதிக்கொள்ளும் கடிதம்.

பிரமானந்தமான மனதோடு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நாலு நாட்களாகவே தங்களுக்கு எழுத வேண்டும் எழுதவேண்டும் என்ற எண்ணம். தங்களுக்கு உள்ள எவ்வளவோ வேலைகளுக்கு இடையிலே, நானும் ஒரு கடிதம் எழுதித் தங்களுக்குத் தொல்லை தருவது சரியாக இராது என்று எண்ணினேன். ஆனால் எழுதாவிட்டால், மனது கேளாது என்பதால், எழுதுகிறேன்.

தாங்கள், சிரஞ்சீவி பாரத்பூஷணனுக்கு ஆசிரியனாக என்னை அமர்த்தியபோது, நான் சொன்னது தங்களுக்கு நினைவிலிருக்கும் என்றே நம்புகிறேன். உலகம் உங்களுடைய ஐஸ்வரியத்தைக் கண்டு ஆச்சரியப்படுகிறது. சம்பத் குமாரரான தங்கள் மகன் பாரத்பூஷணனோ, கலைமகளின் கடாட்சத்தைச் சம்பூரணமாகப் பெற்று உலகமே வியந்து பேசக்கூடிய, பெரிய மேதாவியாகப் போகிறான். அவனுக்கு இப்போதே உள்ள அறிவு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, என்று நான் சொன்னேன். என் வாக்கு எப்போதும் பலிக்காமலிருப்பதில்லை

இப்போது பாரத்பூஷணன் எவ்வளவு பிரமாதமான புகழ்பெற்று இருக்கிறான், என்பதைக் கண்டு நான், ஆனந்த சாகரத்திலே மூழ்கினேன். தங்கள் மனமும் பூரித்துத்தான் போயிருக்கும். தங்கள் திருகலட்சுமி ஸ்ரீமதி சுப்புத்தாயம்மாள் அவர்களின், மனமகிழ்ச்சிக்கு எல்லை இருக்க முடியாது.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய் - என்ற தெய்வப் புலவர் வாக்கு பொய்யாமோ! பாரத்பூஷணனுக்கு ஆசிரியனாக இருந்த ஒரு காரணத்தாலேயே, நான் இப்போது பெருமையும் பூரிப்பும் அடைகிறேன் என்றால், தங்களின் ஆனந்தத்தின் அளவு எவ்வளவு இருக்குமென்று கூறவும் முடியுமோ!

உலக இலக்கியங்களிலே ஒன்று என்று சான்றோர் அனைவரும் கொண்டாடும் நூலை இவ்வளவு சிறு பிராயத்திலே எழுதிய பாரத்பூஷணனை, வாழ்த்தாதார் இல்லை! மேதை - பேரறிஞன் - புதுமைக் குறளாசியன் - புரட்சி எழுத்தாளன் - தென்னாட்டு வால்ட்டேர் - நாலாவது சங்கத்தை நிறுவும் நடை உடையான் - நாவலன் - என்றெல்லாம், பாரத்பூஷணனைப் பலரும் புகழ்ந்து கூறும் போது, நான் ஆனந்தக் கூத்தாடுகிறேன். அவனுக்கு நான் தான் ஆசிரியன், என்று நான் கூறும் போது, அவர்களெல்லாம், என்னையும் புகழ்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் இணையிலா இலட்சிய ஏடு, என்று ஒரு தினத்தாள் எழுதுகிறது. ஏழை எளியோரின் கண்ணீரைத் துடைத்து, அவர்களை

அறப்போருக்கு அணிவகுத்து நிற்கச் செய்யும் வீர முழக்கம், இந்த ஏடு, என்று ஒரு பிரசங்கி பேசுவதை நானே கேட்டேன். உலக மகா சிரேஷ்டர்களின் உத்தமமான கருத்துக்களை எல்லாம், இக்காலத்துக்கு ஏற்ற விதமான நடை அழகுடன் தீட்டிக் காட்டப்பட்டிருக்கும் காவியம், என்று ஒரு ஆசிரியர் என்னிடம் சொன்னார்.

பாரத்பூஷணன், இவ்வளவு அருமையான காவியத்தைத் தீட்டும் அளவுக்கு அறிவாற்றல் கொண்டவனாக இருப்பது மட்டுமல்ல, செல்வக் குடியில் உதித்த திருக்குமாரன், ஏழை எளியவரின் கஷ்டத்தை இவ்வளவு தெளிவாக உணர்ந்து, அவர்களை வாழ வைக்கும் முறையை இவ்வளவு அழகாக எடுத்து எழுதின தன்மையைக் கண்டுதான், அறிஞர் உலகு அகமகிழ்ந்து பாராட்டுகிறது. தேன் கூட்டினைச் சிதைத்து தேனைப் பிழிந்தெடுத்துப் பருகும் கரடியின் செயலுக்கும், ஏழை எளியவரின் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும் பாதகர்களுக்கும் உவமைவைத்து எழுதப்பட்டிருக்கும் பகுதியைப் படித்துப் படித்து ரசிக்கிறார்கள். எலும்புக் கூடாகி விட்ட ஏழையை, ஏன் அப்பா, இப்படி இருக்கிறாய், என்று ஒருவன் கேட்க, என் சதையும் இரத்தமும் ஓநாயப்பருக்குத் தந்துவிட்டேன், என்று கூறுகிறானும் ஏழை! என்னே இதிலே உள்ள அருமையான கருத்து. பசி, பட்டினி, மனிதனை மிருகமாக்கி விடுகிற வர்ணனையைப்படிப்போரெல்லாம் கண்ணீர் விடுகிறார்கள். பாரத்பூஷணன். எப்படித்தான் ஏழையின் உள்ளத்தை இவ்வளவு நன்றாகக் கண்டறிந்து ஓவியம்போலத் தீட்ட

முடிந்தது!—அவனே குபேரசம்பத்திலே உள்ளவன்—வறுமைத் தோள் கொட்டுவதும், அதனல் வாழ்வு துடிப்பதும் எப்படித் தெரிய முடிந்தது--என்று ஆச்சர்யப்படுகிருர்கள் அனைவரும். புத்தபிரான் ராஜகுமாரனுகப் பிறந்த போதிலும், மானிடருடைய துக்கத்தைக் கண்டறிந்து 'ஞானம்' பெற்று உலகுக்கே ஞானசிரியனுக விளங்கினர், என்று சரித்திரம் கூறுகிறது, இதோ பாரத்பூஷணன் சரித்திரத்தை நமக்கு நடத்திக் காட்டுகிருர் என்று, ஒரு பெரிய தேசபக்தர் பேசினராம்.

"ஏழையின் வியர்வை சிந்தாமல், பூமிக்கு அடியில் தூங்கிக்கொண்டிருக்கும் வைரமும் தங்கமும், கடலுக்கு அடியிலே படுத்துறங்கும் முத்தும், உனக்கு எப்படிக் கிடைத்தது!

ஏழையின் கைத்திறன் இல்லாத ஒரு 'பண்டம்' உண்டா, காட்டு!

அவன் வாழ்விலே நிம்மதியை ஏற்படுத்தாவிட்டால், உன்னையும், உன் உலகத்தையும் அழித்துவிடுவான். அம்பாரி மீது ஏறிக்கொண்டதால், யானையைக் கொடுமைப் படுத்தலாம் என்று எண்ணுதே, யானைக்குக் கோபம் பிறந்தால், அதன் காலின் கீழ், கூழாகி விடுவாய்!"

இப்படிப்பட்ட தீப்பொறி பறக்கும் வாசகங்களை, பார்த்தால் பரமசாதுபோல இருக்கும் பாரத்பூஷணன் எழுதியது, எனக்குக்கூட ஆச்சரியமாக இருக்கிறது.

பகவானுடைய கிருபையால், பாரத்பூஷணன் தீர்க்காயுசாக இருந்து, பழைய காலத்துச் சங்கப் புலவர்களின் பெருமையைக் காட்டிலும் அதிகமான பெருமை பெற்று விளங்கவேண்டும் என்று ஆசீர்வாதம் செய்கிறேன்.

'ரொட்டித்துண்டு' விலை பதினைந்து ரூபாய்—நானே பரமஏழை—ஆகவே வாங்கி முழுவதும் படித்து ரசிக்க முடியவில்லை; இரவல் கேட்டாலும், யாரும் தருவதில்லை. அந்தப் புத்தகத்தை, அருமையான பொக்கிஷம் போலப் போற்றிக் காப்பாற்றுகிருர்கள். தாங்கள் என்பேரில் அன்புவைத்து, உடனே, எனக்கு ஒரு **'ரொட்டித்துண்டு'** அனுப்பிவைக்கக் கோருகிறேன். கிடைத்ததும் என்னுடைய மாணுக்கனும் தங்கள் மகனுமான பாரத்பூஷணனின் திறமையைப் பாராட்டி, அருமையான அகவல் இயற்றலாம் என்று துடியாய்த் துடிக்கிறேன். பாரத்பூஷணனுக்கு கடிதம் எழுதினேன்—பதில் இல்லை.பெரிய ஆராய்ச்சியில் மூழ்கியிருக்கும் அந்தப் பேரறிஞனுக்கு நேரம் கிடைப்பது அரிதுதான். எனவே தங்களுக்கு எழுதினேன். உடனே ஒரு **'ரொட்டித்துண்டு'** அனுப்பவும்.

தங்கள் அன்பு மறவாத
அகவலாசிரியன் வாத்தியார்,
வரகுணநாதப் பிள்ளை.

படித்து முடிந்தது, ஒரு பெருமூச்சுடன், "இப்படியும் ஒரு வைபத்தியம் இருக்கு!" என்று மெள்ளக் கூறிய

படி, வேறோர் கடிதத்தை எடுத்துப் பிரித்தார், படிக்க. அது, இது :—

பூதப்பாண்டி
6 - 5 - 50

புரட்சி ஓங்குக !

ஆதிக்க வெறி பிடித்து அலையும் ஆலைமுதலாளி ரங்கநாதர் எனும் பட்டம் பெற்ற பணக்காரப் பைசாசமே!

என்னைப்போன்ற எத்தனையோ ஏழைகளை அழித்தாய், நாங்கள் பாடுபடுகிறோம். பலன் காணவில்லை என்று கூறினது குற்றமென்று கொக்கரித்தாய். ஏழைகளை, ஈ எறும்புக்குச் சமானமென்று இறுமாப்புடன் பேசி, ஏசினாய், உலகம் முன்னேறிக்கொண்டு வருகிறது, இனி, முதலாளிகளின் கொட்டம் அடக்கப்பட்டே தீரும், என்று நாங்கள் கூறினபோது, கத்துகிறார்கள். குலைக்கிறார்கள், என்று திமிராகப் பேசினாய்—மறக்கவில்லை.

குண்டடிப்பட்ட புலி, உறுமும், சீறும், ஆனால் கடைசியில் சாகும். என்று கூறுகிறார் பாரத்பூஷணன்! படித்துப் பார்!

'கூலிக்காரப் பயல்கள்'—என்று கேவலமாக எங்களைக் கூறினாய், கொடியவனே! ஆளப்பிறந்தவர்கள்-ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெற்றவர்கள் - உழைப்பு என்ற ஒப்பு உவமை இல்லாத செல்வத்தைப் படைத்தவர்கள் - என்று எங்களைக் குறிப்பிட்டிருக்கும் 'ரொட்டித்துண்டு' - வெறும் புத்தகமல்ல, உங்களுடைய சூதுக் கோட்டையைத் தூள் தூளாக்கும் வெடிகுண்டு!

ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து, பணக்காரன் குவிக்கும் பவுன்கள் மூட்டை மூட்டையாக மாளிகைகளிலே உள்ளன—ஆனால் அவைகள் எல்லாம் ஒரு காலத்தில், வெடிகுண்டுகளாகி, மாளிகைகளை மண்மேடுகளாக்கும்-என்று பாரத்பூஷணன் எழுதி இருப்பதைப் படிக்கும் போது, எங்கள் நரம்புகள் புடைக்கின்றன என்பதை அறிந்துகொள். உன்போன்றவர்களின் சூழ்ச்சி, வஞ்சகம் பேராசை, வெறிக்குணம் ஆகியவற்றை எங்களால் கூட, அவ்வளவு நன்றாக எடுத்து எழுதமுடியாது. பாரத்பூஷணனின் புரட்சி ஏடான, 'ரொட்டித்துண்டு' மிகமிகத் தெளிவாக்கிவிட்டது, உன்போன்றாரின் குணதிசயத்தை, பொறாமையாலும், போக்கிரித்தனத்தாலும் என்போன்றவர்கள், உன்போன்ற பணக்காரர்களை ஏசுகிறோம் என்று பசப்பிக்கொண்டிருந்தாயே, பாதகனே! படித்துப்பார், 'ரொட்டித்துண்டு' பாரத்பூஷணன் எழுதியது!! பாரத்பூஷணன் யார்? உன் மகன்! உன் மகனுக்கா உன்னிடம் பொறாமை இருக்கும்! இல்லை! இல்லை! முக்காலும் இல்லை! பாரத்பூஷணன், இலட்சியவாதி! ஏழைப்பங்காளன்: எனவேதான், புரட்சி ஏடு தீட்டினான், புதியபாதையைக் காட்டினான்! பணம் காக்கும் பிசாசே! உன்னிடம் கோடிரூபாய் இருந்தும் யார் உன்னை மதிக்கிறார்கள்! பாரத்பூஷணனுக்கு, நாடேமரியாதை காட்டுகிறது! ஏழைகள் பாரத்பூஷணன் படத்தைப் பூஜை செய்கிறார்கள். ஒவ்வொரு தொழிற் சங்கமும் 'ரொட்டித்துண்டு' வாங்கத் தவறுவது கிடையாது.

உனக்கு மகனாகப் பிறந்ததால், பாரத்பூஷணனால், உன்போன்றவர்களின் போக்கை, உள்ளது உள்ளபடி படம் பிடித்துக்காட்ட முடிந்தது. எங்களுடைய மனக் கொதிப்புத்தான், உனக்கு மகனாக வந்து பிறந்தது, என்பதை அறிந்துகொள்.

இப்படிக்கு
உன்னால் ஆலையிலிருந்து
நீக்கப்பட்ட,
மேகநாதன்.

ஆலை முதலாளிக்கு அடக்கமுடியாத ஆத்திரம் பிறந்தது. என்ன செய்வது! கடிதம்தானே எதிரே, மேகநாதன் மட்டும் இருந்திருந்தால் கழுத்தை நெரித்து விட்டுக்கூட இருப்பார். கடிதத்தைக் கசக்கிக் கீழே வீசினார், தலையில் கை வைத்துக்கொண்டார். எழுந் தார், கீழே கிடந்த கடிதத்தை எடுத்தார், சுக்கு நூறாகக் கிழித்தார்—குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, ஒரு கடிதம் எழுதலானார். அது, இது:—

ஆலையூர்
7—5—50

சிரஞ்சீவி பாரத்பூஷணனுக்கு ஆசீர்வாதம் மிகவும் மன வேதனையுடன் இதை எழுதுகிறேன். நீ, மேல் படிப்புக்கு போகும்போதே, நான் உனக்குச் சொன் னேன், படித்தவரையில் போதும், ஒழுங்காக ஆலை வேலையைக் கவனித்துக் கொண்டு, குடும்பக்கௌரவத் தைக் காப்பாற்று என்று. பிடிவாதமாக பி. ஏ, எம். ஏ. என்று ஆசைகாட்டினாய். செல்லப்பிள்ளை நீ,உன் தாயா

ருக்கு; நானும் சம்மதித்தேன். படிக்கப்போன நீ இப்போது செய்திருக்கும் காரியம் என்ன! நம்முடைய 'மானம்' போகிற விதமாக நடந்துகொள்ளலாமா? ரொட்டித்துண்டு-பழைய சோறு-கந்தல் துணி இதெல் லாம் ஒரு புத்தகமா! நீயா, எழுதுவது! வயிற்றுச் சோற்றுக்குத் தாளம் போடும் வறட்டுப் புத்திக்காரர் கள் போல. ஏழையைப் பணக்காரன் கெடுக்கிறான் என்று எழுதவா உன் அறிவு பயன்பட வேண்டும்? இதற்கா நீ, எனக்கு மகனாகப் பிறந்தாய்! நீ, எழுதிய புத்தகத்திலே உள்ளது அவ்வளவும், என்னை அவமானப் படுத்துவதாகவும், என்னிடம் கூலி வாங்கிப் பிழைக்கும் கும்பலை, என்மீது ஏவி விடுவதுமாகவும் இருக்கிறது; வெடிகுண்டடா இது. புத்தகமல்ல, என்று ஒரு வெறிப் பயல் எனக்கே கடிதம் எழுதுகிறான். ஒரு ஏடு எழுதி. புகழ்பெற எண்ணுவதும் படித்த உனக்குச் சகஜம்தான் எழுது! அறிவாளி என்று புகழ்பெறு! எனக்கும் என் மகனைப் புகழ்வது சந்தோஷம்தான். ஆனால் எதை எழுதுவது! பணக்காரக் கொட்டத்தை பராரிப்பட்டா ளத்தைத் திரட்டு, என்றா எழுதுவது. பணம் திரட்டி, நானா, போகிறபோது மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு போகப்போகிறேன். எல்லாம் உன் சொத்து அல்லவா! உன்னைப்பெற்று வளர்த்து உனக்கு வேண்டியதை வாரி இறைத்துவரும் என்னை இவ்வளவு கேவலப்படுத்தி, ஊரார் பகையை என்மீது ஏவி விடுவதுதான், நீ படித்த படிப்பின் இலட்சணமா? துரோகி! என்வயிறுஎரிகிறது! பிழைக்கத் தெரியாத சிலபேர்வழிகள் உன்னைப் புரட்சி எழுத்தாளன் என்று புகழ்வதற்காக, சொந்தத்தகப்பனா ருக்குத் துரோகி ஆகிவிடுவதா! சுரண்டிப் பிழைக்கும்

சுகபோகிகள் என்று ஏசி இருக்கிறாயே, நீ, யாரடா அப்பா! பிறந்ததும், கையிலே கடப்பாரையும் மண்வெட்டியும் தூக்கிக் கொண்டு, வேலைக்குச் சென்றாயோ! உனக்கு 'ஆயா' வேலைபார்த்தவளுக்கு மட்டும், மொத்தத்திலே ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறேன். நல்ல தமிழ்ப் பண்டிதருக்கு மாதம் முப்பது ரூபாய் கொடுத்து உனக்குப் பாடம் சொல்லிவைத்தேன். உன் எழுத்துத் திறமையை ஒரு கம்பராமாயணம், திருவெம்பாவை, தாயுமானவர், இப்படிப்பட்ட அருமையான விஷயத்தைப்பற்றி எழுதிக் காட்டக்கூடாதா, பெரிய எழுத்தாளன், மேதாவி, என்ற பெருமை கிடைக்காதா! ஒரு, டி.கே.சிதம்பரநாத முதலியார், மறைந்துபோன தமிழ்ப் பாடல்களை எல்லாம், இந்தத் தள்ளாத வயதிலே சிரமப்பட்டுத் தேடித்தேடி எடுத்து வெளியிட்டு, பெரிய மேதை என்று பெயர்வாங்கி வருகிறாரே! அதைப் பார்த்துமா, உனக்கு புத்திவரக்கூடாது! சர், பட்டம் வாங்கி, உலகத்திலே பெருமை பெற்று உலாவும், சண்முகம் செட்டியார், உன்போல, ஓட்டைப் பாண்டம், குடிசை வீடு, என்றா எழுதினார்? சிலப்பதிகாரத்தின் அருமையை எழுதினாரே, மடையா! அவருக்கு அதனாலே எவ்வளவோ பெருமை உண்டாகவில்லையா! பொன்னியின் செல்வன்—போன்ற ஒரு கதை எழுதலாகாதா! வேலும் வில்லும்போன்ற ஒரு ஆராய்ச்சி நூல் எழுதக்கூடாதா! இப்படிப்பட்ட புத்தகங்களை எழுதி எவ்வளவோபேர், புகழ்பெற்றுஇருக்க, நீ, ரொட்டித்துண்டு எழுதி என் மானத்தைத் தொலைக்கிறாய். பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்தவன் கதைபோல, என்னை ஏசி, நீ,

மேதாவி என்று பெயர் எடுப்பதா புத்திகெட்டவனே சோற்றுக்கு வழியில்லாத சிலதுகள் உன்னைப் புகழ்ந்து, என்ன பிரயோசனம்! கவைக்கு உதவுமா? ஏன், உன் புத்தி இப்படிக் கெட்டுவிட்டது. ஒவ்வொரு பரீட்சையிலும், என் முகதாட்சணியத்துக்காகத்தானே நல்ல மார்க்கு கொடுத்தார்கள், உனக்கு. நீ, அறிவாளியாகி விட்டாய், என்றால், எப்படி அது? என் பணமடா என் பணம்! நீ, என்னைக் கண்டித்துப் புத்தகம் எழுதுகிறாய், எவ்வளவு திமிர். இனி உன் முகத்திலேகூட விழிக்க உத்தேசமில்லை. ஒரு காலணாகூட என் சொத்திலே உனக்குக் கிடையாது. அக்ரமக்காரன் சொத்தாச்சே! நீ, அனியாயத்தை அழிக்கப் பிறந்த தர்மவீரன்! உனக்கு ஏன், அந்தச் சொத்து? தம்படி கிடையாது, தம்படி, ஆமாம், அவ்வளவும், சுத்தானந்த பாரதியார் பேருக்கு எழுதிவைத்து விடப் போகிறேன். நீ, 'ரொட்டித்துண்டு' போதாது என்று, கருவாடு,கல்லறை, இப்படி எதையோ எழுதிக்கொண்டு, புரட்சி வீரனாகி விடு! என் மகனா, நீ! மடையன்!!

இப்படிக்கு,
ராவ்பகதூர்

கடிதத்தை எழுதி, உறையிலிட்டு, பாரத்பூஷணனின் முகவரியை எழுதியான பிறகு அவருக்கு ஓரளவுக்கு, நிம்மதி ஏற்பட்டது. வேலைக்காரனை அழைத்தார்—உடனே தபாலில் போடு, என்று கூறி, கடிதத்தை கொடுத்துவிட்டு, மற்றக் கடிதங்களை, அப்படியே குப்பைக் கூடையில் தள்ளிவிட்டு, யாரங்கே?என்று அழைத்

தார். "நான்தானுங்க மருதை!" என்று கூறியபடி, வேறோர் வேலையாள் வந்து நின்றான். "நீ, எப்படா, வந்த?" எங்கேவந்தே என்று அதட்டிக்கேட்டார். ஆலை முதலாளி - ஒரு கடிதத்தை அவரிடம் நீட்டியபடி, சின்ன எஜமானரு அனுப்பினாருங்க" என்றான் மருதை அவன் கொடுத்த கடிதம் இது:—

(மிகவும் ரகசியம்)

சிங்காரபுரம்
6—5—50

அன்புள்ள அப்பாவுக்கு,பாரத் எழுதிக்கொண்டது ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டேன். விஷயம் என்னவென்றால், என்னோடு காலேஜிபிலே படிக்கும் கதிர்வேலு என்ற மாணவன், 'ரொட்டித்துண்டு' என்ற விஷயமாகக் கத்தை கத்தையாக ஏதேதோ எழுதி வைத்திருந்தான். அவனுக்குப் பணக்கஷ்டம் இருந்தது. அதனால் அவன் தன்னுடைய பெட்டிகளை அடகுவைத் வைத்தான்-பத்து ரூபாய் கடன் கொடுத்தேன்-அந்தப் பெட்டியிலே ரொட்டித்துண்டு இருந்தது. படித்துக் கொண்டிருக்கும்போது, வேறோர் மாணவன், வந்துவிட்டான். இது யார் எழுதியது, மிகவும் நன்றாக இருக்கிறது என்றான். அவன் 'போர்க்கோலம் பிரஸ்' சொந்தக்காரர் பூமிநாதப்பிள்ளையினுடைய மகன். நான் எழுதியதுதான் என்று விளையாட்டாகச் சொன்னேன். அவன் பூமிநாதப்பிள்ளையிடம் சொல்லி இருப்பான் போலிருக்கிறது—அவர், அதைப் புத்தகமாகப் போட வேண்டும் என்று கூறி, ஆயிரம் ரூபாய்க்குச் 'செக்' கொடுத்ததுடன், இலாபத்தில் சரிபாதி தருவதாகவும்

எழுதிக் கொடுத்தார். கதிர்வேலுக்குத் தெரியாது. புத்தகம் வெளிவருவதற்குள், கடுமையான ஜுரம் அவனுக்கு—தர்ம ஆஸ்பத்திரியில் இருந்தான். புத்தகம் வெளி வந்த பிறகு, பிரமாதமான புகழ்—பணமும் நல்லபடி கிடைத்திருக்கிறது—மொத்தத்தில் என் பங்கு மட்டும்,பத்தாயிரம் கிடைக்கும் என்று தெரிகிறது. மேலும் இந்தப் புத்தகத்தை எழுதியதற்காக உலக எழுத்தாளர் மாநாடு, பாரிசில் கூடுகிறதே, அதற்கு வருமாறு எனக்கு அழைப்பும் வந்திருக்கிறது. செலவு, மகாநாட்டாருடையது.

இவ்வளவுக்கு இடையிலே, கதிர்வேலு கடுமையான ஜுரமாகப் படுத்துக் கொண்டிருந்தான். இப்போது, உடல் நிலை சரியாகி விட்டது. என்னிடம் சண்டைக்கு வந்தான்—நான் என்ன செய்வது—விஷயம் வெளியே தெரிந்தால், அவமானம்—அவனை எப்படி எப்படியோ சமாதானம் செய்துபார்த்தேன்—முடியவே இல்லை. அதனால், ஆத்திரம் ஏற்பட்டது எனக்கு. நன்றாக அடித்துவிட்டேன். இப்போது அவனை ஒரு இடத்திலே, கட்டிப்போட்டுப் பூட்டி வைத்திருக்க ஏற்பாடு செய்துவிட்டேன். மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. புத்தகம் எழுதினது நானல்ல, என்று வெளியானால், சகிக்கமுடியாத அவமானம் ஏற்படுவதுடன், என் பிற்கால வாழ்க்கைக்கும் பங்கம் விளையும். எனவே, என்ன செய்தாவது, கதிர்வேலின் வாயை மூடியாக வேண்டும். அவனோ முதலைப்பிடிக்காரன்—விடமாட்டான். இப்போது அவனை மறைத்து வைத்திருக்கவே தினம் பத்து ரூபாய் செலவு செய்கிறேன். எனவே தாங்கள் உடனே இங்கு புறப்பட்டு

வந்து இதற்கு ஒரு தக்க ஏற்பாடு செய்யவேண்டும். நமது பண்ணையிலும், ஆலையிலும், அதிருப்தியாக இருந்துவந்த தொழிலாளர்கள் எல்லாம், 'ரொட்டித்துண்டு' படித்துவிட்டு, என்னிடம் நம்பிக்கை வைத்து, புகழ்ந்து, தினமும் எழுதுகிறார்கள். தொழிலாளர்களின் தோழன் என்ற நல்ல பெயரை எனக்கு வாங்கித்தந்த 'ரொட்டித் துண்டு' உண்மையில் கதிர்வேலு எழுதியது, என்று உலகத்துக்குத் தெரிந்தால், என் நிலைமை மோசமாகிவிடும். நானும் பல யோசனைகள் செய்து செய்து பார்க்கிறேன், தெளிவு ஏற்படவில்லை. உங்கள் நண்பர், டாக்டர் தாமுவைக்கொண்டு, ஏதாவது ஒரு வகையிலே இந்தச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ளலாமா என்று எண்ணுகிறேன். கதிர்வேலு காலேஜிலே, சதா ஏதாவது உளறிக் கொண்டே இருப்பான், அதனால் அவனை இங்கு ஆசிரியர்களும், மாணவர்களும், லூஸ்—கிராக்—செமி என்றெல்லம் கேலி செய்வார்கள். டாக்டர் தாமுவின் உதவிகிடைத்தால், கதிர்வேலுவை பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலேயே கூடச் சேர்த்து விடலாம், எனக்கு எது சரி என்று தெரியவில்லை. ஒரே பயமாக இருக்கிறது. அதனால் தான், இந்தக் கடிதத்தை பணம் செலவானாலும் பரவாயில்லை என்று, வேலைக்காரன் மருதை மூலம் அனுப்புகிறேன். உடனே புரப்பட்டு வரவும். இன்று இரவு எனக்குப் புதுயுக எழுத்தாளர் சங்கத்திலே விருந்து, நாளையத் தினம் தங்களை எதிர்பார்க்கிறேன். கடிதத்தைப் படித்ததும் கொளுத்தி விடவும்.

தங்கள் அன்புள்ள மகன்,

பாரத்பூஷணன்.

கடிதத்தைப் படித்ததும், ராவ் பகதூர் முகம் செந்தாமரையாகி விட்டது "துப்பாக்கிக்குப்பிறந்தது பீரங்கியாகத்தானே இருக்கும்! சுப்புத்தாயி! சுப்புத்தாயி" என்று ஆனந்தம் பொங்கி வழியும்குரலில் கூப்பிட்டார்!

★

ரங்கதுரை பாகவதர்

★

"அச்சாபீஸ் மானேஜரைப் போய்க்கேளடா, இப்படித்தான் போஸ்ட்டர் போடுவதா என்று. போஸ்ட்டர் போடுகிறார்களாம் போஸ்டர். இது என்ன, வாடகை சீன் போட்டாடும், வக்கற்ற கம்பெனி என்று எண்ணிக் கொண்டாரா? நான் தான், செலவுபற்றி யோசிக்கிற கம்பெனி அல்ல இது. போஸ்ட்டர் பிரமாதமான முறையில் இருக்கவேண்டும் என்று பன்னிப் பன்னிச் சொன்னேனே. ராஜ பார்ட் என்ற எழுத்தை, இப்படியா கடுகு சைசில் போடுவது? போ? இந்தப் போஸ்ட்டர் வேண்டாம். பெரிய எழுத்தில், ராஜ பார்ட் ரங்கதுரை பாகவதர் என்று போடச் சொல்லு (சற்று யோசித்து) டே! ராஜ பார்ட் என்று மட்டும் அல்லடா. ராஜபார்ட்டாக ஆலாபன ரங்கதுரை பாகவதர், என்று போடச் சொல்லு"—என்று உற்சாகத்துடன், கூறி, கேட் கந்தசாமியை, டிராமா கம்பெனி முதலாளி குரு மூர்த்தி, அனுப்பிவிட்டு, கம்பெனி மானேஜரைக் கூப்பிட்டனுப்பிவிட்டு முருகா! கந்தா! என்றுகூறியவண்ணம் திண்டின்மீது சாய்ந்தார். அவர் சாய்ந்த அதிர்ச்சியால், பக்கத்திலிருந்த வெள்ளித்தாம்பாளம் ஆடி, அதிலே இருந்த, வாசனைப் பாக்குத்தூள்

ஜமக்காளத்தின்மீது சிதறிற்று. வேலேக்காரன் வந்ததும், அதைச் சுத்தப்படுத்தச் சொல்லலாம் என்று எண்ணி, அவர் வேறு சில முக்கியமான யோசனையில் ஈடுபட்டார்.

கம்பெனிக்கு நல்லபேர்—புகழ்—வருவாய், பத்திரிகைகளில், பாராட்டுகள்—போட்டோக்கள், இந்த நிலைமை, வெறும் எழுத்துவடிவோடு இல்லை—வெள்ளித் தாம்பாளமாக, வெல்வெட்டு மெத்தையாக இரும்புப் பெட்டியாக, உருவெடுத்துக் காட்டிற்று. நடிகர்கள் மட்டும் நூறுபேர்! எடுபிடிகள், எக்ஸ்ட்ராக்கள், முதலியவர்களைச் சேர்த்தால், ஒரு ஐம்பது தேறும், விருந்தாளிகள் ஒரு ஐம்பது பேர் இருக்கும்—ஆகமொத்தம், பகல் ஒருமணிக்கு, சாப்பாட்டுக்கு, பந்தி உட்காருவதைப் பார்த்தால், குருமூர்த்திக்கு, பரமானந்தமாக இருக்கும். உள்ளூர் பெரிய மனிதர் யாராவது இரண்டு பேரை, அழைத்து வருவார். இதைப் பார்க்கட்டும் என்பதற்காகவே.

திண்டின்மீது சாய்ந்த குருமூர்த்தியின் மனக்கண் முன், நாலு நல்ல நடிகர்களே கிடையாது இருந்த நாட்கள் வசூலான பணம், கொட்டகை வாடகைக்கும், பிட் நோட்டீசுக்குமே, போதுமானதாக இல்லாத காலம். இன்னும் அதற்கும் முன்பு, கம்பெனியே இல்லாமல், அவ்வப்போது ஊருக்கு ஊர், சிற்சிலரைப் பிடித்து, ஸ்பெஷல் கற்றுக்கொடுத்து, 'கூத்து' ஆடி வந்தகாலம், இவைகளெல்லாம் கவனத்திற்கு வந்தன, கூத்தாடி குருமூர்த்தி என்றபெயர் மறைந்து, பாரதமாதா நாடகக்

கம்பெனி முதலாளி குருமூர்த்தி என்ற பெயர். வருவதற்கு இடையில், அவர்பட்ட கஷ்டங்கள் பலப்பல, அவைகளை எல்லாம், எண்ணினார்—அவருடைய முகத்திலே, வெற்றிக்களை தாண்டவமாடிற்று.

ஒரு கட்டு 'ரவேஸ்' வெற்றிலையுடன், மானேஜர் வந்து சேர்ந்தார்.

"நேற்று வசூல் எவ்வளவு?"

"நேற்று, கொஞ்சம் மட்டம், சிறுதூறல்."

"தொகை, என்னய்யா?"

"எழுநூற்று அறுபது!"

"இவ்வளவுதானா":

இவ்வளவுதானா!—என்று அவர் கேட்டபோது, உள்ளூர அவருக்கேசிரிப்பு! ஏனெனில், அவர் அறுபது ரூபாவசூலையே 'அதிர்ஷ்டம்' என்று எண்ணி வந்த நாட்கள் உண்டு!! கம்பெனி மானேஜரிடம், அவர் பேசி வந்த பல விஷயங்களிலே, முக்கியமானது, ரங்கதுரையின் போட்டோவைப் பற்றியது, மானேஜர் அவசரமாகச் சென்று, அழகான சட்டம் போட்டிருத்த, போட்டோவைக் கொண்டு வந்து குருமூர்த்தியின் எதிரில் வைக்க அவர், ரவிவர்மா தீட்டிய லட்சுமி படத்தின் பக்கத்திலே, துரையின் போட்டோவை மாட்டி வைக்கும்படி கூறினார், மானேஜர், லட்சுமி சரஸ்வதி படங்களுக்கு நடுவில், இதைத் தொங்க

விட்டார்—இந்த மூன்றுபடங்களுக்கு மேலே, கம்பெனி முதலாளி குரு மூர்த்தியின் பெரிய படம் ஒன்று இருந்தது. குரு மூர்த்தி படங்களை மாறி மாறிப் பார்த்து மகிழ்ச்சி யடைந்து, மானேஜரைப் பார்த்து, "நம்ம துரையுடைய முகத்திலே இருக்கிற களை, இருக்குபார் - அட்டா, அற்புதமானது. அதுதான் 'லட்சுமிகளை' ன்னு சொல்வது" என்று பாராட்டினர். மானேஜர், அதைத் தொடர்ந்து துரையின் கண்ணொளி, குரலின் இனிமை, சங்கீதஞானம். நடிப்புத்திறமை, இவை களைப்பற்றி ஊரார், உயர்வாகப்பாராட்டுவது, என்பவை பற்றிச் சரமாரியாகப் பேசிவிட்டு, "தப்பித் தவறி, ரங்கதுரை, மோட்டாரில் கடை வீதிப்பக்கம் போய் விட்டால் போதும், ஒரே கூட்டம்! அதோ பார், ராஜ பார்ட் ரங்கதுரை பாகவதர் — என்று கூவிக்கொண்டே கூட்டம் ஓடிவரும் என்று முத்தாய்ப்பு வைத்தார். "ஆமாம்! இப்போது நம்ம துரையின் பெயர் பிரபல்யமாகி இருக்கிறது. எப்படி ஆகாமல் போகும்? டபுள் ராயல் ஆறு ஆயிரம், சிங்கிள்ராயல் ஒரு பத்து. ஆறு ராயல் ஒரு ஏழு ஆயிரம், இப்படி அல்லவா, 'பப்ளிசிடி' ஏறி இருக்கு! ஊரிலே ஒரு மூலை முடுக்குக்கூட பாக்கி கிடையாதே, போஸ்டர் எங்கேயும் ஒட்டியிருக்கிறோம், அவ்வளவு விளம்பரமும் ரங்கதுரைக்குத்தானே! ஊர் ஜனங்கள், ராஜ பார்ட் ரங்கதுரை பாகவதர் என்று புகழ்கிறார்கள் என்றால், இதிலே, ஆச்சரியமென்ன?" என்று விளக்கத்தை விவரமாகக் கூறினர் குரு மூர்த்தி. அவருக்கு, ரங்கதுரையிடம், கோபமோ, பொறாமையோ, இல்லை. ஆனல்,

மனம் எனும் கழனியில், இந்த விதையைத் தூவினல், பலன் தரும் அளவுக்கு, பலர், ஏர் உழுது இருந்த நேரம் அது!

"ரங்கதுரையின் மனம் சுத்தமானது, அவனுடைய சரீரத்தைப் போலவே!"

"அதனாலேதான், அவன் முன்னுக்கு வருகிறான்—நாமும், பணம் என்று பார்க்காமல், அவனுடைய பேரும் புகழும் வளர வேண்டும் என்று பாடுபடுகிறோம்"

"இட்டார்க்கு இட்டபலன் தானுங்களே."

"அது சரி, நல்லவர்களின்போக்கு அது. வேறு சிலதுகள் இல்லையா? உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்து கொண்டு!"

"ஆனல் நம்ம ரங்குவின், சுபாவம் அப்படிப்பட்டதல்ல. உங்களிடத்திலே அளவுகடந்த அன்பு. நேற்றுக்கூட, 'நாடகம்' பத்திரிகை ஆசிரியர் ரங்கதுரையிடம் உமது ஆசிரியர் யார், எத்தனை வருஷமாக இந்த நாடகத் தொழிலில் இருக்கிறீர், நீங்கள் முதல் முதலாக எந்த நாடகத்தில் நடித்தீர், என்றெல்லாம் கேட்டார், நம்ம ரங்குவின் பெருங் குணத்தைப் பாருங்கள், என் ஆசிரியர் கலாகேசரி குருமூர்த்தியார்—நான் நாடகத் தொழிலிலே ஈடுபட்டதே அவருடைய சகாயத்திலேயும் ஆசீர்வாதத் தாலேயும், சிட்சையாலேயுந்தான். என்று கூறினன்,"

"நல்லபிள்ளை, நம்ம ரங்கு! நல்ல மனம்—குணம் கலாகேசரின்னு நமக்கு டைடிலே கொடுத்து விட்டான; நம்மிடம் அவனுக்கு உள்ளபடியே அவ்வளவு ஆசை. பாவம்! அவன் ஆசையை நாம் கெடுப்பானேன், இனி, போஸ்ட்டர், பிட்நோடீஸ், விளம்பரங்களிலே, நம்ம பேர் போடும் போது, கலாகேசரி குரு மூர்த்தி என்றே போடு. ரங்குவுக்குத் திருப்தியாக இருக்கும்."

இவ்விதமான உரையாடலுக்குப் பிறகு, குரு மூர்த்தி, வளரும் வசூலின் காரணமாக முகம் மலர்ந்து, அந்த வசூலுக்கு முக்கிய காரணமாக இருந்து வந்த ரங்குவுக்கு, பாதாம் கலந்த பால் கொடு, பத்து ரூபாய் கைச் செலவுக்குக் கொடு, படுக்கையிலே இன்னும் இரண்டு தலையணை தைத்துப்போடு, ஆர்ட் அட்டையிலே அவன் போட்டோ ஒரு பத்தாயிரம் அச்சிட்டு, அட்டை இரண்டணு வீதம், தியேட்டரில் விற்பனை செய்ய ஏற்பாடு செய், ரங்குவின் புகழ் பரவட்டும் என்று கனிவுடன் புதிய புதிய கட்டளைகள் பிறப்பித்து விட்டுக் கண் அயர்ந்தார், கம்பெனியில் அப்போது 'கந்தலீலா' நாடகம்—பிரமாதமான வசூல்! ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர்தான் முருகன்! மற்றப் பாகங்கள் வேறு பல நடிகர்கள்!! அவர்களின், பெயர், வெளியே கூடத் தெரியாது. தெரிவிக்கும் வழக்கம், கிடையாது.

குரு மூர்த்தியின் குதூகலத்தை விட ஒருபடி அதிகமாகவே இருந்தது, ரங்குவின் களிப்பு, நாடகத் தொழிலிலே கிடைத்த நற்பெயர், செல்வாக்கு, ரங்குவின் இளம் உள்ளத்துக்குத் தேன் ஊற்ருக இருந்தது. குரு மூர்த்தி, தன்னிடம் காட்டும் அன்பும் அக்கரையும், அவன் மனதை நெகிழச்செய்தது, மற்ற நடிகர்கள் கண்டு பொறுமைப்படும் அளவுக்கு, தனக்கு. அவர் சலுகைகள் காட்டுவது ரங்குவின் மனதிலே, அவர் மீது ஒரு பாசமே ஏற்படும்படி செய்து விட்டது. குரு மூர்த்தி, ரங்குவைப் பாகவதராக்கி, ராஜபார்ட்டாக்கி, ராக ஆலாபனராக்கி, மகிழ்ந்தார். குரு மூர்த்தியை கலாகேசரியாக்கி, ரங்கு மகிழ்ந்தான். ராஜபார்ட்டான ஆலாபன ரங்கபாகவதரின் நடிப்பு மிகமிக அருமையாக இருந்தது—அவர் சாரீரத்தின் இனிமையும் சங்கீதஞானமும், எப்படி இருந்தது என்று பொருத்தமான உபமானம் கூற வேண்டுமானல், நவயுகக் கலாகேசரி குரு மூர்த்தியார். கம்பெனியை நடத்தும் விசேஷத் திறமையும். திறமையுள்ள நடிகர்களைக் கண்டு பிடித்து அவர்களின் திறமைகேற்ற இடமளித்து, அவர்களை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரும் "பக்குவமான முறை" இருக்கிறதே, அது போன்று இருந்தது, என்றுதான் கூறவேண்டும்—என்று ரசிகர்கள், பேசினர், எழுதினர்; அதாவது இருவரிடமும் நட்பும், அதனல் சிறு சிறு பலனும் பெற்றவர்கள்! வேறு சிலர்—அவர்கள் தொகை குறைவு—இருந்தனர், குரு மூர்த்தியிடம் பேசும்போது "ரங்கதுரையுடைய நல்லகாலம். அதிர்ஷ்டம், உங்களுடைய ஆதரவு கிடைத்தது. இப்போது அதனலே ராஜபார்ட்ஆனன்-பாகவதர் ஆனன்—நீங்கள் அவனுக்கு இவ்வளவு அன்பு காட்டியிராவிட்டால், அவன் சாரீரம், கட்டையாகி, சீந்துவாரற்று

எங்காவது பஜனை மடத்திலே போய், 'ராம நன்னுப் ரோவரா' பாடிக் கொண்டிருப்பான், அவனுடைய ஜாதகபலன், உங்களுடைய தயவு அவனுக்குக் கிடைத்தது'' என்று பேசுவர். அப்போது குருமூர்த்திக்கு அறுபது ரூபாய் வசூலுடன், அல்லற்பட்டகாலம். நாலு நல்ல நடிகர்கள் கிடைக்காமல் கம்பெனி கஷ்டப்பட்ட நாட்கள், இவை மறந்து போகும்—டபுள்ராயல், சிங்கிள் ராயல்—ரங்க துரைக்காகச் செய்த விளம்பரச் செலவு, இவை கவனத்திலிருக்கும். பெருமையுடன், ''போகிறுன் பாபம்! நமக்கு நாலுகாசு செலவானாலும் பரவாயில்லை, அவன் முன்னுக்கு வந்தால் போதும்; அவன் அதை எண்ணினாலும் சரி, மறந்து மண்டைக் கர்வம் ஏறிவிட்டாலும் சரி, நாம் செய்ய வேண்டியதைச் செய்கிறோம்'' என்று கூறுவார் விஷவிதையை அப்போது தூவுவார். ''அவனுக்கு மண்டைக் கர்வம் பிடித்ததோ ஒழிந்தான் அதோடு என்று வைத்துக் கொள்ளுங்கள் உங்களுடைய உதவி இல்லை என்றால், ராஜபார்ட்டுமில்லை ராக ஆலாபனமும் இல்லை, பிறகு. அவன் பாடு திண்டாட்டந்தான்'' என்று கூறுவர் குருமூர்த்தியின் புன்னகை ''ஆமாம்'' என்றும் கூறும், அதே போலவே, ரங்கதுரையிடம் சென்று பேசுவர். 'முன்பெல்லாம் உங்களுக்குத் தெரியாது, கொட்டகை இருக்கிற தெருவழியாகவே ஜனங்கள் நடமாடமாட்டார்கள், ராத்திரி பதினொரு மணி வரைக்கும் பாண்டு வாசிப்பார்கள் வெளியே டிக்கட் முப்பது நாற்பதுக்குக்கூட விற்பனையாகாது. சதா சர்வ காலமும் சாப்பாட்டுக் கஷ்டந்தான் கம்பெனியில் நடிகர்

ஏது-டிரஸ் ஏது-சீன் ஏது! ங்கள் வந்து சேர்ந்த பிறகுதான் குருமூர்த்திக்கு 'சான்ஸ்' ஆயிரம் ஏழுநூறு என்று வசூல் ஏறிற்று. உங்களுடைய சாரீரம், அவருக்குச் சம்பத்தாக முடிந்தது'' என்பார்கள் ரங்கதுரை ''அவருக்கு, கலையிலே ரொம்பப் பிரியம். இதுபோலக் கம்பெனி வைத்து நடத்த ஆரம்பித்து இருபது வருஷங்களுக்குமேல் இருக்குமாமே'' என்று புகழ்ச்சியாகத்தான் பேசுவான். விஷவிதையை தூவுபவரோ, நடந்தது இருபது ஆண்டுகளாக-ஆனால் கம்பெனியில் நல்லவர்களே நுழையமாட்டார்கள், நாகரீகமான இரண்டு பாட்டுப்பாட ஒரு நடிகன் கிடையாது-மதுரைவீரன் கதையும், மாடசாமி காமிக்கும், நடக்கும். கேட்பாரற்றுக்கிடந்தது. நீங்கள் வந்து சேர்ந்த பிறகுதான் கந்த லீலாவும் காதம்பரியும்,டபுள் ராயலும், சினிமா-ஸ்லைடும் கப்பும் கேடயமும், மாலையும் மரியாதையும் மதிப்பும் பணமும்! பெருமையாக இப்போது பேசிக்கொள்கிறார், நம்ம கம்பெனியைச் சாமான்யமாகக் கருதாதே! ராஜபார்ட் ராக ஆலாபன ரங்கதுரை பாகவதர் இருக்கிற கம்பெனி என்றால், அதிலிருந்து, கம்பெனி எப்படிப்பட்டது என்று தெரிந்துகொள்ளவேண்டும்; குண்டுமல்லிப் பூ, குரோடென்ஸ், செடியிலே பூக்காது!—என்று கதை அளக்கிறார்'' என்று பேசுவர்.

''அவர் சொல்வது உண்மைதானே. குரோடன்ஸ் செடியிலே குண்டுமல்லிகை பூக்குமா? ஒரு உபயோக மற்ற கம்பெனியிலே, விஷயம் தெரியாத முதலாளியிடம் சிக்கியிருந்தால் நமது நடிப்பும், சங்கீதமும் விருத்தியாகி இருக்க முடியுமா?'' என்று வாதாடுவான் ரங்கதுரை.

விஷப்பூண்டை விவசாயம் செய்து பழக்கமானவர்கள், "உபமானம், எதற்கும் எப்படியும் சொல்லலாம். குண்டுமல்லி குரோடன்சிலே பூக்குமா? என்று கூறி விட்டால், தீர்ந்துபோச்சா! நத்தையிலே முத்து இல்லையா! சேற்றிலே செந்தாமரையில்லையா! அது போல, குருமூர்த்தியிடம் ஒரு ரங்கதுரை பாகவதர் இருக்கிறார் என்று நாங்கள்கூடத்தான் உபமானம் கூறமுடியும் என்பார்கள், ரங்கதுரையின் முகத்திலேயும் புன்னகை தவழும். கம்பெனிக்குச் சிறப்பளிக்கும் அளவுக்குத் தனது சங்கீதம் வளர்ந்திருக்கிறது, குருமூர்த்திக்கு இலாபம் கிடைக்கும் அளவுக்கு, தன் நடிப்புத் தொழிலிலே நற்பெயர் கிடைத்திருக்கிறது, என்று அந்தப் புன்னகை கூறும்.

உண்மை நிலையோ இருவர் உள்ளங்களில், தவழ்ந்த எண்ணங்களுக்கும், விஷவித்திடுவோர் (மனதிலே இருந்ததோ இல்லையோ) உதட்டிலே தவழ்ந்து வந்ததுமான எண்ணங்களுக்கும் வெகு வெகு தொலைவிலே இருந்தது. இருவரில் யாரால் யாருக்கு இலாபம், யாருடைய உதவியால் யார் சிறந்தனர், என்பதல்ல, முக்கியமானது. அது, நீர்மேல் குமிழி போன்ற விஷயம், குருமூர்த்தி-ரங்கதுரை கூட்டுறவால் ஏற்பட்ட உண்மையான பலன், என்னவென்றால், நாடகக் கலை நாட்டிலே பரவ, ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் கலைத் துறைக்கே, இந்தக் கூட்டுறவின், பெரும் பலன், போய்ச் சேர்ந்தது—கலைத்துறைக்குப் போய்ச் சேர்ந்ததென்றால், கலை உள்ளம் படைத்த அனைவருக்கும் போய்ச்சேர்ந்தது என்றுதானேபொருள்! உண்மையில்;

பலன், குருமூர்த்திக்கும். ரங்குவுக்கும் கிடைத்ததைவிட நாடகக் கலைக்கே அதிகம் கிடைத்து—ஒரு நல்ல நடிகனைக் காணவும், சுகமான சங்கீதத்தை அனுபவிக்கவும், நாகரீகமான நாடகங்களைப் பார்க்கவும், காசு செலவிட்டு கண் அரிப்பும் காதுக் குடைச்சலும் பெற்றுவந்த மக்களுக்கு, கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும் விருந்தும் கிடைத்துவந்தது. குருமூர்த்தி—ரங்கு, கலைத்துறைக்கு, ஒரு புதிய, சிறந்த, தேவையான, உதவியாக இருந்தது. இந்த உண்மையை மறைக்கு மளவுக்கு, டபுள் ராயல்,சிங்கிள் ராயல் போஸ்டர் பற்றிய பேச்சும், அறுவது வசூலான இடத்தில் ஆயிரம் வசூலாகிறது என்ற பேச்சும் வளர்ந்தது. "கம்பெனியினால்தான் ரங்கதுரை, பாகவதரானார்"—ஒரு கட்சி: ரங்குவால் தான் கம்பெனி உருவாயிற்று" மற்றோர் கட்சி இப்படி ஒரு ஆபத்தான நிலைமை வளரலாயிற்று—குருமூர்த்தி, ரங்கதுரை இருவருமே, அந்த நிலைமைக்குப் பலியானார்கள்—இருவரும் அறியாமலேயே.

ஊருக்கு விடுமுறை பெற்றுப் போயிருந்த ரங்கு, கடிதம் எழுதியிருந்தான், குருமூர்த்திக்கு; இங்கு தாயாருக்கு இன்னும் நோய் குணமில்லை. அங்கு கம்பெனி வசூல் எப்படி? வசூல், ரொம்பக் குறைந்துவிடுமோ என்று கவலையாக இருக்கிறது. கூடியசீக்கிரம் வந்துவிடுகிறேன். நான் வந்த பிறகு "கந்த லீலா" துவக்கி ஒரு மாதம் நடத்தினால், இப்போது, கம்பெனிக்கு நஷ்டம் வந்திருந்தாலும், சரிப்படுத்தி விடலாம். தாங்கள் கவலைப்படவேண்டாம்—" என்று எழுதியிருந்தான்.

“வருஷம் பத்தானுல்கூட, நம்ம ரங்கதுரைக்குக் கம்பெனியிடம் உள்ள அக்கரையிலே, நூற்றிலே ஒரு பாகம்கூட, மற்ற நடிகர்களுக்கு வருவதில்லே. தாயாருக்கு உடம்பு சரியில்லே என்று ஊருக்குப் போயிருக்கிருன்; அந்த இடத்திலேகூட அவனுக்குக் கம்பெனியைப் பற்றிய கவலேதான்—வசூல் எப்படி இருக்கிறது—கந்தலீலா போடலாம்-நான் வந்துவிடுகிறேன் சீக்கிரம். என்று கடிதம் எழுதுகிருன். இப்படிப்பட்ட குணசாலிகள் இருந்தால்தானே, கம்பெனி உருப்படும்” என்று பெருமையுடனும் பூரிப்புடனும் பேசிவிட்டு, டானிக் பாட்டிலும்,சாத்துக்குடியும், வாங்கி அனுப்பிவைப்பார். குருமூர்த்தி, என்றுதான் ரங்கு எண்ணினுன். முன்பெல்லாம் அவ்விதந்தான் நடைபெறுவது வழக்கம். வஷப் பூண்டு விளேத்துவிட்ட நேரத்திலே இந்தக் கடிதம் வந்தது—எனவே விளேவு வேருகிவிட்டது. மண்டைக் கர்வத்தைப் பார்த்தாயா, இந்த துரைக்கு? இவன் இல்லாததாலே வசூல் ‘டல்’லாகி விட்டதாம்! கிண்டலாகக் கடிதம் எழுதியிருக்கிருன். கவலேப்படாதே, நான் வந்த பிறகு, கந்தலீலா போடலாம், நஷ்டத்தை அப்போது சரிப்படுத்தி விடலாம், என்று கடிதம் போடுகிருன். இவன் இல்லாவிட்டால், நம்ம கம்பெனியே, நடக்காது—நமக்கு வேறு நாதியே இல்லே என்று எண்ணுகிருன். இவனே நாம் பாகவதராக்கி, ராஜபார்ட் ஆக்கி, தோடிக்கும் இந்தோளத்துக்கும் வித்யாசம் தெரியாத அபசுரத்தை,ரா்க ஆலாபனமாக்கி வைத்த பலன், இவன் நான் இல்லாவிட்டால் கம்பெனி எப்படி நடக்கும் என்று மறைமுகமாக, நம்மையே கேள்வி கேட்கும் நிலே

மையை உண்டாக்கிவிட்டது” என்று கடுமையாகப் பேசி, மேனேஜரைக் கூப்பிட்டு, “நாளேயோடு நல்ல தங்காளே’ முடித்துக்கொண்டு; இரண்டு நாள் லீவ் விட்டு.கந்தலீலா ஆரம்பிக்கச் சொல்லு-போஸ்ட்டரும் போடு” என்ருர். கடிதத்தின் விளேவாக இதைக் கூறுகிருர் என்பதறியாத மானேஜர், ‘ரங்கதுரை, வருவதற்கு, இன்னும் இரண்டு வாரம்ஆகுமாமே, கந்தலீலா, எப்படி?” என்று கேட்க, குருமூர்த்தி, யாரய்யா சுத்த மடையஞ இருக்கறே! கோழி கூவியா பொழுது விடியுது. கந்தலீலா, ரங்கன் வராமே நடக்காதா நடக்கக்கூடாதா—நடந்ததில்லேயா? ரங்கதுரைதாஞ கம்பெனி? ஏன் உன் கண்ணிலே தாமு, சோமு, இவனுங்களெல்லாம் படவில்லேயா? சோமு முருகன்—தாமு, வள்ளி—ஆமாம், டபுள்ராயல் போடு—சுகசாரீர சம்பன்ன சோமுன்னு போஸ்டர் அடி, கலர் போஸ்டர்’!—என்று உத்தரவிட்டார். பத்திரிகையிலே இதுபோல் விளம்பரம் வருவதற்கும், ஊரிலே ரங்கதுரையின் தாயாருக்கு ‘க்ஷயம்’ என்று டாக்டர் கண்டுபிடித்து ரங்கனுக்குக் கூறுவதற்கும். நேரம் சரியாக இருந்தது. ரங்கதுரையின் மனம் புண்பட்டது. எவ்வளவு உள்ளன் போடு உழைத்தும், கம்பெனியிடம் அக்கரை வைத்தும், முதலாளி கடைசியில், சமயத்தில், நம்மைக் காலே வாரி விடத்தானே செய்கிருர். சோமுவை வைத்துக் கம்பெனி நடத்துவேன், தாமுவாலே நடக்கும், நீ அவசியமில்லே. என்று மறைமுகமாக நமக்குக் கூறத்தானே, நாமாகக் கடிதம் எழுதியும்கூட, இப்படி, நாடகத்தை, சோமு

வைக் கொண்டு நடத்துகிறார். நன்றியை மறந்து நடந்து கொள்கிறார்; எவ்வளவு பேர் நமக்குச் சொன்னார்கள், "நீ வராத முன்பு கம்பெனி, இப்படி இல்லை" என்று. தூண்டினவர்கள், தூபமிட்டவர்கள் பேச்சை எல்லாம் அலட்சியப்படுத்தி, ஒரு நல்ல கம்பெனி நடக்கவேண்டும் —நல்ல அனுபவமுள்ளவரால்தான் அதை நடத்த முடியும், குருமூர்த்தியார்தான் அதற்கு ஏற்றவர், என்று மனமார நம்பித்தானே உழைத்துவந்தேன்—அதற்குப் பலன், இதுதானே!"—என்று எண்ணி வருத்தப்பட்டான்.

முதல் 'போகம்' ஆயிற்று; அறுவடை முடிந்தது; இனி இரண்டாம் போகத்துக்கு விதை தூவ வேண்டியதுதான், என்று, விஷ விவசாயிகள் எண்ணினர்—மும்முரமாக அதிலே ஈடுபட்டனர்—பயிர் செழித்தது!

"பாகவதர், 'ஆக்ட்' செய்யக் காணோமே, ஏன்?"—குருமூர்த்தியைக் கேட்பர் சிலர்—சரசம் தேடுவோர்.

குருமூர்த்தி அவர் கூறுவதன் பொருள் விளங்காததுபோல இருந்துவிட்டு, "அடடே! ரங்கனைச் சொல்கிறீர்களா? நான், பாகவதர் பாகவதர் என்று சொன்னதும், யாரைச் சொல்கிறார்கள் என்பது தெரியாமல் திணறினேன்" என்று கூறிவிட்டு, மானேஜரைப் பேச வைப்பார்கள்; "நம்ம ரங்கன் விஷயத்தைக் கேட்கிறார்" என்று ஆரம்பிப்பார். மானேஜர், மளமளவென்று கொட்டுவார். "ரங்க பாகவதரா! அவர் நிலை இப்போது ரொம்ப உயர்ந்து போயிட்டது சார். அவர் கம்பெனிக்கு

வந்து நடக்கமாட்டார்—கம்பெனி அவர் ஊருக்கு வந்து நடக்க வேண்டுமாம்; நன்றிகெட்ட பயல்கள் சார்! நான், ரொம்ப நாளாகச் சொல்லிவருகிறேன் இவருக்கு—வேண்டாம், நீங்கள் அவனைத் தூக்கித் தூக்கி விடுகிறீர்கள்—ஆபத்து—ஆபத்து என்று சொன்னேன்—இவர் கேட்கவே இல்லை—கந்தலீலா போட்டால் அவன்தான் முருகன்—ராமலீலா போட்டால் அவன்தான் ராமரன்—ராமதாஸ் போட்டால் அவன்தான் நவாபு, பவளக்கொடி நடத்தினால் அவன்தான் அர்ஜுனன், இப்படி, அவனுக்கே 'சான்ஸ்' கொடுத்தபடி இருந்தார்—இப்போது அவன் கோபுரத்தின் மீது ஏறிக்கொண்டான்" என்பார். குருமூர்த்தியோ, அதைப்பற்றிக் கவலைப் படாதவர்போல. "கோபுரத்தின் மேலே, குரங்குகூடத்தாண்டா. ஏறிக்கொள்ளும், போடா போ! நம்ம கம்பெனியிலே எத்தனையோ ரங்கு வந்தான்—சோமு வந்தான்—பேசினான்" என்று கூறுவார். இவ்வளவுக்கும் ரங்கனுக்கும், கம்பெனிக்கும் கணக்குப் பைசல் ஆகிவிடவுமில்லை—ரங்கதுரை வேறு கம்பெனிக்குப் போகவுமில்லை—ஸ்பெஷலுக்குக் கூடப் போகவில்லை.

கம்பெனி நின்றுவிடவில்லை!—ரங்குவும் பட்டினியாக இல்லை!!

கம்பெனியில் இல்லாதது ரங்கதுரைக்கு, ஒருவகை நிம்மதி தரவே ஆரம்பித்தது.

ரங்கதுரை இல்லாதது, கம்பெனியில் சிலருக்கு நிம்மதியாகவே இருந்தது.

ரங்கு இருப்பதும் இல்லாது போவதும் கம்பெனியை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதை நிரூபித்தாக வேண்டிய பெரும் பொறுப்பு குருமூர்த்திக்கு ஏற்பட்டது, முதலிலே அவருக்குத் தோன்றிய யோசனை, சோமுவையோ, தாமுவையோ, 'தூக்கிவிட்டு'—விளம்பரம் செய்து, இடத்தை அடைக்கவேண்டும் என்பதுதான். பிறகு, அதனால் ஏற்படும் சிரமமும், அதன் விளைவும் எப்படியாகுமோ என்ற கவலையும் ஏற்படவே, அந்த யோசனையைக் கைவிட்டுவிடு, கம்பெனியில், கண் கவரும் சீன்கள்-புதிய உடைகள்-கலர் லைட்டுகள்-டார்னிங் சீன்கள்—இவைகள் உண்டு என்பதையே அதிகமாக விளம்பரப்படுத்தி, யார் வேண்டுமானாலும் எந்த வேஷம் வேண்டுமானாலும், போடக்கூடிய விதமான, 'தசாவதாரம்' நாடகத்தைத் தயாரித்து, கம்பெனியின், வலிவையும், வனப்பையும் வளர்க்கலானார். சோமு ஒரு நாளைக்கு மகாவிஷ்ணுவாக வருவான்—ஒரு நாளைக்கு துவாரபாலகனாவான்—ஒரு நாளைக்கு தாமும் கிருஷ்ணனாவான், மறுநாள் அவனே ருக்மிணி வேஷம் போடுவான், கம்சன் வேஷத்துக்கு கேட்|கந்தனே பொருத்தம்—அவனுக்குப் பேசத் தெரியாது-ஆகவே அவன் வாய் அசைக்கட்டும்—'மைக்கிலே' சொக்கன் பேசிவிடட்டும்-என்று இப்படிப்பட்ட ஏற்பாடுகளுடன் 'தசாவதாரம்' ...நடைபெற்று வந்தது. ரங்கதுரை இல்லாமல் கம்பெனி நடைபெற முடியும் என்பதை நிரூபித்துவிட்டார், குருமூர்த்தி ரங்கதுரையால், கம்பெனியில் இல்லாமல் நான் இருக்க முடியும், என்றுமட்டுந்தானே காட்ட-முடியும்? அவன் வேறு கம்பெனியில் சேரமுடியாது

மற்ற எந்த கம்பெனியிலும் அவன் விரும்பும் நிலைமை கிடையாது—அவனைப் புதிய கம்பெனி வைக்கவும் முடியாது—அவனுக்கு அதற்கு வேண்டிய ஆற்றல் கிடையாது: அவசியமும் ஏற்படவில்லை. இந்த நிலைமையிலே தான், ரங்கதுரையின் பூர்வோத்திரத்தைப்பற்றிக் குருமூர்த்தி காலட்சேபம் செய்யலானார்—அதற்கு ரசமான பக்கவாத்தியக்காரர்களும் சேர்ந்தனர்.

"கம்பெனி, காட்பாடியில் நடந்துகொண்டிருந்தது வசூல் கொஞ்சம் குறைவுதான். ஆனால் வசூலுக்காக அங்கு தங்கி இருக்கவில்லை, கண்டிராஜா, தயாராகிக்கொண்டிருந்தது, அந்தச் சமயத்திலே, குரு மூர்த்தி ஒரு நாள் உலாவப் போனார். (உலாவப்போனார் என்பதற்கு முழுப்பொருள், மாளிகைக் கடைக்காரருக்குத் தரவேண்டிய கடனுக்குச் சமாதனம் சொல்லி, ஐப்திக்கு வர வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப் போனார் என்பது.) உலாவப்போன இடத்தில் **நீதிநாதன் கோயிலில்**, உட்கார்ந்து கொண்டு, ரங்கு பாடிக்கொண்டிருந்தான், சாரீரம் சுகமாக இருந்தது—அவனிடம் பேசினதில் குணமும் நல்லது என்பது குருமூர்த்திக்குத் தெரிந்தது. தெரியவே, 'தம்பீ' இப்படிப்பட்ட சாரீர சம்பத்தை வைத்துக் கொண்டு, ஏன் இங்கு இருக்கிறாய்? இந்த நீதி நாதன் கோயிலிலே பெருச்சாளிகள் உலாவுமே தவிர, ஜனக்கூட்டமே அதிகம் இராதே—ஏன் நீ இங்கே, இருக்கிறாய்-நம்ம கம்பெனிக்கு வந்துவிடு" என்று கூற, "எனக்கு சங்கீதத்தில் பிரியம்-கலைக்குப் பணிபுரிய வேண்டும் என்பதிலே ஆர்வம்-ஆகவே அதை, இங்கிருந்தே செய்ய முடியுமே"

என்று வாதிட, "ஸ்பத்தியக்காரா! இடத்துக்கு ஏற்ற படி தானே இயல்பு அமையும் நீதிநாதன் கோயிலிலே இருந்தால், உன் சாரீரம், கொஞ்ச நாளில் 'தர்பார்' இராகம் பாட மட்டும்தான் பயன்படும் இந்த இடம் உனக்கு ஏற்றதல்ல, வா நமது கம்பெனிக்கு" என்று அழைத்து வந்தார், வந்த ரங்கன் கைகட்டி வாய் பொத்தி நின்று குரு மூர்த்தி, குளிக்கப் போனால் செம்பு எடுத்துக் கொடுத்து படுத்துக் கொண்டால், கைகால் பிடித்து சாப்பிட உட்கார்ந்தால், விசிறி கொண்டு வீசி, கம்பெனிக்குக் கிளம்பினால், கால் செருப்பும் கைக் குடையும் எடுத்துக் கொடுத்து, அடக்க ஒடுக்கமாக இருந்து, பாகவதரானான். ராஜபார்ட்டானால் இவ் வளவு பெரிய நிலைமைக்கு வந்த பிறகு, கம்பெனி நடப் பதே தன்னாலேதான் என்று எண்ணிக்கொண்டான், குருமூர்த்தி அவன் தலையில் ஒரு குட்டுக் குட்டி மூலையில் உட்கார வைத்துவிட்டு, "அடமுட்டாளே! பாரடா, நீ இல்லாமல், கம்பெனி, ஜாம் ஜாமென நடக்கின்றது, நமது கம்பெனி முறை, அடிப்படையே அப்படிப்பட் டது-யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும், கம்பெனி நடக்கும்" என்று நிரூபித்துக் காட்டுகிறார். ரங்கதுரை வெட்கமும் துக்கமும் தாங்காததாலே வெளியே தலை நீட்டுவதே இல்லை-என்று குருமூர்த்திக்காக வாதாடுவ தாக எண்ணிக்கொண்டு சிலர் பேசினர்-ஏசினர். இதற் கிடையில், திடீர் திடீரென்று புதிய புதிய நடிகர்கள் தோன்றுவர் கம்பெனியில் பிறகு, தோன்றிய வேகத்தை விட அதிக வேகத்தில் மறைவர்.

"ஒரு நாள், எனக்குச் சரியாகத் தாளம் போட வராது என்று ரங்கன் கிண்டல் செய்தான்"

"பலராமனாக நான் வேஷம் போட்டபோது கிருஷ் ணனாக ரங்கு நடித்தான்-நான் அதுதான் சரியான 'சான்ஸ்' என்று, நல்ல 'டோஸ்' கொடுத்தேன், பாட்டத்தில் இல்லாததை எல்லாம் சேர்த்துக்கொண்டு"

"இந்தக் கம்பெனியில் புகுந்து கொண்டு, அவன், ஏகபோகம் அல்லவா எதிர்பார்த்தான்"

கம்பெனியின் "மற்றவர்கள்" பேசலாயினர் இது போல.

ரங்கதுரை கிராமத்தைவிட்டு நகர வில்லை அவன் தாய்க்கு நோய் குணமாகவுமில்லை அவன் சாரீரம் வெளியே கேட்கவில்லை—இராக ஆலாபனர்—இராஜ பார்ட்—என்ற போஸட்டர்கள் விளம்பரம் எதுவும் கிடையாது.

"இருட்டில் தள்ளப்பட்டுவிட்டான்,'—சற்றுக் குதூலத்தோடு பேசினர்—அவன் குணமறியாதார்.

"இப்போது தான், கொஞ்சம் தாராளமாக உலாவ, உலக விஷயத்தை உணர, நிம்மதியும் வசதியும் கிடைத்தது"—அவன் எண்ணினான் அதுபோல்.

கம்பெனியும் நடைபெற்று வந்தது - ரங்கனின் காலமும் ஓடிக்கொண்டே இருந்தது.

இந்த 'மெழுகு நிலை'யை விட்டு வைக்கும் விருப்பம் இல்லாத சிலர் கொஞ்சம் 'அனல்' காட்டவேண்டும்-என்று கிளம்பினர்.

"கேள்விப்பட்டீர்களா விஷயத்தை? ரங்கதுரைக்கு ஒரு சான்ஸ் அடித்தாமே. கிராமபோன் ரிகார்டு கொடுத்திருக்கிறனும் - ஆயிரம் ரூபாயாம் பிளேட் ஒன்றுக்கு -" என்று கூறினர், குருமூர்த்தி யிடம். அவருக்குக் கோபம் வராமலா இருக்கும்! அவரு டைய கோபத்தைக் குறைப்பதாக எண்ணிக் கொண் டும், ரங்குவின் குணம் மாறவில்லை என்பதை அவருக் குக் கூறவேண்டுமென்று நினைத்துக்கொண்டும், சிலநற் குணம் படைத்தவர்கள், "பிளேட்டில் கூட. ரங்க துரை உங்களைப் பற்றிய புகழ்தான் பாடியிருக்கிறர்" என்றனர்; அவர் மனம் குளிரும் என்று எண்ணினர். விஷப்பயிரிடுவோர், "வேறு எதை அவன் பாட முடி யும்! அதைப் பாடினல் தானே "சான்ஸ்"—என்றனர். குருமூர்த்தி, இதை ஆமோதித்தார், எனவே இதனையே அனலாக்கி "ரங்கன் பிளேட் கொடுக்கப் போய்விட் டான் - அதிலே பணம் திரட்டப்பார்க்கிறன்" என்று பேசலாயினர், "பத்துப் பிளேட் கொடுத்தானும் அதற்கு அவனுக்குஒரு தங்கப் பிளேட் பரிசு தந்தார்களாமே"- ஒரு வதந்திப் பிரியர் கூறினர். "அந்தப் பிளேட்டிலே வைரம் ஏழு புதைத்துத் தந்தார்கள்!"-என்றுர் பிளேட் டின் எடை விலை சகலமும் தெரிந்தவர் போல நடித்த ஒருவர்.

" தங்கப் பிளேட்! அதிலே வைரம் இழைத்திருக் கிறது!! பயல், மண்டைக் கர்வியாகாமல் எப்படி இருக்க முடியும்" குரு மூர்த்தி எண்ணினர்,

"இவ்வளவும் தங்களால் தூபமிடுவோர் கூறினர்

"இதை வெளிப்படுத்த வேண்டும் தூண்டிவிடு வோர், பேசினர்.

"நான், இதையேதான் சொல்லிக்கொண்டு வருகி றேன். இதைச் சொன்ன உடனே, ரங்கதுரை மீது கோபம் பிறக்கிறது-பலபேர் ஏசுகிறர்கள், இப்படிப் பட்ட 'அந்தஸ்து' யாராலடா கிடைத்தது-அவரை மறந்து விட்டாயே-கம்பெனியை விட்டுப் போய்விடு கிருயே என்று கூடக் கேட்டனர்-என்றுர், ஒரு வெற்றி காணுதார்,

பிளேட் கிடைத்ததோ வெள்ளி! முலாம் தங்கம்! கிராமபோனில் ரங்கு பாடும் போது கூட, கம்பெனியில் இருந்தால் செய்யக்கூடிய கலைத் தொண்டிலே ஒருபகுதி யாவது பிளேட் கொடுப்பதின் மூலம் செய்வோம் என்று எண்ணிக் கொண்டுதானிருந்தான். அந்தச் செயலே துரோகச் செயலாகக் கூறப்பட்டது!

கம்பெனி நடந்து கொண்டிருந்தது ரங்கதுரை தனி உலகில் சஞ்சரிக்கலானுன்.

"ரங்கதுரை இப்போதெல்லாம், நந்தவனத்திலே தான் இருக்கிறன்."--ஒருவர் ஆரம்பிப்பார்,

"மலரின் மணத்தை ரசிக்கிறன் போலும்!"—இன் னெருவர், கிண்டல் செய்வார்.

மரகதம் என்று ஒரு குட்டி உண்டு..............என்று குறும்பை இன்னெருவர் துவக்குவார்

ஏனய்யா மறைக்கிறீர்? அவளுடன் கூடிக்கொண்டு குஷாலாகத் காலந்தள்ளுகிறன் - சொல்லேன்" வேறெ ருவர் சம்பூர்ணமாக்குவார்!

மரகதம், மாளிகையில் மன்னுர்சாமியுடன், மலர் தூவி விளையாடிக்கொண்டிருப்பாள்!

ரங்கதுரை ராக ஆராய்ச்சியிலோ, பிளேட்கம் பெனிக்காரரிடம் சொல்லி, கலை உயர்வுக்காக இதைச் செய்தால் நல்லது அதைச் செய்தால் நல்லது என்றும் கூறுவதிலே காலங் கழித்து வந்தான்.

"அதோபார், போகிருன்-ராஜபார்ட் ரங்கதுரை"— வீதியிலே ஒருவர் சொல்வார், வேருெருவர், "ரங்கன் என்று சொல்லேண்டா! ராஜபார்ட்டா, ராஜபார்ட்! அதெல்லாம் போய் ரொம்பக் காலமாகிவிட்டதடா!" என்பார்-ரங்கதுரையின் காதிலே, அந்தப் பேச்சு விழும்-ஆனல் அதேபோது அதே ஆசாமிதான். "ரங்குவிடம் மற்றவர்கள் இராகம் பிச்சை கேட்கவேண்டும்—ராஜ பார்ட்டுக்கு, ரங்குவைவிட்டால் வேறு யார் இருக்கிருர் கள்-ரங்குவின் ராக ஆலாபனத்தாலேதானே கம்பெனியே ஓடுகிறது—வேறு கம்பெனியிலே மட்டும் ரங்கதுரை இருந்தால், இன்னேரம் எவ்வளவோ 'பெரிய' வித்வா ஞகியிருப்பார்' என்றெல்லாம், புகழ்ந்தவர், உள்ளன் புடன் என்பது கவனத்துக்கு வரும்-வந்ததும், முதலில் கிளம்பிய பெருமூச்சை' ஒரு புன்னகை கிளம்பித் தோற் கடித்துவிடும்.

ராஜபார்ட் ரங்கதுரை பாகவதரின் மனப்போக்கு, கம்பெனி முதலாளியின் போக்கிஞல் தாக்கப்பட்டதி லிருந்து படிப்படியாக, மாறி மாறி, கம்பெனியில் நடிப் பதே மனக்கஷ்டத்தையும் வீண் சிரமத்தையுந்தான் தரு

கிறது என்ற எண்ணத்தை உண்டாக்கிற்று. இத்துட னும் நிற்கவில்லே. மனம்தானே! ரங்கதுரை இல்லா விட்டால் கம்பெனி நடைபெருதா—என்ற பேச்சி கம் பெனியில் இல்லாவிட்டால், ரங்கு நடமாடவே முடி யாதா என்ற பதிலொலியைத்தானே கிளப்பும்! ரங்கனின் பேச்சல்ல, அவன் நடவடிக்கை, அந்த பதிலேத்தான் தந்தது.

"கம்பெனி மூலம்' பெரும் புகழும் பணமும் பெற் கொண்டு ஓடிவிட்டான் ரங்கன் பணம் திரட்ட, சுகம் அனுபவிக்க" என்று பேசினர்—ரங்கனே ஏச! ஆனல் அவர்களே, "கம்பெனியில் அவனுக்கு அல்வளவு செல் வாக்கு, புகழ், வசதி, சுகம் தந்தார்கள்! அவைகளேப் பெற்றுக்கொண்டு, பெரும் புகழுடன் இருந்தவன் இப் படியானுனே! இப்போது அவன் விவசாயம் என்ன? அவனுக்கு ஏது செல்வாக்கு?" என்றும் பேசினர்—அதுவும் அவனே ஏசுவதாக எண்ணிக்கொண்டு கம்பெனி யில் பெரும் புகழும் பணமும் இருந்தும் ஏன், அதை இழக்க ரங்கன் துணிந்தான்?—இதை எண்ணுபவர்கள் இல்லே. சுகம், பணம் தேட, கம்பெனியைவிட்டு வெளி ஏறினுன் என்று பேசுகிருேமே, அந்தச் சுகமும் பண மும் அவனுக்குக் கம்பெனியில் கிடைத்ததே! கிடைத் ததை விட்டுவிட்டு, வேறிடம் செல்வானே?—என்றும் அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லே. எண்ணம் வர வில்லே.

"ராஜபார்ட் ரங்கதுரை, வாழ்க்கையை நடத்துவது என்ற அளவுக்குத்தான் வந்துவிட்டான். அவன்

ஏதேதோ செய்வான்—செய்யப்போகிறுன் என்றெல்லாம் எண்ணினேம்-கடைசியில் அவன் வெறும் ஆளாகிவிட்டான், பைத்யக்காரன், ஒருவிதத்திலே பார்த்தால் பரிதாபமாகக்கூட இருக்கிறது''—என்றனர் சிலர்.

"என்னமோ சூது செய்கிறுன்! ஏதோ சதி!'' என்று பேசினர் சிலர்.

"ரங்கதுரை, என்ன சதி செய்தாலும் நம்ம குருமூர்த்தியிடம் ஒன்றும் பலிக்காது'' என்றனர் சிலர்.

"அவர் சும்மா இருந்தாலும்,நாங்கள் சும்மா இருக்கமாட்டோம்'' என்றனர் வேறு சிலர்.

ரங்கதுரையோ, உள்ளூரில், வெற்றிலே பாக்குக் கடை வைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர் வெல்றிலே பாக்குக் கடை என்று போர்டு கிடையாது—ஆனுல், ஊரிலே, பேச்சு அவ்விதம்தான்.

வெற்றிலே பாக்குக் கடையின் மூலம் டபுள் ராயல், சிங்கள் ராயல் விளம்பரம் கிடையாது ரங்கதுரைக்கு! எப்படிக் கிடைக்கும்? ஆனுல் அதேபோது கரகரப்பிரியாவுக்கான சாதகம், புன்னுகவராளிக்கான சாதகம், இவைகளும் அவனுக்குஇல்லே. இலாபநஷ்டக் கணக்குப் பார்த்தான். சீராகத்தான் இருந்தது.

கம்பெனியின் நிலேமையைக் குருமூர்த்தி கணக்கிட்டுப் பார்த்தார்—அதுவும் பரியாகத்தான் இருந்தது,

"குருமூர்த்தி, மிகவும் திறமைசாலி. ரங்கதுரை பாகவதர் என்று ஒருவனை ராஜபார்ட்டுக்குத் தயார் செய்தார், எவ்வளவு அருமையாக இருந்தது தெரியுமா? என்னமோ பேதப்பட்டு ரங்கதுரை பாகவதர் விலகிவிட்டார். கம்பெனிக்குக் கொஞ்சம் நஷ்டந்தான்—ஆனுல் பார்த்துக் கொண்டேயிருக்கிறுர் நல்ல ஆளாகவும் சமயமாகவும் கிடைக்கட்டுமென்று; கிடைத்தால் மற்றேர் ரங்கனைப் பாகவதராக்குவார், —அவரால் முடியும்'' என்று பேசினர், நாடகம் பார்த்தோர். உண்மையிலே, அவரால், முடியும், ரங்கதுரைகளைப் பாகவதராக்க!

தன்னையேன் பாகவதராக்கவில்லே என்ற வருத்தம், சோமுவுக்கும் தாமுவுக்கும் உண்டு.

ஆனுல் குருமூர்த்தி என்னசெய்வார்! மோரிலிருந்துதான் வெண்ணெய் எடுக்க முடியுமே தவிர, பன்னீரிலிருந்துகூட எப்படி எடுக்க முடியும்! அதுபோலத்தான்! ரங்கன் கிடைத்தால் பாகவதராக்க முடியும்-சோமுவை அப்படி ஆக்கமுடியாதே! அது அவருக்குத் தெரியும்—சோமுவுக்குத் தெரியாது.

ரங்கதுரை பாகவதர் — பழையபடி — சாதாரண ரங்கன் ஆனுன். முன்பு பலபேர், அவனைக் கேட்டதுண்டு, ஏண்டாப்பா ரங்கா! இவ்வளவு நல்ல சாரீரம் இருக்கும்போது, ஏன் இப்படி மங்கிக் கிடக்கிறுய்—ஏதாவது கம்பெனியில் சேர்ந்தால், பிரமாதமான பேர் வருமே'' என்று, அதேபோல மீண்டும் கேட்கலாயினர், "ரங்கு! ஏன் இப்படி உன் திறமை பாழாகும்படி விட்டு

வைக்கிராய். ராஜபார்ட்டாக இருந்தாய், இப்போது, வெற்றிலை பாக்குக்கடை வைத்துக்கொண்டாயே நீ. தோடி பாடினால், கவலை ஓடிப்போகுமே! காவடிச்சிந்து நீ பாடும்போது, வைஷ்ணவன்கூட சைவனாகிவிடலாமா என்று எண்ணுவானே! இவ்வளவு திறமையையும் பாழாக்கிக்கொண்டு, சிசர் வேண்டுமா, வில்ஸ் வேண்டுமா, அசோகா பாக்குத்தூளா, சுகந்தா தூளா என்று கேட்டுக்கொண்டு, வெற்றிலைக் கடையிலே இருக்கிறாயே. இது சரியா?'' என்று கேட்கலாயினர்.

"அது சரிங்க, விஷயம் பெரிது. விளக்கமாகக்கூற, நேரமில்லீங்க, உங்களுக்கு, சோடா, ஐஸ் போட்டு தரட்டுங்களா, வெறும் சோடாவே போதுமா?' என்று கேட்டுக் கொண்டே, கடையிலே உட்கார்ந்துகொண்டிருந்தான், ரங்கன்.

வெற்றிலை பாக்குக் கடையிலே, முருகன் வேஷத்திலே எடுத்த போட்டோ, தொங்கிக்கொண்டிருந்தது. கம்பெனியில் ரங்கதுரை பாகவதரின் படம் இல்லை. சோமு, அந்தக் காலி இடத்தில் எந்தப்படம் புகுமோ என்று எண்ணிக்கொண்டிருந்தான். விநாயகர், படத்தைத் தொங்கவிட்டார் மானேஜர்.

கம்பெனிக்கும் நஷ்டமில்லை — குருமூர்த்தியார் கணக்குப்படி.

ரங்கனுக்கும் நஷ்டமில்லை—அவனுடைய நோக்கத்தின்படி

இடையிலிருந்தோர், ரங்கபாகவதரை, வெற்றிலைக் கடை வைக்கச் செய்துவிட்டோம் என்று பூரித்தனர்.

ரங்கனோ, வெற்றிலைக் கடையை நடத்தினால், அதனாலே என்ன? நான் கம்பெனியில் உழைத்தேன், அதனால் அங்கு உயர்ந்தேன், கம்பெனி முதலாளியிடம் மரியாதையும், அன்பும் காட்டினேன், அதனால் அவர் என்னை ஆதரித்தார்—பாராட்டினார். இப்போது அதே முறையில் நடந்துகொள்கிறேன் இங்கு-அதனால், கடை வீதியில், நாலு பேர், என்னை நல்லவன் என்றுதான் சொல்லுகிறார்கள், இங்கு இருக்கவேண்டிய முறைப்படி வெற்றிலை வாடாதபடி பார்த்துக்கொள்கிறேன், பாக்குக் கெடாதபடி பார்த்துக்கொள்கிறேன், சோடா கேட்டால், ஐஸ் கலந்து தரட்டுமா என்று கேட்கிறேன்—கடையைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துக் கொள்கிறேன்-இதிலே புதிய சிரமமோ; கவலையோ காணோமே! பாகவதர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடைநடத்தினாலும் நாடகமாடினாலும், எந்தக் காரியத்தைச் செய்தாலும், நல்லவனுக்கு, திறமைசாலிக்கு, உண்மை உழைப்பாளர்களுக்கு அவன் எந்தவேலையைச் செய்தாலும், அதிலே அவன் ஒரு குறிப்பிடத்தக்கவனாவான்—இது இயற்கை நீதி! இதை, பொறாமை பொச்சரிப்பு, கலகம், எதுவும் மாற்றாது! நாடகக் கம்பெனியில், ராஜபார்ட்டாக இருந்தேன். இப்போது கடைவீதியில், என்னை வெற்றிலை பாக்குக் கடைக்காரர் சங்கத்துக்குக் காரியதரிசியாக்கித்தான் இருக்கிறார்கள்'' என்றான்.

அவன் நிலை மாறியிருந்தது—அதை அவன் நிம்மதி என்றான்.

அவன் நிலை மாறியிருந்தது கண்டு, நிந்திப்பவர்கள் பார்! ஆசாமி என்ன கதியானான்! வெற்றிலைக் கடை

வைத்திருக்கிறானையா, ராஜபார்ட்!! என்று ஏளனம் செய்தனர்.

ஆனால் ஒருவராவது, ரங்கன் ராஜபார்ட் நிலையை இழந்ததும், குருமூர்த்தி கம்பெனி ரங்கனை இழந்ததும், அந்த இருவருக்கும் நஷ்டம், அல்ல என்ற போதிலும், நாடகக் கலைக்கு ஒரு நஷ்டம், அதை ஈடு கட்டவும் முடியவில்லை, என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்கவே இல்லை. கலை நுட்பம் உணர்ந்த மிக மிகச் சிறிய தொகையினருக்கு மட்டுந்தான், இந்த நஷ்டம் தெரிந்தது. அவர்கள் ரங்கனைப் பார்க்கும்போது, அதிகம் பேசவில்லை! ரங்கனும் அவர்களிடம் எதுவும் வாதாடுவதில்லை. அவர்கள், குருமூர்த்தியிடம் எதுவும் பேசுவதில்லை.

குருமூர்த்தி — ரங்கதுரை கூட்டுறவு, கம்பெனிக்கு இலாபமா நஷ்டமா, என்பதல்ல முக்கியமான பிரச்சினை, கலைத்துரைக்கு, அவ்விதமான கூட்டுறவு நிச்சயம் தேவையாயிற்றே, அது, எக்காரணத்தாலோ கெட்டு விட்டதே, கலைத்துறைக்கு நஷ்டந்தானே, என்பதை அந்தச் சிறு தொகையினர் மட்டும், உணர்ந்து உருகினர் ஆனால் அவர்கள் சிறுதொகை! என்றைக்கேனும் ஒரு நாள் சுரஸ்தானம் தவறி யாராவது நடிகன் பாடும் போது, குருமூர்த்தியின் கண்களிலே நீர் தளும்பும். "குருமூர்த்தி கம்பெனிக்கு நேற்று போயிருந்தனேப்பா, இப்போது நீ இல்லாததால் சோபிக்கவே இல்லை நாடகம்" என்று என்றேனும் யாரேனும் கூறும்போது, ரங்கதுரையின் கண்களில் நீ தளும்பும். அவர்களின் கூட்டுறவின் கடைசிப்பலன், அந்தக் கண்ணீர்த் துளிகள் தான் போலும்! ★

மூன்று கடிதங்கள்

★

அந்தக் கலியாணத்தைப் பார்த்தாகவேண்டுமென்று எனக்கு ஒரே துடிப்பு, கடன் வாங்கிக்கொண்டு கிளம்பினேன் கிள்ளிக்கு, என் அத்தை மகள் முத்தம்மாவையும் பார்த்து விட்டு வரலாம் என்று ஆசைதான் உங்களிடம் உண்மையைச் சொன்னால் தவறல்ல, சொல்லிவிட்டேன்! கலியாணம், வேம்புக்கும் அரசுக்கும்!!

கிள்ளியிலே, முத்து, மாணிக்கம், மீனாட்சி, அபுரூபம், அகிலாண்டம், இன்னாசிமுத்து, இபுராகிம், சொக்கன், மாரிமுத்து, என்று இப்படிப் பலர் உண்டு, எனக்குத் தெரிந்தவர்கள்; பல கலியாணங்களும் நடந்திருக்கின்றன; நான் சென்றதில்லை, ஓய்வு ஏது, இங்குதான் 'சர்வஜன சகாயநிதி'யில் எனக்குக் கடுமையான வேலையாயிற்றே, லீவு தருவாரா, மானேஜர் மார்க்கபந்து சாஸ்திரி, இந்த வேம்பு—அரசு கலியாணத்தை மட்டும் எப்படியும் பார்த்துத் தீரவேண்டும் என்று எனக்கு ஒரே ஆவல், ஏன் என்கிறீர்களா, வேப்பஞ்செடிக்கும் அரசஞ் செடிக்கும் கலியாணம் அது, அடிக்

கடி நடைபெறக் கூடியதா, கிள்ளிகள் மறைந்து கொண்டல்லவா வருகின்றன.

தற்செயலாகத்தான் இந்தக் கல்யாணச் 'சேதி' எனக்குத் தெரிந்தது—நான் மும்முரமாக ஈடுபட்டிருந்த பகுத்தறிவு படிப்பகத்தில், 'பலகணி' பத்திரிகையில் கொட்டை எழுத்தில் இந்தக் கலியாணச் செய்தி வெளி வந்திருந்தது, மாஜி மந்திரி பாஜிராவ் அதன் ஆசிரியர்,

கலியாணம் செய்து கொள்ளும் பக்குவமடைந்த எவ்வளவோ பேர். பணவசதி இல்லாததால், மனப்பசியைப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் - ஊராரைச் சொல்லுவானேன், எனக்கே ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால், முத்தம்மா இப்போது, இங்கு இருப்பாள்! இப்படி நிலைமை இருக்கிறது, கிள்ளியில், வேம்புக்கும் அரசுக்கும் கலியாணமாம், அதற்குத் தங்கநாணயம் தணிகாசலம் கச்சேரியாம், பொய்க்கால் குதிரையாம். போகர் பரம்பரை பொய்யாமொழியார் 'திரிசடையும் விரிசடையும்' என்ற காலட்சேபம் செய்கிறாராம் பாயாசத்துடன் விருந்தாம், எல்லாம் பக்தர்கள் உபயமாம், இந்தப் பக்தியையும் அதை எடுத்துக்காட்ட பணத்தையும் திரட்டும் பொறுப்பை, பூமிநாதமுதலியார் ஏற்றுக் கொண்டிருக்கிறாராம்!

இவ்வளவும் 'பலகணி'யில் வெளிவந்தது. இந்த வேம்பு அரசு திருமணம், இனியும் நெடுங்காலத்துக்கு நடக்கப் போவதில்லை, கண் இருக்கும் போதே பார்த்து விடுவோம், முடியுமானால், இந்த முயற்சி எவ்வளவு

பைத்யக்காரத்தனமானது என்பதை எடுத்துச் சொல்லுவோம் - யார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் முத்தம்மா இருக்கிறாள், கேட்க! என்று எண்ணினேன்' கடன் பெறுவது கஷ்டமான காரியமல்ல. முடிந்துபோன காரியம் கிள்ளி வந்து சேர்ந்தேன் — முத்தம்மாவைக் கண்டு பேசினேனா என்று கேட்கிறீர்களா? அதிகமாகக் கிளறுகிறீர்களய்யா, நீங்கள் என்ன செய்திருப்பீர்கள், உங்கள் முத்தம்மாவைக் கண்டால்!

வேம்பு - அரசு திருமணம் வெள்ளிக்கிழமை - நான் கிள்ளிக்கு நாலுநாள் முன்னதாகவே வந்து விட்டேன் - சிலரிடம் இலேசாகப் பேசிப்பார்த்தேன், 'பைத்யக்காரப்பிள்ளை!'' என்று கேலி செய்தார்கள்.

அத்தை வீட்டுத் திண்ணையில் ஆயாசத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தேன். சுருள்கத்தி சுந்தரவாத்தியார், மீசையை முறுக்கியபடி வந்தார் - கையிலே கடிதத்துடன்!

'சுருள்கத்தி' விளையாட்டிலே அவருக்கு நிகர், அந்தப் பக்கத்திலேயே யாரும் கிடையாது - சிலம்பக் கூடம் நடத்தி வந்தவர் - வாத்தியார் பட்டம் அதனால்தான். கிள்ளையிலும் அதைச் சுற்றி பத்து மைலுக்கும் அவர் வைத்ததுதான் சட்டம். "போக்கிரி! தன்னந் தனியாக இராக்காலத்திலே போகும் போது கத்தியாலே குத்திவிடுவான், நமக்கேன் அவனிடம் பகை" என்று பேசிக்கொள்வார்கள்; எதிரே பார்க்கும் போது, "வாத்தியாரே! சௌக்யத்துக்குக் குறைவு இல்லை" என்று அவரும் சொல்லுவார்.

"தம்பி! பட்டணத்துத் தம்பிதானேடா அது" என்று கேட்டுக்கொண்டே அருகே வந்தார், பார்வை பழுதாகிக் கொண்டு வருகிற வயது,

"ஆமாம், வாத்தியாரே! நான்தான், நடராசன்" என்றேன்.

"நல்ல வேளையாய்ப் போச்சுது - இதோ பாரு, ஒரே அடியா மூணு கடுதாசி வந்திருக்கு, முத்தாகிட்ட கொடுத்து படிக்கச் சொல்லிக் கேட்கலாம்னு வந்தேன். ராஜாவே இருக்கிறப்போ, ராணியைத் தேடுவானேன், படி -" என்று சொல்லியபடி மூன்று கடிதங்களைக் கொடுத்தார், பக்கத்திலே உட்கார்ந்தார்.

ஒரு கடிதத்தைப் பிரித்தேன். அனுமார் படம் போடப்பட்டு, அதனடியில் அனுமத் உபாசகர், ஜே ஹிந்து ஜோதிட சபா, என்று அச்சிடப்பட்டிருந்தது.

"படி! படி" என்று ஆவலுடன் கேட்டார்.

ஸ்ரீமான் சுந்தரத்துக்கு, பகவத் கடாட்சத்துடன், தெரிவிப்பது என்னவென்றால், இப்பவும் உன்னுடைய பெயர் வாசிக்கும், கடிதம்எழுதிய நேரத்துக்கும் பிறந்த வருஷம் மாதம் தேதி குறித்து அனுப்பி இருந்ததுக்கும் சேர்த்து, ஜோதிடம் கணித்துப் பார்த்தாகி விட்டது.

உம்முடைய 'ஜாதகம்' யோகா ஜாதகம்; அதாவது நல்ல கீர்த்தியும் பெயரும் இருக்கும், ஐஸ்வரியத்துக்குக் குறைவு இல்லை, அது இல்லை என்ற குறையும் உமக்கு இராது. ஆரோக்கிய விஷயத்தில், உமக்கு அவ்வளவு யோக ஜாதகமாக இல்லை.

இப்போது உமக்கு ஒரு நல்ல 'கிரஹம்' உதவியாக வந்து சேர்ந்திருப்பதால், கூடியசீக்கிரத்தில் தனம் தானியம் கிடைப்பதோடு, பெரிய இடத்திலே சிநேகமும்' மனச்சந்தோஷமும், கௌரவமும், ஏற்படும். ராஜ பார்வை ஏற்படலாம்; அதாவது சர்க்காரிடமிருந்து விசேஷமான சன்மானங்கள் கிடைக்கும்,

மற்றப்படிக்கு, உம்முடைய ஜாதகமோ, வேண்டியவாளுடைய ஜாதகமோ அனுப்பி வைத்தால், முழு ஆயுள் பலன் எழுதி அனுப்பப்படும். அனுமன் காணிக்கை ஆறு ரூபாய் அனுப்பவும் ஆசிர்வாதம்,

அனுமத் உபாசி ஜே ஹிந்து.

படித்துக்கொண்டுவரும் போதே 'வாத்தியார்' குதூகல மடைந்தார்! "சன்மானம்"-னு சொல்றாரே, தம்பி அதிலேயும் சர்க்கார்லே இருந்து சன்மானம்னு சொல்றாரே, எனக்கு எதுக்குச் சார்க்கார் சன்மானம் தரப் போவுது, நான் எனன எலக்ஷன்லே நிற்கறவனா? ராவ் பகதூரு பகல் பகதூரா? விளங்கலியே" என்று கேட்டார், நான் என்ன பதில் சொல்ல! "அளப்பு வாத்யாரே! வெறும் அளப்பு!" என்றுதான் சொல்ல வேண்டும். சொன்னால் கோபம் தானேவரும்? 'வாத்தியார்' தான் ஜோதிடர் எழுதி இருந்ததை அப்படியே நம்

பிப் பூரித்துக் கிடக்கிறாரே, மற்றோர் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

வந்தே மாதரம் ஸ்டோர்
வரதப்ப செட்டியார்.

என்று அச்சிடப்பட்ட தாளில் எழுதப்பட்டிருந்தது.

"வந்தே மாதரம் இஸ்ட்டோரா? அது என்ன தம்பி? வரதப்ப செட்டியாரு, யாரு......?" என்று வாத்தியார் கேட்டார், நான் கடிதம் எழுதியவர் பெயர், என்ன என்று பார்த்தேன், சின்னசாமி சேந்தமங்கலம், என்று இருந்தது, சொன்னேன்,

"அடடே! நம்மசின்னான்! என் மருமவனுக்குத் தம்பி—படி படி" என்றார் வாத்தியார், படித்தேன்.

"மகாராஜராஜஸ்ரீ வாத்தியாருக்கு சின்னசாமி நமஸ்காரம், நம்ம தலையிலே பெரிய இடிவிழுந்துபோச்சு அண்ணனைப் போலீசிலே பிடிச்சி இருக்காருங்க-கொலைக் குத்தத்துக்காக—வீடு பூராவும் இழவு விழுந்தமாதிரி இருக்குது, யாரார் காலிலேயோ, நானும் அண்ணியும் விழுந்து கும்பிட்டும் அண்ணனை விடமாட்டேன்னு சொல்லிவிட்டாங்க—அண்ணிக்கு மயக்கம், வந்துடிச்சி; போன தைமாசம் நீ ஒரு பாவிப்பயலை, அனுப்பி வைச்சதாலே வந்தது தான் இந்த ஆபத்து, பால்காவடி வேல்சாமியாராலேதான், அண்ணன் இப்ப, ஜெயிலில் இருக்குது—அவனையும்அடைச்சிவைச்சிருக்காங்க. எங்க வீட்டுத் தோட்டத்திலே, பெரிசா புதையல் இருக்குதுன்னு சொல்லி அண்ணனை ஏமாத்தி இருக்கிறான் அந்

தப்படுபாவி. அண்ணன் பைத்தியக்காரத்தனமா அதை நம்பிக்கிட்டு, அவன் சொன்ன படு ஐஞ்சு வயது பையனைக் 'காவு' கொடுத்துதாம் - பக்கத்துத் தெருவு பையன், போலீசுக்கு எட்டிப்போச்சு - அண்ணனைப் புடிச்சிகிட்டாங்க. உடனே ஒரு நூறு ரூபா, கை மாத்து வாங்கிவிட்டு, வரணும். மறக்காம, பணம் வாங்கி வர வேணும், இங்கே ஊரே. அண்ணன் மேலே விரோதமா இருக்கறதாலே ஒத்தைக் காசு கூட கடன் கிடைக்கல்லே, நம்ம போறாதவேளை, குடிமுழுகுது, உடனே வரணும்,

சின்னசாமி,

ஊரையே மிரட்டுகிற 'வாத்தியார்' பட்ட வேதனையைப் பார்த்து, எனக்குப் பரிதாபமாக இருந்தது 'ஐய்யய்யோ! என் தலையிலே இடி விழுந்துதே! கொலைக் குத்தம்'னா இலேசானதில்லவே! நான் என்னா செய்வேன்?" என்று கண்ணீர் விட்டபடி சொன்னார்.

மூன்றாவது கடிதத்தைப் பிரித்தேன் - வாத்தியார், தலையில் கைவைத்துக் கொண்டு, சோகமாக இருந்தார். படிக்கும் படிக்கூடச் சொல்லவில்லை - எனக்கும் கடிதத்தை ஒருவாறு பார்த்த உடன், படிக்கத் தோன்றவில்லை - மடித்து உறையிலே போட்டு. "சேந்தமங்கலம் போகிற ஏற்பாட்டைப் பாருங்க, வாத்தியாரே" என்றேன்.

"என்னடாப்பா சொல்றே!" என்று அழுது கொண்டே கேட்டார்.

"கிளம்பறேண்டாப்பா, கிளம்பறேன் - என் மரு மவன்கதி இப்புடி ஆச்சே..." என்றுர் - சொல்லிவிட்டு இந்த இழவிலே என்ன இருக்கு, படிடாப்பா, என் தலைக்கு இன்னும் என்ன தீம்பு வருமோ, படி" என் ருர். படிக்க என்மனம் இடம்தரவில்லே "இது ஒண் ணுமில்லே, வாத்தியாரே, யாரோ ஒருத்தரு, எதை எதையோ எழுதி இருக்கருரு. வேப்பமரம் அரசமரம் கலியாண விஷயமாக" என்றேன்.

"என்ன எழவோ, படிச்சிச் சொல்லு" என்ருர். மீற முடியவில்லே, படித்தேன்.

சுருள்கத்தி சுந்தரவாத்தியாருக்கு, அருள்வாக்கு அம்பலவாண குரு, எழுதியது.

நம்ம கிள்ளேயிலே, நடக்கற சகல காரியத்துக்கும், நான் உன்னே நம்பி இருக்கிறவன் என்பது உனக்கே தெரியும். அதனுலே தான் நம்ம அருள்சாமி கோயில் தோப்பு 'குத்தகை' இந்த வருஷம் உனக்கு கொடுத் திருக்கிறது. கவனப்படுத்தத் தேவை இல்லேன்னு நினேக்கறேன்,

கிள்ளேயிலே, பூமிநாதர் புண்ய காரியமாக, 'வேம் பரசு விவாஹ சுப முகூர்த்தம்' செய்கிருர் என் கிறதாகக் கேள்விப் பட்டு, மெத்தச் சந்தோஷமா னேன் - நம்ம தோப்புலே இருந்து அவர் கேட்கற இள நீரு, வாழை, தரவேண்டியது. கூடமாட இருந்து ஆக வேண்டிய காரியத்தைக் கவனிக்கவேண்டியது. நீ கிணத்துத் தவளே மாதிரி இருக்கறதாலே, உனக்கு ஊர் விவகாரம் தெரியரதில்லே! சொல்லிவைக்கறேன்.

இப்ப, ஒரு தறுதலேக் கூட்டம் கிளம்பி இருக்கு! சாமி இல்லே, பூதம் இல்லே, ஜோதிடம் பொய், ஆரு டம் அர்த்தமில்லே கோயில் வேண்டாம், கொளம் வேண்டாம்னு கூவிக் கொண்டு, நல்ல காரியத்தைக் கெடுக்கருனுங்க.

கிள்ளேயிலே நடக்கப்போகிற, வேம்பரசு விவா ஹத்தை பைத்தியக்காரத்தனம் என்று சொல்லி. பேசி, ஏசி, கலாட்டா செய்ய, அந்தப்பசங்க ஏற்பாடு செய் கிறதாக வதந்தி வந்திருக்குது. நம்ம மதம், எப்படிப் பட்டது, என்கிற விஷயம், அதுகளுக்கு என்ன தெரி யும்? நம்ம பெரியவர்கள் காலத்திலே இருந்து, ஜோதிடம் இருக்குது - அதிலே இருக்கிற விசேஷம், மகத்துவம், இந்த மதிகெட்டவனுக்குத் தெரியாது உன் னேப்போல இருக்கிறவங்களுக்குத் தெரியும். அதனுலே, நம்ம ஊரிலே எந்த ஒரு கலகமும் நடக்காதபடி, பார்த் துக்கொள்ள வேணும். வாய்மிரட்டு, கைமிரட்டு, எவைச் செய்ய வேணுமோ அதைச் செய்து, நம்ம பூமி நாதர் காரியத்துக்குக் குந்தகம் வாராதபடி பார்த்துக் கொள்ள வேணும், இங்கே இருந்து இந்த கழகத் தானுங்களுடைய ஆள், ஒருத்தன், முன்னதாகவே, கிள்ளேக்கு வந்திருக்கிருனும்—நடராசன்னு பேராம் — ஆசாமியை, முதலிலே கவனிச்சுக்கோ - பிறகு, மத்த துங்க தலே காட்டாது. கேசுக்குப் பயப்படாதே, நான் இருக்கிறேன்.

இப்படிக்கு,
குருநாதன்.

சிரமப்பட்டுத்தான் படித்தான் — அவ்வளவு சொகத்துக் கிடையிலேயும், வாத்தியார் சிரித்தார்.

"தம்பி! மூனு கடுதாசியும் ஒண்ணு வந்ததே-என் கண்கள் தொறந்தது. இந்த ஜோசியக்காரனுங்க, சாமி வேஷக்காரனுங்க, குருவுங்க, இவங்களை நம்பறது, பைத்தியக்கார வேலே! இப்பத்தான் புரியுது. மூணுரூபாயை முள்ளங்கி பத்கமாதிரி அனுப்புனேன்-அந்த அனுமார் காரன் எனக்கு 'வெகுமானம்' கிடைக்கப்போவுதுன்னு ஒரு அண்டப்புளுகு கடிதம் அனுப்பினுன்-அங்கே என் மருமவன், சாமியார் பேச்சாலே கொலைக்காரனுனன்! இப்ப இந்த அகப்பட்டதைச் சுருட்டற ஆசாமி உன்னை உதைக்கச் சொல்லி, எனக்குத் தாபம் போடருன். பார்த்தாயா? வேடிக்கையை. நான் ஒரு மடயன். இப் படிப்பட்ட விஷயத்தை எல்லாம், நம்பிக்கிட்டுக் கிடந்தேன்—புத்தி வருது இப்பத்தான்" என்ருர்.

எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில், என்னிடம் நூறு ரூபாய் இருந்தால், அவரிடம் அப்போதே கொடுத்து சேந்தமங்கலம் அனுப்பிவிடுவேன்—நான் தான் மாதம் நாற்பதுக்கு மார் உடையும்படி வேலை செய்பவனுயிற்றே.

சுக்கு நூருகக் கடிதங்களைக் கிழித்துப் போட்டபடி வாத்தியார், "இந்த ஜோசியக்காரனுங்க, சாமியார்டற பசங்க, கொளம் குட்டையைக்காட்டி மூட்டை அடிக்கிறவங்க, இவனுங்களை நம்பின, நம்பினவன் தலையிலே இடிதான் விழும்—இதோ், என் தலையிலே விழுந்ததே, தெரியவில்லையா?" என்று கூறிக்கெண்டே போகிருர்.

முத்தம்மாவின் குரல் கேட்கிறது, குழந்தையைக் கூப்பிடுகிருள்.....என்னைத்தான்......எனக்கல்லவா, அவளுடைய 'பிளான்' தெரியும்! போகிறேன்!!

*

திருமலே கண்ட திவ்ய ஜோதி!

★

[மதுரை மன்னன் திருமலையின் மாய மரணம் பற்றிய குறிப்புகளைக் கொண்டு சித்தரிக்கப்படும் ஓவியம் இது. இட்டுக் கட்டியதோ என்று ஐயப்படுவோருக்கு, எம். எஸ். சுப்ரமணிய ஐயர் தீட்டிய கன்னியர் வீரம் என்ற சிறு நூலில், பட்டர் புதல்வி என்னும் சிறு கதையைப்பார்க்கும்படி கேட்டுக் கொள்கிருேம்]

[சுந்திரவல்லி]

மதுரை மீனுட்சி அம்மன் கோவில் பிரதம பட்டாச்சாரியின் திருமகள் நான். பெயர் சுந்திரவல்லி. இளமங்கை—எழில்மிக்கவள்—பூங்கொடி—ஊர் புகழ்கிழது என்னை. இதோ என் எதிரில் இருப்பது விஷக்கோப்பை. தங்கக் கோப்பை, மன்னன் முன்பு தந்த பரிசு இது—அப்பாவுக்கு! எனக்கும் பரிசு தந்திருக்கிருன், விஷம்!

"குழந்தை விக்ரஹம் போலிருக்கிறது! பாப்பா!! வாம்மா, வா! ஏன் பயம்? ஓடிவா, ஓடிவா! இதோ பார், உனக்குத்தான் மல்லிகை-வா!நான் சிறுமி, பட்டாச்சாரி மகள் — அவர்! — நாடாளும் மன்னன். அவருடைய அன்பு மொழி எனக்குத் தேனுக இனித்தது. அப்பா பூரித்துப் போவார். என்னைப் பிடித்திழுத்துக்கொண்டு

போய் மன்னர் முன் நிறுத்துவார். அவர் என் முக வாய்க்கட்டையைப் பிடித்துத் தூக்குவார், கன்னத்தைக் கிள்ளுவார். துவள்வேன், தூக்கி உட்கார வைத்துக்கொள்வார் மடியிலே! ஊரார் சுந்திரவல்லி மஹா அதிர்ஷ்டக்காரி! மகாராஜவுக்கு அவள்மீது உயிர்—என்பார்கள். பலநாள், எனக்குப் பழமும், பட்சணமும், மல்லியும், முல்லையும் கொண்டு வந்து தருவார். ராஜ காரியங்கள் ஏராளம். என்றாலும், என்னைப் பார்க்கவும், விளையாடவும்,எப்படியோ அவருக்கு நேரம் கிடைத்தது சிறுமிதானே நான்—எனக்கு ஒரே பெருமை! என்னைப் போன்ற சிறுமிகளைப் பார்க்கும்போது, பெருமையாகச் சொல்வேன்,உங்கள் ஆத்துக்கு ராஜா வர்ராரோ எங்காத்துக்கு ராஜா வரார்—என்னோடு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருப்பார், என் மேலே பிராணன், மகா ராஜாவுக்கு — என்றெல்லாம் சிறுமிகளே குரும்புக்காரிகள் கேலி பேசும் — சுந்திரியோட கண் இருக்கே, அது ராஜாவை மயக்கிவிட்டிருக்கும்'' என்று ஒருத்திச் சொல்வாள். கோடி ஆத்து கோமளம், சுந்தரி சிரிக்கிறப்போ கன்னத்திலே குழிவிழறது பாரடி'' என்பாள். சுந்தரியோட கல்யாணத்துக்கு ராஜா, நிறைய சம்மானம் செய்வார்'' என்று எல்லோரும் பேசிக்கொண்டனர்.........!

இந்தத்தென்றலால் நான் வளர்க்கப்பட்டேன் பருவ மங்கையுமானேன்! மன்னன் எப்போதும் போலவே வந்துக்கொண்டிருந்தார்—“சுந்தரி—சுந்தரி'' என்று கனிவுடன் கூப்பிடுவார், நான் நமஸ்காரம்செய்துவிட்டு, உள்ளே போய்விடுவேன்—அப்பாவும் அவரும் பேசுவர்

கள்—நான் வீட்டு வேலைகளைச் செய்துக்கொண்டே இருப்பேன், சிறுமியாக இருந்தபோது இருந்தபடி இப்போது முடியுமா? — அடேஅப்பா, அப்போது, ஒரே வேடிக்கைதானே! அதை எண்ணிக்கொள்வேன், புன்சிரிப்புடன். போகும்போது ஒரு முறை நமஸ்காரம் செய்வேன். அவர் மட்டும் அடிக்கடி ‘‘சுந்தரி, சுந்தரி என்று கூப்பிட்டபடி இருப்பார்...!

அப்பாவிடம் எனக்கு பிரமாதமானக் கோபம் பிறந்தது, அரசர் மீது குற்றம் கண்டுபிடிக்கத் தொடங்கினார். யாராரோ அப்பாவின் மனதைக் கெடுத்தனர்—இவரும் பிறகு பலருடைய மனதைக் கெடுக்கலானார். மன்னர் எங்கள் நாட்டுக்கு வந்து கிறிஸ்தவப் பாதிரிகளுடன் கூடிக்குலாவுகிறார் என்பதுதான் புகார்.இதிலே என்னத் தவறோ தெரியவில்லை!! கிறிஸ்தவப் பாதிரிகள் என்றால் என்ன? அவர்களும் மனிதர்கள்தானே! ஏன், அப்பாவுக்கும் மற்றும் சிலருக்கும் அருவறுப்பு-நான் கேட்டே விட்டேன் அப்பாவை—அவர், “பைத்தியம்! உனக்கென்னடி தெரியும்! நம்ம புராதன மதத்துக்கு வைரிகள் இந்த கிறிஸ்தவர். நம்ம மதத்திலே உள்ளவாளை ஏழை எளியவர்களையும் விவரம் அறியாதவர்களையும் பிடித்து, கிறிஸ்துவ மதத்திலே சேர்த்துக்கொள்கிறார். இந்த அக்கிரமத்தை ராஜன் அனுமதிக்கிறான். இவனே, கிறிஸ்தவனாகிவிடுவானோன்னு நேக்கு பயமாயிருக்கு—ஊர் முழுவதும் இதைப்போலத்தான் பேசிக்கொள்கிறா'' —என்று சொன்னார்.இவ்வளவுதானா! தங்கக்குன்றப்பா மகாராஜா!அவரைச் சந்தேகிப்பது மகாதோஷம் என்று நான் வாதாடி வந்தேன்......!

ஒரு நாள், அப்பா வெளியே போயிருந்தார்—அவர் வந்தார். நமஸ்காரம் செய்ய வேண்டுமே—ஊராளும் ராஜா வந்திருக்கிறார், உட்காருங்கள் என்று நான் சொல்லி உட்கார்ந்தார். நான் அவர் கண்களில் பட்டும் படாததுமாக நின்றுகொண்டிருந்தேன்....!

“அப்பா, இல்லையோ?...சரி வருவார், சீக்கிரம்” என்று சொல்லியபடி, மன்னர் நான் இருந்த பக்கம் கவனித்தார்—என்னையுமறியாமல், கூச்சம்-தலை குனிந்தபடி நின்றேன். “ஏன் கூச்சமோ? சிறு பெண்ணாக இருக்கும்போது எவ்வளவு விளையாடுவாய்? மான் குட்டி போல! நான் என்ன புது மனிதனா என்னைக் கண்டு, ஏன் இவ்வளவு வெட்கம்?” என்று கேட்டார்.

நியாயந்தான்! — ஆனால் இந்த பாழாய்ப்போன வெட்கம், என்னைப் பிடித்து உலுக்கிவிட்டது. கொஞ்சம், ஜலம்” கேட்டார். ஓடினேன் உள்ளே—வெள்ளிச் சொம்பிலே வெட்டிவேர் தண்ணீர் நிறப்பி, ஊஞ்சலருகே கொண்டு சென்றேன்—அதை வாங்கும்போது, அவர் கரம், என் கரத்தின் மீது படுவதுபோலிருந்தது- ஊஞ்சலின்மீது செம்பை வைத்துவிட்டு, விலகி நின்றேன். புன்னகையுடன் அவர், “அடே அப்பா! எவ்வளவு ஜாக்கிரதை! நான், என்ன பூதமா?. பிசாசா? என்றார். நான் என்ன பதில் சொல்வது?—புன்னகை புரிந்தேன். அப்பா வந்தார். எனக்கு அப்போதுதான் மன அதிர்ச்சி மறைந்தது...பிறகு அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்...!

அப்பா இல்லாத வேளையில் இதுபோல அவர் வருகிறபோதெல்லாம் எனக்குப் பெரிய மன நெருக்கடி

யாகவே இருந்துவந்தது. வேண்டுமென்றே, அப்பா இல்லாத நேரமாகப்பார்த்து வருகிறாரோ, தெரியவில்லையே, என்று சந்தேகம் கிளம்பிற்று.—இலேசாக திகிலும் பிறந்தது. ஏனென்றால், மகா உத்தமர், தர்மிஷ்டர் என்றாலும், மன்னருக்கு மாதர்களிடம் மையல் அதிகம் என்று அப்பாவும் மற்றவர்களும் பேசிக்கொண்டது எனக்குத் தெரியும். முன்னூறு அழகிகள் இருக்கிறார்கள், அந்தப்புரத்தில் என்று சொன்னார்கள். நானோ பருவ மங்கை! அவரோ அடிக்கடி நான் தனியாக இருக்கும்போது வருகிறார். அன்னியராக இருந்தால் அப்பா இல்லை, என்று ஒரே வார்த்தையில் அனுப்பிவிடுவேன். அரசர்! குழந்தைப் பருவம் முதல் விளையாடிய பழக்கம்! எப்படி அலட்சியப் படுத்த முடியும்! ஆனால்......! என் அடிவயிற்றிலே அடிக்கடி இந்த ‘ஆனால்’ கிளம்பும்! ஆனால் மறுகணம், செச்சே! என் அப்பாவுக்குச் சமானம்—என்ற எண்ணம் தோன்றி, சாந்தி உண்டாகும்....!

என்ன அவசரமாகத்தான் இருக்கட்டும், இப்படி, வெள்ளிச் செம்பை நானாகத் தருவதற்குள் அவர், என் கரத்தைத் தொடுவதா—நான் கொஞ்சம் முகத்தைச் சுளித்துக்கொண்டேன். அவர் “செச்சே! இதென்ன இவ்வளவு பயம்! பைத்தியம்! உன் அப்பா, ஜெபதபாதிகளை முடித்துக்கொண்டு வீடுவர வெகு நேரமாகும் என்றார்” என் மனம் பதறிவிட்டது. விலகினேன் விடவில்லை—கரத்தை உதறித் தள்ளினேன், கருத்துப் புரிந்துவிட்டது. அவரோ...என்ன சொல்வேன்—அணைத்துக் கொண்டார்—பிறகு—கூவுவேன் என்று மிரட்டினேன்,

கோமமளமே என்று கொஞ்சலானார்—இதென்ன அக்ரமம் என்றேன், அவர் காதல் பேசினார். என்மீது கோபித்து என்ன பயம் கண்ணே! தேவரும் மூவரும் கூட மதிமயங்கக் கூடிய அழகை உனக்குத் தந்த அயன் மீது கோபித்துக்கொள். அல்லது உன் அழகைக் காண எனக்குக் கண்ணளித்த கடவுளின் மீது கோபித்துக் கொள், நான் மன்னன், ஆனால் மனிதன்! முனிவனுமல்ல! மோகநாங்கி!-என்றார்-அரசர் பேசும் பாஷையா இது—என் உடல் துடித்தது-நான் துணிந்து அவரைக் கண்டித்தாக வேண்டும்-விலகினேன்-விழியிலே நீர் ததும்பிற்று.....!

"இந்த அக்ரமம் ஆகாது—அரசரின் புத்தி இப்படி அழியக் கூடாது" என்று சொன்னேன். கோபமாகத்தான். ஆனால் உரத்தக் குரலில் அல்ல — வெளியே தெரியக்கூடாதே பதில் பேச வாயில்லை — ஆனால்..... என்னை விடவில்லை. உன்னிடம் பிச்சை..." என்று கெஞ்சினார்... இந்தத் துர்ப்பாக்கியனைச் சாகடிக்காதே என்றார் சரசமாக. எனக்கும் கோபம் ஏசினேன். 'என் மீது என்ன கோபம்— தவறு சுந்தரி, கரும்பு வில்லோன் என்னைக் கொல்கிறான்" என்று கூறினார். ஆத்திரம் எனக்கு, கரும்பு வில்லோன் இப்படித்தான் கதியற்ற கன்னியைக் கற்பழிக்கச் சொல்கிறானா! கபடத்துக்கு கவசமிடாதீர், காவலரே! விநாசத்தைத் தேடிக்கொள்ளாதீர், அழிந்து போவீர் — நிச்சயமாக — சத்தியமாக" என்று கூறினேன் அழுதபடி. பயம் போய்விட்டது கோபம் அதிகரித்தது. ஓடி வந்து என்னை பிடித்திழுத்தபடி, 'அழிவேனா! நானா? உன்னைப் பெறாவிட்டால்தான் பேரழகி நான் அழிவேன்—பெற்றால் பெரு வாழ்வு, புது வாழ்வு இருவருக்கும் என்றார். வெறுப்பு எனக்கு-அவர் பிடியிலிருந்து விடுபடக்கூட முயற்சிக்கவில்லை- வாழ்வு! எனக்கு கற்பிழந்தபிறகு என்று சொன்னேன். என் கூந்தலை கோதியபடி அவர், "கற்பு! யார் வேண்டாமென்பர் அந்த பூஷணத்தை—என்னைக் கணவனாகக்கொள்— பதி சொல் தவறாத உத்தமியாக வாழ உன்னை அழைக்கிறேன் வெறும் உல்லாசத்துக்கு அல்ல" என்றார். ஒரு கணம் திகைத்துப் போனேன், என்ன சொல்வது என்று தெரியாமல்! கொடாதாமே! திருமணம் செய்துக்கொள்ளச் சொல்கிறாரே என்று யோசித்தேன். வார்த்தைகள் வெளிவரத் தாமதமாயின — அவருடைய சேட்டைகளோ துரிதமாயின...!

"அரசே! குலம் அறியாது பேசுகிறீர்" என்றேன், அணைப்பிலிருந்து என்னை விடுத்துக்கொண்டபடி அழகு அறிந்து நாடுகிறேன். சுந்தரி! அவ்வளவுதான் எனக்குத் தெரியும் பேச என்றார். அவருடைய மயக்கத்தைப் போக்க மேலும் பேச எண்ணி, அழகு கண்டு அகலிகையிடம் மோகம் கொண்ட இந்திரன் என்ன கதியானான், தெரியுமே உமக்கு, என்றேன். அவர் என் வாயை அடைக்கும் விதமாக உனக்கு ஒரு [illegible] இல்லையே சுந்தரி! அதை மறந்து பேசுகிறாயே என்றார். ஆம் நான் கன்னி! அவரோ கல்யாணம் செய்துக்கொள்ள அழைக்கிறார். ஒரு வேளை, என்னை மனைவியாகக் கொள்ளத்தான் விரும்புகிறாரோ, என்றெல்லாம் எண்ணம் பிறந்தது. ஆனால் அதை அவர் அப்[illegible]வா கூற வேண்டும். இப்படி என்னைத் தனியாகச் சந்தித்தா...

7

முறை வேண்டாமா எதற்கும். கோபம் குறைந்தது
பரிதாபமாக இருந்தது. எனவே, நான் என் தந்தை
ஆதீனம், என்று கூறி என் நிலைமையை விளக்கினேன்
அவர் கொஞ்சும் மொழியில், நீ உன் தந்தை ஆதீனம்.
அவரோ சாஸ்திர ஆதீனம் சாஸ்திரமோ பிரம்மதல
மங்கையை க்ஷத்திரியன் மணம் செய்துகொள்ள இடங்
தராது—என்ன செய்வது என்று கேட்டார். எனக்கு
அவருடைய வாதம்கூட சிறிது மகிழ்ச்சி தந்தது. ஆனால்
அவருடைய செய்கை—எனக்குக் கோப மூட்டியது.
கடுமையாகவே "என்ன செய்வது—மனதை அடக்கு
வது—தர்மத்துக்குக் கட்டுப்படுவது—பாப தோஷத்
துக்குப் பயந்து நடந்துக்கொள்வது" என்று சொன்
னேன்.நான் சொல்லச் சொல்ல அவர் என்னை நெருங்கி,
ஏட்டுச்சுரை எல்லாம் ஏட்டுச் சுரையடி"எழிலரசி என்று
கூறிவிட்டு, கட்டிப் பிடித்தார்-காட்டு முறை இது-வேண்
டாம் என்று கூறியபடி விலகினேன்—சுவற்றிலேகூட
மோதிக்கொண்டேன்—மேலேபோக இடமில்லை. அவர்
விடவுமில்லை — ஐயோ என்று அலறினேன், ஆஹா!
என்று புகழ்ந்தார் — இதழை இதழ் தொட்டது. துடித்
தேன்--அடபாவி! என்று சபித்தேன். என் அன்பே
—என்று சரச மொழி பேசிவிட்டு...! அக்ரமம்—என்று
கூறியபடி என்பலம் கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளி
னேன், ஆனால் நான்தான் கால் இடறிக் கீழே விழுந்
தேன்—அழிந்தேன். நான் அழுத கண்ணைத் துடைத்த
படி பாவீ! பாதகா! என்று ஏசினேன். அமிர்தம் தேவா
மிருதம் என்று அந்தப் பாபி பஜனை பாடிக்கொண்
டிருந்தான். உள்ளே சென்று, படுக்கையில் சென்று
படுக்கையில் புரண்டு புரண்டு அழுதேன்-சுந்தரீ-சுந்தரீ-

சுந்தரீ-என்று விதவிமாகக் கூறினார்—காலால் எட்டி
உதைத்தேன் கதவை—உரத்தக் குறலில் சிரித்துவிட்டு,
வெளியே போய்விட்டார் இரத்தம் குடித்த புலிபோல!
நான்? நானா? நாசப்படு குழியிலே தள்ளப்பட்ட நான்
என்ன செய்வது—நான் யார் இனி? மதுரை மீனாட்சி
அம்மன் கோயில் பிரதம பட்டாச்சாரியின் மகள் சுந்தர
வல்லி, மன்னனின் காமப் பசிக்கு பலியாகப்பட்டுவிட்ட
பாவியானாள்! என்ன செய்வது ராஜ சர்ப்பம் தீண்டி
விட்டது. துடைக்க முடியாத கரைபடிந்துவிட்டது.
அரசன் சாமான்யன்-சகல கலா வல்லவன் சாமான்யன்
நல்லவன், கெட்டவன் என்று ஆடவர்களை எப்படி
வேண்டுமானாலும், நிலையையும் குணத்தையும் கொண்டு
பிரித்துக் காட்டலாம். ஆனால் பெண்கள் விஷயத்திலோ
ஆடவர்கள் கொள்ளும் போக்கைக் கவனித்தாலோ
செச்சே! எல்லா ஆடவரும் ஒரே தரமாகத்தான் இருக்
கிறார்கள். இந்த அரசன், நான் பந்து ஆடுவதைக்
கண்டு மகிழ்ந்தவன்தான், "பாப்பா, பாப்பா," என்று
கூப்பிட்டவன்தான் இப்போது, காமப் பசி பிடித்து
என்னை நாசம் செய்துவிட்டான் நிலைமையை அறிந்து
இனி என் கதி!...!

மறுமுறை அந்த மாபாவியின் முகத்தை ஏறெடுத்
தும் பார்க்கலாகாது என்று தீர்மானித்தேன். அப்பா
வருவதற்குள் என் அலங்கோலமான நிலைமையைத்
திருத்திக்கொண்டேன்—தலைவலி அதனால்தான், முகத்
திலே மாறுதல் என்று தந்திரம் பேசினேன் அப்பா,
மீனாட்சி கோயிலிலே வந்திருந்த பக்தர்களின் பெருமை
யைப் பற்றி பேசிக்கொண்டே பிரசாத வகைகளை வைத்
தார்—அம்பிகே! என்னை இந்த கதிக்கு உள்ளாக்கினாயே

—என்று எண்ணி ஏங்கினேன், அப்பா வேதாந்த விவகாரத்தில் ஈடுபட்டார்—வேதனையில் நான் மூழ்கிக் கிடந்தேன். வேட்டைக்காரன் அரண்மனையில் 'தர்பார்' நடத்தியிருப்பான்! ஊரார்! அவர்களுக்கென்ன......!

மறுபடியும் மறுபடியும் புலி வந்தது! நான் என் கோபத்தையும் வெறுப்பையும் வெளிப்படையாகக் காட்டினால், அப்பா இல்லாத சமயங்களிலேயோ, அப்பப்பா! அரசனாகவா இருந்தான், சித்ரவதை செய்தான். செத்தேனே என்று அவன் கொஞ்சுவது கருந்தேள் கொட்டுவதுபோலிருந்தது சரி, இனி, நிலைமையை வேறு விதமாகவாகிலும் சரிப்படுத்திக்கொண்டாகவேண்டும் என்று எண்ணி, திருமணப் பேச்சை துவக்கினேன்—அதற்குத்தடை ஏது என்றான்—அந்த ஏற்பாட்டை துரிதப்படுத்தச் சொன்னேன். அவன் அதற்காகவே 'அச்சாரம்' பெற்றவண்ணம் இருந்த நான் உரிமையோடு பெறலானான், நான் என்ன செய்வேன். இனிப்புப் பண்டம் கசக்கலாயிற்று, பால் புளித்தது! பசி குறைந்தது! பாதகன் எனக்குப் 'பரிசு' தந்துவிட்டான். நான் கருவுற்றேன்—அவன் சொல்லத்தான் அதையும் அறிந்துகொண்டேன், பயத்தால் முகம் வெளுத்தது. அப்பா இதைக் கண்டார். "ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" என்ற பதில் எத்தனை நாளைக்குப் பலன் அளிக்கும் உண்மையைக் கூறவேண்டியதாயிற்று.

"சுந்தரி! ஏன் சோபிதமிழந்து கிடக்கிறது? கசங்கிய தாமரைபோலாகி இருக்க என்னம்மா காரணம்?"

"ஒன்றுமில்லையப்பா"

"என்னம்மா ஒன்றுமில்லை? தேகம் காந்தி மயங்கிக் காட்டுகிறது. விழி சதா ஏதோ மிரட்சி தூங்குவதில்லை சரியா, மனதிலே உனக்கென்னம்மா விசாரம்"

"அப்பா என்னை வேதனைக்காளாக்காதீர்கள்..."

"பைத்தியமே! காரணம் கூறாமல் கலங்கி நிற்கிறாயே ....கண்களிலே...நீர்...என்னம்மா"

"அப்பா! நான் ஓர் பாபி!"

"பாபியா? பைத்தியமே! பித்தமா உனக்கு?"

"பித்தனின் காமப் பசிக்கு இரையான பேதையப்பா, நான்—படுகுழியில் தள்ளப்பட்டேன்—பாவியால்—"

"காமப்பசி! புலி! படுகுழி! என்னம்மா பிதற்றுகிறாய்!"

"ஐயோ, அப்பா, நான் எப்படிக் கூறுவேன்... என்னை—மன்னன் எவ்வளவோ தடுத்தும் பலாத்காரமாக"

"சிவ, சிவ! என்ன பாவம் என்ன கர்மம் இது! திருமலையா இத்தியசெயல்செய்தான்! அழியாத அபகீர்த்தியைஉண்டாக்கிவிட்டான்..என் குலக்கொழுந்தைக் கெடுத்தானா! மகளைக் கெடுத்தானா மாபாவி—அடே பாதகா! வஞ்சகா என் குடும்பத்தைக் கெடுத்தாயே? மகளே பேதைப் பெண்ணே! எப்படி இடம் கொடுத்தாய், உன் கையில், ஒரு கத்தி கிடைக்கவில்லையா? அவனைக் கொல்ல உன்னால் முடியாவிட்டாலும், நீ செத்திருக்கலாமே! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லி இருந்தால்—என் குலப் பெருமை, குடும்பப் பெருமை, எல்லாம் போயிற்று. எப்படி தேவி இந்தத் தீயகாரியம்

நடைபெற அனுமதித்தாய்? உன்னைத் தொழுதுவரும் எனக்கா இந்த அபகீர்த்தி, என்மகள், விபசாரி—கற்பிழந்தவள்...''

"அப்பா! அந்தக்கபடன், என்னைக் கலியாணம் செய்துகொள்ளவும் சம்மதம் என்று பேசுகிறான்''

"உறக்கப் பேசாதடி'' புத்தி யுக்தியற்ற பேதையே! கலியாணமாம்—ஜாதி, ஆசாரம்—சாஸ்திரம்—எல்லாம் என்ன ஆவது?—''

"இப்போது, எல்லாம் நாசமாகத்தான் போயிற்று''

"திருமலை! உன்னைப் பழிவாங்காதிருக்கப் போவதில்லை —நாடாளும் உன்னை, நான் நாசமாக்காவிட்டால், என் பெயர் சந்திரசேகர பட்டர் அல்ல. மமதை கொண்டு வேதியர் குலம் என்றும் பாராமல், உன் நண்பன் என்றும் யோசிக்காமல், தேவி மீனாட்சி கோயில் திருப்பணி செய்யும் பட்டர் என்பதையும் பார்க்காமல், என் மகளைக் கெடுத்தாய், உன்னை நான் பழிவாங்கா முன்னம், ஊண் உறக்கம் கொள்ளேன்—இது சத்தியம்—தேவிமீதானை—உன்னைத் தொலைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்.

"தேவி கோயிலுக்கு வா, தெளிவற்ற பெண்ணே! ஆலயம் வா! பக்தர்களை அழைக்கிறேன் உன்னை மன்னன் கெடுத்த பாபக் கிருத்திய தீதை எடுத்துக்கூறி, பாபிக்கு என்ன தண்டனை என்று கேட்கிறேன். கற்பழித்தும் காதகனையா, காவலனாகக்கொள்கிறீர்? என்று கேட்கிறேன் ... கல் மனம்கொண்டவனும் கண்ணீர் விடாமலிருக்க முடியாதே; கல்லால் அடித்துக் கொல்வர், காவலனாக உள்ள காதகனை!''

"சொல்லடியை நாம் தாங்கவேண்டுமே! ஊர் மக்கள் இழித்தும் பழித்தும் பேசுவாரே...''

"ஆமாம்... அதைக் கேட்டுச் சகிக்க முடியாதே... ஆத்திரப்பட்டு பயன் இல்லை! ஆனால் என் அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டிய அக்ரமக்காரனைச் சும்மா விடுவது இல்லை—ஆமாம் என்னம்மா, என் ஐயா அப்பா......என்ன''

"வலியா?''

"பாப மூட்டையைச் சுமக்கிறேன்.''

"பரமேஸ்வரா! ஏனோடாப்பா இந்தச் சோதனை? நான் செய்த பாபம் என்னவோ! தேவி! தேவி!

இதற்குமேல் தந்தையும் மகளும் என்ன பேச முடியும்!

அவர் தலை தலையென்று அடித்துக்கொண்டு அழுதார். நான் என்ன கூறிச் சமாதானப்படுத்துவேன்!

நான் துணிந்துவிட்டேன்—இனி நான் வாழமுடியாதவள்—என் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போய்விட்டது. ஆனால், என் உயிரைப் போக்கிக் கொள்ளவா முடியாது!

மானம் போயிற்று. பறித்தவனோ மன்னன்! மணம் செய்துகொள், என்று வற்புறுத்தலாம், மக்களிடம் முறையிடலாம், அந்தப்புரத்தில் போய்ச் சேரலாம், ஆனால் அப்பாவோ சாஸ்திர விரோதம் என்கிறார். ஆகவே நான் இனி பிழைத்திருக்க முடியாது. செத்தாக வேண்டும். குடும்பத்துக்கு இழிவைத் தராதிருக்க வேண்டுமானால், சாகத்தான் வேண்டும்.

அப்பாவிடம் வாதாடினேன்—திருமணத்துக்கு மன்னன் எப்படியும் ஒப்புக்கொள்வாரப்பா, என்று கெஞ்சினேன் அவர் வெந்தபுண்ணிலே வேலைச் சொருகாதேடி என்று கொக்கரித்தார். பெண்ணின் வாழ்வு பெரிதா, சாஸ்திரசம்பிரதாயம் பெரிதா என்றுகேட்கத் துடித்தேன். நான் அழுகிய பழம், அப்பாவுக்கு அந்த நாற்றம் குடையும் போது நான் 'வாதாடுவது' வேதனையாகத்தானே இருக்கும். ஆகவே சாவு தவிர வேறு மார்க்கம் இல்லை. ஆமாம், நான் சாகத்தான் வேண்டும். விஷம்! சாவு!! வேறு வழியில்லை!!!

(சந்திரசேகர பட்டர்)

என் மகள் மாண்டுபோனாள்—அந்த இரகசியமும் அவளோடு, மண்ணோடு மண்ணாகப் புதைந்துபோய்விட்டது. ஆனால் என் மனம்! நான் கோயில் அர்ச்சகன், என்மூலம்தான் எண்ணற்றவர்கள் தேவியின் அருளைப் பெறுகிறார்கள்,

தேவி எனக்கு அளித்தது?......ஊரெல்லாம்தான் புகழ்ந்தது...? சுந்தரியின் அழகை! மன்னன் காட்டிய பரிவு பலருக்கு பொறாமைத் தீயைக்கூட மூட்டிவிட்டது, அந்தப்பாவி, என் மகளைக் கொன்றான். மாரடைப்பு—ஊராருக்குக் கூறினேன்; ஆனால் என் உள்ளம் அறியுமே! விஷமருந்திச் செத்தாள் என்மகள்! பாதகன், என்ன காரியம் செய்துவிட்டான்! சபலம், ஆமாம், நடந்தது நடந்துவிட்டது. என்னையுமறியாமல் நேரிட்டுவிட்டது, அவள் அழகு என் அறிவை அழித்துவிட்டது. அந்தணரே! இனி அதுபற்றிப் பேசிப் பய

னில்லை. நிலைமையை, நெஞ்சிலே கபடமின்றிக் கூறிவிட்டேன். நீர் மதியூகி! வேறென்ன சொல்ல — அவ்வளவுதான் — இப்படிப் பேசினான், என் மகளை இரைகொண்ட காமாந்தகாரன்.

அவளைத் திருமணம்செய்துகொள்வானாம், கைவிடமாட்டானாம் — வேறு ஏதாகிலும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றாலும் தயாராம்! இந்த மண்டலத்திலேயும், எந்த மண்டலத்திலேயும், எனக்குப் பெரும் பழியைத் தேடிக்கொள்வதா! எப்படிச் சம்மதிக்க முடியும் திருமணத்திற்கு.

சுந்தரியும் திருமணம், திருமணம் என்று வாதாடினாள். அவளுக்கு என்ன தெரியும் சாஸ்திர சம்பிரதாய மகிமையும் மேன்மையும். வேதியக்குலம் முழுவதும் என்னை வெறுக்கும் கண்டிக்கும், சபிக்கும். இதை எண்ணித்தானே, திருமணம் கூடாது என்றேன். ஒரு வேளை, சுந்தரியைத் திருமணம் செய்துகொண்டு சுகமான வாழ்வளித்து இருக்கக் கூடும் மன்னன்! தங்கப் பல்லக்கிலே செல்லும் அந்தஸ்து கிடைத்திருக்கும் மகளுக்கு.

ஆனால் நான்? சண்டாளன் என்றல்லவா தள்ளப்பட்டிருப்பேன். கேவலமாகத்தானே கருதியிருப்பார்! இதற்காகத்தான், மன்னனை சதா சர்வகாலம் வீட்டிற்கு வரவழைத்தபடி இருந்தான் போலும் என்று இழிமொழி பேசுவர், ஏற்கனவே, ஏதோ ஓர் விதமான வதந்தி பரவித்தான், வம்பளந்தார்கள் விஷமக்காரர்கள் அன்று கைலாசநாதபட்டரும் கனகசபேச பட்டரும் பேசியது ஒரு தினுசாக இருந்தது—ஏன் அவ்விதம்

பேசினர்கள் என்பது பிறகல்லவா புரிந்தது. பித்துக்குளிகள் ஏதோ பிதற்றுகிருர்கள் என்று நானே ஏமாளி எண்ணிக்கொண்டிருந்தேன், அப்போது......!

"செளக்கியந்தானே, ஸ்வாமிகளே!"

"இருக்கிறேன்—ஏன்......"

"கேட்டேன் ஸ்வாமி! லோகாசாரபடி......"

"சந்தோஷம்...வரட்டுமா',

"ஆஹா! நான் தடைசெய்ததை க்ஷமிக்கணும்—ராஜா இன்னேரம் தங்கள் தரிசனத்துக்காக தவித்துக் கொண்டிருப்பார்—போய் வாரும்"

"ஓய்! நீர், பேசுகிரதை கவனிச்சா. ஏதோ என்னைக் கேலி செய்கிற மாதிரியாகத் தோன்றுதே என்ன விஷயம்......?"

"உம்!"

"ஓய்! ஏன் பெருமூச்சு விடறேள்...."

"பட்டாச்சாரியாருக்கு என்னங்காணும் குறை! ராஜன் அவர் வீட்டு வாசல்லே, காத்திண்டிருக்கான் சதாகாலமும்"

"வேதவேதாந்தத்தின் இரகசியத்தை அறிந்து கொள்ளவேண்டுமென்ற நோக்கம்.

"ஆமாம் தேவரும் மூவரும்கூடத்தானே அந்த இரகசியத்துக்காக..."

"படாதபாடுபட்டிருந்தாளேன்னே..."

"அட ஏன் ஓய்! சும்மா, சுத்தி வளைச்சி பேசிண்டிருக்கேள் — வேதமாம் — வேதாந்தமாம் — இரகசியமாம்..."

"ஓய்! நீர் ஏன் இவ்வளவு கோபிக்கிறீர்?"

"ஒன்றுமில்லே, ஸ்வாமிகளே! புறப்படும், புறப்படும்...ராஜா, கோபிக்கப்போகிருர்..."

"கோபிக்கமாட்டார் ஓய்! பட்டாச்சாரியார், ஆத்துக்குப் போகிறபோது வழியிலே பேசிண்டிருந்தாளே, தாமதமாச்சின்னு தெரிஞ்சா உமக்கு ராஜா சன்மானம் செய்வார் ஓய்! பிரதி தினமும்,இந்தக் கைங்கர்யத்தைச் செய்திண்டிரும்னுகூடச் சொல்வார்"

"ஓய் என்ன இது—குறும்பு போக்கிரித்தனம்—என்ன பேசறேள்—ஏதோ பூடகமாக இருக்கு"

"ஒன்னுமில்லே ஸ்வாமி! இவன் ஒரு வயத்தெரிச்சல் பிடித்த ஆசாமியேன்னு?......உமக்கு 'ராஜகிருபை கிடைத்திருப்பதாலே பொருமைகொண்டு பேசருன்"

"ராஜக்ருபை, பட்டாச்சாரி ஸ்வாமிகளோட ஜாதகப்பலன் அல்ல, குமாரி, சுந்தரியின் ஜாதகபலன் தந்ததாக்கும் இந்தக் கிருபை"

இப்படி எல்லாம் பேசினுளே, பட்டர் கூட்டம் அதை எல்லாம் எண்ணிக் கொண்டா என் மனம் படுகிறபாடு, அடா அடா! சர்வேஸ்வரா! மகளை இழந்தேன்—செல்லத்தை இழந்தேன். மானம் போகாதிருப்பதற்குக் காரணம், விஷயத்தை வெளியே பேசாமல் 'நம்மவா' இருப்பதாலேதான்—அவள் மாண்டு போனதும் ஒரு விதத்திலே நல்லதுதான்...இருந்தால் என்ன நிலே என்ன ஆகும். மீனுட்சி கோயில் பட்டருக்கு, மகள் மாரடைப்பால் இறந்து விட்டதாலே மனக்கவலே என்று பலரும் பேசுகிருர்கள். அவனே! நடந்தது நடந்து விட்டது! நாடாள்பவனல்லவா...தைரியமாக...

அலட்சியமாக...ஆணவமாகக் கூறுகிறான், நடந்து விட்டது இனி நடக்க வேண்டியது ஒன்றுமே இல்லை, என்பது அவன் நினைப்பு...யார் என்ன செய்ய முடியும் என்ற அகம்பாவம்...ஆமாம் நம்மால் என்ன செய்ய முடிந்தது...இதுவரையில் அவனைக் காணும் போது கடும் கோபம் பிறக்கிறது...பிறந்தது பழிபாவத்துக்கு அஞ்சாத பாவி, கெம்பீரமாக உலவுகிறான். ஊரில், கோலாகலமாக கொலுநடத்துகிறான்—அந்தப்புரத்திலே மாதர்களின் கூட்டம் இருப்பது கேட்டு மக்கள் ஒரு விதமாகப் பேசுகிறார்கள் என்று சொன்னால் அவன் வாய்க் கொழுப்பு—ஏன் பட்டரே! மகளுக்கு ராமாயணம் தெரியாதே! அவருடைய அந்தஸ்துக்கு அவர் அறுபதினாயிரம் கொண்டார்—ஏதோ சக்தியாசாரம் நமக்கு என்ற கூறக்கூடாதோ, என்று கேலி பேசுகிறான்...கோமதியாளன்.

சுந்தரி ஒரு ராஜ குமாரியா? அவள் சார்பாக ரதகஜதுரக பதாதிகள் கிளம்ப. அல்லது, நான் படிக்கும் புண்ய கதைகளிலே கூறப்படுவதுபோல, சபிக்கக்கூடிய காலமா் இது—கல்லாய்ப்போக, என்று சாபம் கொடுக்க...என்ன செய்வது எரியும் கொப்பரைபோலுள்ள என் மனதுக்கு, எப்போதுதான் சாந்தி கிடைக்கும்...மன்னனை மாபாவி என்று கூற மனம் துடிக்கிறது. உண்மையைக் கூறவோ முடியவில்லை—மானம் தடுக்கிறது—பழிவாங்கியாக வேண்டும்—ஆனால், எப்படி, எப்படி...! ஆமாம், லிங்கண்ணாவைத்தான் கருவியாக்க வேண்டும்.

லிங்கண்ணா! என் மகள், மாரடைப்பால் சாகவில்லை. மாபாவி செய்த அக்ரமத்தால் இறந்தாள், என்று

சொன்னால்....சேச்சே! சொல்லக்கூடாது கேவலமாகக் கருதுவான். லிங்கண்ணாவுக்கு மன்னன் மீது கோபம் இருக்கிறது, நிரம்ப. அவனை ஏவி விட்டால், மன்னனை ஒழிக்கலாம். மன்னனை ஒழிக்காமுன்பு என் மனமோ சாந்தி அடையாது. கோயில் பட்டாச்சாரிக்கு மன்னன் மீது கோபம் பிறக்கவிடக்கூடாது. என்ன செய்யலாம்? எதையாவது செய்தாகவேண்டும்! பாம்பாகி அவனைப் பிடிக்கவேண்டும். எப்படி? திருமலையைத் தீர்த்துக் கட்டியாக வேண்டும்—காரணம் வெளியே தெரியக் கூடாது. லிங்கண்ணாவும் அறிந்துகொள்ளக் கூடாது. லிங்கண்ணாவின் மனதை அறிந்து; தூபமிட வேண்டும் மன்னன் மதியிலி! என் மகளின் மரணத்துக்குப் பிறகு நான் பழைய சம்பவத்தை மறந்தேபோனேன் என்று எண்ணிவிட்டான். என் மனதிலே மூண்ட தீ, அணையக் கூடாதா நானே பக்குவமாகத்தான் நடந்துகொள்கிறேன்-அவனை நேரடியாக எதிர்த்து ஒழிக்க முடியாது. மாமரத்தின் பின்புறமிருந்துதான் இந்த வாலியைக் கொன்றாகவேண்டும், சமையம் வாய்க்கவேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யோசனை உதயமாகிறது. ஆனால் மறுநாள், அது பைத்தியக்கார யோசனை என்று புரிகிறது—தெளிவு பிறக்கவில்லை. சுந்தரியின் உருவம் நித்த நித்தம் என் முன் தெரிகிறது. அப்பா! ஆகமம் சாஸ்திரம் என்றீர், இல்லையானால், நான் அந்தப்புரம் சென்று சுகப்பட்டு இருக்கும் என்று அழுகுரலில் கூறுகிறது அந்த உருவம். எப்படிச் சம்மதிக்க முடியும் அவள் சொன்ன நீச ஏற்பாட்டுக்கு. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பட்டாச்சாரியே வர்ணாஸ்ரம விதியை சாதன தர்மத்தை, சாஸ்திர சம்பிரதாயத்தை, மீறி

நடந்தால், பிறகு நமது குலப் பெருமை மதமகிமை நிர்மூலமாகிப் போகுமே ஏற்கனவே, கிறிஸ்தவப் பாதிரிகள், மக்கள் மனதை மயக்கிவிடுகிறார்கள்! என் மகளை நான் 'ஜாதிகெட' விட்டிருந்தால், போதுமே மதமே மாண்டுபோகும்! தேவி கோயிலிலிருந்து துரத்தப்பட்டுமிருப்பேன். ஆமாம், அவள் செத்தாள் — வேறு வழி கிடையாது. ஆனால் இவன் — இவனைத் தொலைக்கவேண்டும்! எப்படி? அதுதானே இன்னும்னும் புரியவில்லை. மன்னன் நாஸ்திகனாக வருகிறான். தேவியை மறந்துவிட்டான். புராதன மார்க்கத்தைப் பழிக்கிறான் என்பதை மெள்ள, மெள்ளப் பலரிடம் கூறிவருகிறேன், பரவுகிறது இந்தச் சேதி மக்கள் மனம் பதருகிறது! இது நல்ல சுபசகுனம்! ஏன்! அந்தப்புர மாதர்கள்கூட, என் தூபத்தால் மன்னனுக்கு விரோதமாகக் கிளம்பத் தயாராகிவிட்டனர், அதனால்தானே, அந்தப் புரத்திலேயே அரசனைக் குத்திக் கொல்ல ஏற்பாடு செய்தேன்—அரசனின் அபிமான ஸ்திரீகளும் சம்மதித்தனர்—அந்த மடையர்களால் முடியவில்லை. மன்னனைக் கொல்ல—வேறு ஏற்பாடுகள் செய்தாகவேண்டும் — அதுவும் லிங்கண்ணா மூலமாகத்தான்! பார்ப்போம். பழிவாங்காது விடக்கூடாது—முடியாதுபோனால் இப்புவியேது!......எப்புவியிலும் நம்மவர் போட்ட திட்டம் தோற்றது கிடையாது. மதுரை மண்டலத்திலே மட்டும், நமது முறை தோற்றுபோகும். இல்லை, இல்லை, வெற்றி கிட்டும், லிங்கண்ணா வெறி கொண்டவனாகவே காணப்படுகிறான். ஒரு நல்ல திட்டம் தயாரித்துக்கொண்டு, அவன் உதவியை தேடினால் வெற்றிதான். திட்டம் வேண்டும்—திட்டம் வேண்டும்,

[லிங்கண்ணா]

மோசமாகிவிட்டது, மன்னன் போக்கு. இந்த கிறிஸ்தவ பாதிரிகளுக்கு இப்படியா இடம் தருவது? மதுரை கொந்தளிக்கிறது, மன்னன் ஏதும் நேரிடாது என்று இநக்கிறான், யமதையுடன், என்னிடம் துளியாவது மதிப்பு இருக்கிறதா. என்ன செய்துவிட முடியும் என்ற தைரியம்.

ராஜ சபையிலேயே நம்மையெல்லாம் அலட்சியப்படுத்துகிறான். எவ்வளவு தைரியமாக மத விஷயத்தைக் கண்டிருக்கிறான் இந்த மண்டலத்திலும், வேறு மண்டலங்களிலும் மறையவர்களிடம் மன்னர்கள் பயபக்தி விசுவாசத்துடன் நடந்துக்கொள்கிறார்கள். திருமலை மட்டும்தானே தர்க்கிக்கிறான், தர்க்கிப்பது மட்டுமா...... அன்று ஒருநாள், சந்திரசேகர பட்டரிடம் சில புதிய கேள்விகள் பாதிரி தயாரித்தார்கள். படிக்கிறேன், கேளுங்கள்-பட்டரே! பதில் கூற முடியுமானால் நல்லது, கவனமாகக் கேட்கவேண்டும் என்று கூறி, என் எதிரிலேயே அந்தப் பிராமணனை எவ்வளவு கேவலப்படுத்திவிட்டான் மதத்தையும் பழித்தான்.

"ஓய்! பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவர் கடவுளே தானே!"

"ஆமாம்......சந்தேகமென்ன....வேதப் பிரமாணாதிகள் அதைத்தான் வலியுறுத்துகின்றன......உபநிஷத்தும்......"

"போதுமய்யா...நான்தான் ஒப்புக்கொள்கிறேனே ஒப்புக்கொள்ளும் விஷயத்துக்கு ஓராயிரம் ஆதாரம் ஏன்?"

பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தான் கடவுள்...உம்மையும் என்னையும் — ஊராள்வோனையும் உழவனையும் ஈ எறும்பு முதலான எண்பத்தி நான்கு கோடி ஜீவராசிகளையும் சிருஷ்டித்தான்..."

"சிருஷ்டித்தான் அல்லவா? இதிலே மக்கள் ஆண்டவனின் குழந்தைகள் தானே"

"ஆமாம்"

"அப்படி இருக்க, இதில் உயர்ந்த ஜாதி தாழ்த்த ஜாதி என்று பேதம் ஏன்?"

"அது சாஸ்திரம்"

சாஸ்திரம் சர்வேஸ்வரனுடைய வேலையைக் கெடுப்பதா சாஸ்திரத்தின் இலட்சணம்"

"இல்லை"

"என்ன, இல்லை... இல்லை... நாலு ஜாதிக்கு என்ன காரணம் கூறுகிறார்கள்..."

"பிரம்மனின் முகத்தில்..."

முகத்திலே, தோளிலே, தொடையிலே, பாதத்திலே, இப்படிக் கூறுகிறார்களே, அது இந்த நாட்டுக்கு மட்டும் இருக்கிறது தவிர உலகிலே மற்ற நாடுகளிலே இல்லையே ஏன்?

"தெரியவில்லை."

விசாரிக்கப்படாதோ...

"யாரை"

"விஷயம்....தெரிந்தவர்களை" என்று பேசிவிட்டு ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்தபோது, எனக்கு வந்த கோபம், கட்டாரி மீதே கை சென்றது; ஊர் மக்கள்

இவனை ஒழித்துக் கட்டுபவர்களை வாழ்த்துவார்கள் அவ்வளவு வெறுப்பு வேந்தனிடம், யாரும் தன்னை ஏதும் செய்துவிட முடியாதா! நான் என்ன மரமா! வாள் ஏந்தி அறியாதவனா! இந்த மண்டலத்தையே ஆளும் வல்லமை உண்டு எனக்கு! ஆள நினைத்தால் தான் என்ன தவறு! அன்னியருக்கு இடமளிக்கும் இந்த மன்னனை ஒழித்து விட்டு, நானே மன்னனானால் ஒரு தவறும் இல்லை. பதவி ஆசை என்பார்கள்--ராஜ துரோகம் என்று சிலர் தூற்றுவார்கள். ஆனால், மக்களுடைய மனம் எனக்குத் தெரியும் நான்தான் மாபாவியை ஒழித்தேன் என்று தைரியமாகக் கூறி விடலாம். ஆனால் அவ்வளவு வெளிப்படையாகச் செய்வது ஒரு வேளை ஆபத்திலே கொண்டு போய்ச் சேர்க்கக்கூடும். வேறு விதமாகத்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல வேளையாக இந்த பட்டர் கிடைத்து இருக்கிறார். பாவம் வெளியே சொல்ல முடியாத வேதனை அந்த ஆசாமிக்கு. இந்த நிலையில் உள்ளவரைத்தான் தக்க கருவியாகக் கொள்ள வேண்டும். அவருக்கு உள்ள வேதனையின் காரணத்தை அறிந்ததாகக் காட்டிக்கொள்ளக் கூடாது. அன்று மெள்ள ஒத்திகை பார்த்தேன்—நேர்த்தியாகவே இருந்தது, பட்டரின் ஒத்தாசை நிச்சயம் கிடைக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை. மக்கள் ஏதாகிலும் சந்தேகப் பட்டாலும் பட்டர் அவர்களைச் சரிப்படுத்தி விடுவார்! அவர் என்ன சாமான்யமானவரா? தேவி சன்னதியில் பட்டாச்சாரியார்—அவர் வாக்கு சத்திய வாக்கு என்றுதான் யாரும் எண்ணுவார்கள்.

"மன்னனுக்கு மதி கூறுவதை விட, மணலைக் கயி ராகத் திருத்தி விடலாம் போலிருக்கு, மறையவரே! விதண்டாவாதம், பேசுவதெல்லாம்; செய்வது, மகா மோசமான மட்டரகமான காரியம்..."

"மன்னன்!—ராஜா...!"

"மரப் பொம்மைகளா மக்கள்?"

"மன்னன் என்ருல், எதுவும் செய்யலாம் என்ரு எண்ணுவார்கள்? அந்தக் காலம் மலையேறிவிட்டது."

"மதுரையிலா?"

"ஏன்? இங்கு, மாவீரர் இல்லை என்று எண்ணு கிறீரா?"

"லிங்கண்ணு! வீரருக்கு இங்கு என்னகுறை உமது வீரதீர பராக்கிரமத்தை நான் அறியமாட்டேனு?"

ஆனுல்..."

"ஆனுல் என்று இழுக்கக் காரணம் அந்தணரே! என்ன கூறும். ராஜவிஸ்வாசம் பலமான பாச மல்லவா?"

"ஆமாம்—ஆனுல் ராஜபதவி மிகவும் பொறுப் பானது. அல்லவா?"

"ஆமாம்—தடை என்ன—தர்மசாஸ்திரம் தவரு மல் நடப்பதுதான் ராஜதர்மம்..."

"தவறினுல்..."

"ஆண்டவன் தண்டிப்பார். .ஆண்டவன் அதற் காகத்தான் மக்களுக்கு அறிவையும் ஆற்றலையும் தந் திருக்கிருர்—கடிக்கவரும் பாம்பை எல்லாம் ஆண்டவன் துரத்திக்கொண்டு வந்து அடிக்கவேண்டுமா—நாம் என்ன மண்ணுங்கட்டிகளா?"

"ஏது? லிங்கண்ணு, புரட்சிப் பொறி வீசுகிறது, உன் பேச்சில்"

"பட்டரே! மன்னரிடம் கூறிவிடும்—லிங்கண்ணு உமது நடத்தையைப் பலமாகக் கண்டிக்கிருன்—மக்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்—அக்ரமத்தைச் சகிக்கமாட் டார்கள், என்று கூறிவிடும்"

"நானு..."

"ஏன்? வேறு யார் கூறுவது? உமக்குத் தெரிய வில்லையா, மன்னன் நமது புராதன மார்க்கத்தையே நாசமாக்கத் துணிகிருன். பரங்கிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு......"

"தெரியும்—மனம் வேகிறது அந்த மாபாவி செய் யும் காரியத்தை நினைத்தால்....." என்றல்லவா பேசினுர். பட்டாச்சாரியாருக்கு மனம் எரிமலையாகிக் கிடக்கிறது அந்த நெருப்புக் குழம்பிலே தள்ளிப் பொசுக்கிவிடலாம் மன்னனை. சரியான சமயம் வாய்க்கவேண்டும். திட் டம் தீட்டியபடித்தான் இருப்பார் பட்டாச்சாரி, பழி

வாங்கித் தீரவேண்டும் என்ற எண்ணம் அணையா தீயாக இருக்கிறது அவர் மனதில்.

திருமலை

பணம் இல்லாமல், எவ்வளவு திட்டங்கள் பாழாகி விடுகின்றன, நானும் கொஞ்சம் வீண் செலவு செய்து விட்டிருக்கிறேன். அந்தப்புரத்திலே மட்டும், தேவிமார் முன்னூறு—பரிவாரம் பலநூறு—பொன் பாழாகிறது. இவ்வளவு அழகிகளும், என் சுந்தரவல்லி யின் கால் தூசுக்கு இணையாகமாட்டார்கள்! அந்த பொற்கொடியைப் பெற அரும்பாடுபட்டேன்—பெற் றேன்—ஆனால் நிரந்தர விருந்தாகவில்லை. பழைய போதை இந்தப் பட்டாச்சாரிக்கு. பாதிரிமார்கள்தான் பட்ட வர்த்தனமாகக் கூறினார்களே, வைதீக வெறி, லேசில் போகாது என்று. எவ்வளவு வாதாடினேன், சுந்தரியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டு மென்று, பிரளயம் வந்து விடும் என்று பீதி கொண் டான். அவள் அழுதபோதெல்லாம் அஞ்சியபோதெல் லாம் தைரியம் சொன்னேன். உன்னை என் தேவியாக் கிக் கொள்கிறேனென்று சிலநாட்களில் இந்த பட்டாச் சாரியின் பித்தம் தெளிந்துவிடும், திருமணத்துக்குச் சம்மதிப்பான் என்று எண்ணினேன். அதற்காகவே, பழைய சாஸ்திர சம்பிரதாயங்களிலே உள்ள அர்த்த மற்ற, பொருத்தமற்ற விஷயங்களை எல்லாம், பட்டாச் சாரியிடம் கூறினேன்—வேடிக்கையாகப் பேசுவது போல, எற்தகும் அசையவில்லை.

பாபம்! சுந்தரி திடீரென்று மாண்டுபோனாள். மார டைப்பு என்று புரளுகிறான். இருக்காது. தற்கொலை

யாகத்தான் இருக்கவேண்டும் பேதைப் பெண் பீதி கொண்டுவிட்டாள். பட்டாச்சாரி, அவள் செத்த தோடு, சம்பவத்தையே மறந்து விட்டான். மகள் செத்துகூட அவனுக்கு வருத்தமளிக்க வில்லை, ஜாதி கெடவில்லையென்று மகிழ்கிறான். 'எல்லாம்விதி' என்ற ஆறுதல்! என்மீது கோபம்கூட இல்லை- மகாராஜா வைக் கருவியாக்கி பிரமன் தன் வேலையை முடித்துக் கொண்டான் என்று கூறி மனச்சாந்தி தேடிக்கொண் டான் மடையன். ஆனால் 'ராஜபக்தி' அபாரம் அவ னுக்கு. இல்லாமலா, நான் பணமின்றி திண்டாடுவது தெரிந்து, தேவி சன்னதியில் உள்ள இரகசிய சுரங்கத் திலே, பெரும் பொற்குவியல் பேழைகளில் உள்ள ரகசி யத்தைக் கூறினான். பரம்பரை பரம்பரையாகச் சேர்க்கப் பட்ட பொன்! நல்ல சமையத்திலே உதவுகிறது. இன் றிரவு நடுநிசிப் பூசையின்போது சென்று, எடுத்து வர வேண்டும். பட்டாச்சாரி நமக்காகக் காத்துக்கொண் டிருப்பான். எத்தனை பேழைகளோ! எவ்வளவு பொற் குவியலோ!

சந்திரசேகரபட்டர்

நடுநிசி! பக்தகோடிகளெல்லாம் போய்விட்டார்கள். பேராசைக்காரன், காமாந்தக்காரன், என் மகளைக் கெடுத் துச் சாகடித்த காதகன் வரப்போகிறான். பேழைகள் எத்தனை! பொற்குவியல் எந்த அளவு இருக்கும் என் றல்லவா கேட்டான்.' வா! வா! சந்திரசேகரன் கட்டிய சமாதி தயாராக இருக்கிறது. இதோ லிங்கண்ணவும் வீரர்களும், எனக்குத் துணையாக வந்துள்ளனர். புல்லே

தும் கரம்தான், ஆனல் இன்று. உன் உயிரைப் போக்கும் வலிமை இதற்கு!! வேதனை, கோபம், வெட்கம், எது கிளம்பினல்தான் என்ன, மணி அடிக்கும் இவன், நம்மை என்ன செய்யமுடியும் என்று இருமாந்து கிடந்தான், இதோ சவக்குழி-தேவிக் கோயில் பட்டாச்சாரி வெட்டி இருக்கும் சவக்குழி! உள்ளே சென்று, பேழைகளைப் பார்த்து, வாய்பிளந்து நிற்கும்போது, இந்த விளக்குகள் அணைக்கப்படும்! இருள் சூழ்ந்து கொள்ளும். பிறகு, இந்தப் பெரும்பாறை-லிங்கண்ணு பலசாலி இருவரும் சேர்ந்து சுரங்க வழியை இதனல் அடைத்துவிடவேண்டும்—உயிரோடு சமாதி — காற்று கிடையாது-பாறைக் கதவு-தட்டிப் பயனில்லை-நெட்டித் தள்ளி பயனில்லை-உயிர் ஊசலாடும்-சித்திரவதை-அணு அணுவாக உயிர் கத்தரிக்கப்படும். பிணமாவான் பேயன்! லிங்கண்ணு, இதைத் தர்ம கைங்கரியம் என்றே எண்ணுகிருன். மதத்தைக் காப்பாற்ற, மன்னனுனுலும் அருமை மைந்தனுனுலும், தாய் தகப்பனுனுலும், யாராக இருந்தாலும், கொல்வது, புண்ய காரியம் என்றேன்-ஆமாம் என்ருன். சொல்லாமலிருப்பான, சாஸ்திரம் அறிந்தவனுயிற்றே! நான் எதற்காகப் பழிதீர்த்துக் கொள்கிறேன் என்பது, நல்லவேளை, லிங்கண்ணுவுக்குத் தெரியாது. என் திட்டத்தை மெச்சினன். ஆமாம், அதோ மன்னன்-தேவி! உனக்குப்பலி, நரபலி! சுந்தரி, உன் தந்தை சாமான்யனல்ல-இதோ பார், வருகிருன், சாக்.

மதுரை பக்தர்கள்

காலம் கலியானுலென்ன, அற்புதம் நடவாமலா போகும். நேற்று நடு ஜாமப் பூஜையின்போது. நமது

மன்னன் திருமலே, தேவியோடு ஐக்கியமாகிவிட்டாராம், தேவியின் மகிமையே! மகிமை! திருமலேக்குக் கிடைத்த 'முக்தி'யே முக்தி, தேவியைத் தரிசித்தபடி நின்ருராம் மன்னன்-நெடுநேரம். பட்டாச்சாரியார்கூட ஆச்சர்யப்பட்டாராம், பாதிரிகள் சவகாசத்தால், மன்னனுக்கு மத நம்பிக்கை குறைந்துவிட்டதாக எண்ணிக்கொண்டோமே. இவர் பக்திப் பரவசராகியல்லவா நின்ருர் என்று எண்ணி, இப்படிப்பட்ட 'பக்திமானை' பழித்தோமே, என்று வருந்தினராம். மன்னன் கண்மூடி கரம் கூப்பி, மவுனம் செய்தவண்ணம் இருக்கும்போது, பட்டாச்சாரியாரின் கண்களைப் பறித்துவிடும்படியான ஓர் ஜோதி தோன்றிற்ரும், அம்பாளிடமிருந்து. முகத்திலிருந்தா, காலிலிருந்தா என்று மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லையாம். ஜோதி தோன்றியதும், 'பக்தர்' என்று தேவியின் குரல் கேட்டதாம், 'வந்தேன்' என்ருராம் திருமலே; அவ்வளவுதான், மன்னர் ஜோதியில் கலந்துவிட்டாராம். என்ன பக்தியின் பெருமை! திருமலே நாமம் வாழ்க! திவ்யஜோதி வாழ்க! தேவியின் நாமம் வாழ்க! திவ்யஜோதியில் கலந்த திருமலேயான் திருநாமம் என்றென்றும் வாழ்க!

*

★ தமிழ் நூல் காப்பகம் ★
09302
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

திராவிட புத்தகப்பூங்கா
M. மாணிக்கம்
திருப்பூர்

கதம்பம்

C.N. அண்ணாதுரை, M.A.